Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 20

# ஈழநாடு
வார மலர்




மலர் 11— சௌமிய ஆவணி 18 ஜ: ஆகிர் 20 (3-9-69) புதன்கிழமை இதழ் 203

# வடக்கு குடியேற்ற திட்டத்தில் விலையுயர்ந்த லோகப் பொருள்

## கண்ணாடி, பீங்கான் செய்ய உதவும்
### நிலவியல் ஆராய்ச்சியாளர் தகவல்

— காரியாலய நிருபர் 'திரு' —


வடபகுதியிலுள்ள முழங்காவில் என்ற குடியேற்றத் திட்டத்தில் 'இல்மனைட்' என்ற விலையுயர்ந்த உலோகப் பொருள் பொதிந்து கிடப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இலங்கை நிலவியல் ஆராய்ச்சி நிபுணர்களும், பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர் திரு. கே. குலரத்தினமும், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எப். சி. பீட்டர்ஸ்ஸுக்கு இத்தகவலை அறிவித்துள்ளனர்.

இப்பகுதி மண்ணில் ஏற்பட்ட மாற்றம் சம்பந்தமாகவும், மலை ஏற்றத்தில் காணப்பட்ட மண் 'குழம்பு' சம்பந்தமாகவும் இப்பகுதிக்கு விஜயம் செய்த அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸும், உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளையும் எடுத்த சில துரித முயற்சிகளைத் தொடர்ந்தே இக் கண்டுபிடிப்பு நடைபெற்றுள்ளது.

முழங்காவிலில் போதியளவு 'இல்மனைட்' கிடைக்குமானால் பீங்கான், கண்ணாடித் தொழிற்சாலையை வடக்கில் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பகுதியில் எவ்வளவு விஸ்தீரணத்தில் 'இல்மனைட்' இருக்கின்றதென்பதை அளவிடும் செயல்கள் இம்மாதம் 7ந் திகதி நடைபெறவிருக்கின்றது.

இப்பகுதி மண்ணைப் பரிசோதனை செய்த நிலவியல் ஆராய்ச்சி நிபுணர்கள் இதில 76 வீதம் 'இலமனைட்' தாதுப்பொருள் இருப்பதாகவும் மிகுதி 24 வீதத்தில் வேறு தாதுப் பொருட்கள் காணப்படுவதாகவும் அறிவித்துள்ளனர். 'இல்மனைட்' இலங்கையின் ஏற்றுமதிப் பொருளில் ஒன்றாக இப்போது இருந்து வருகின்றது.

திருமலைப் பகுதியில் புல்மோட்டையிலுள்ள 'இல்மனைட்' டை மூலப்பொருளாகக் கொண்டு அங்கு கண்ணாடித் தொழிற்சாலையொன்று இயங்கிவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



சந்திரனை விட்டு மனிதன் வந்த பின்பும் அது பற்றிய தகவல்களை உலகுக்கு அறிவிப்பதற்கான கருவியை (லேகர்) சந்திரத்தரையில் வைத்த போது எடுக்கப்பட்ட படம் இது வரலாற்றுப் புகழ் மிக்க சந்திரப் பயணத்துக்கு உதவிய 'ஈகிள்' வாகனம் பக்கத்தில் நிற்கிறது.

## "பாடசாலை வசதி கட்டணத்தில் சம்பளம் வழங்க முடியாது"
### கல்வி இலாகா அறிவிப்பு

பருத்தித்துறை, செவ். "மாணவரிடமிருந்து காலத்துக்குக்காலம் வசூலிக்கப்படும் சேவை வசதிக்கட்டணத்திலிருந்து எந்தப்பாடசாலை ஊழியருக்கும் சம்பளம் வழங்கப்படக்கூடாது. அவ்வாறு ஓர் அதிபர் சம்பளம் வழங்கினால், அவருடைய சம்பளத்திலிருந்து அப்பணம் அறவிடப்படும்" என்று கல்விப்பகுதி சகல பாடசாலை அதிபர்களுக்கும் ஒரு சுற்றறிக்கை விடுத்துள்ளது.

இதன்விளைவாக நிரந்தர ஆசிரியர் அல்லாத ஆசிரியர்கள் பதவியிழக்க வேண்டிய நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. சிலபாடசாலைகளில் இடமாற்றம் செய்யப்பட்டு பல மாதக்கணக்காக நிரப்பப்படாமல் காலியாக இருக்கும் இடங்களில், மிகக் குறைந்த சம்பளத்தில் பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் ஆசிரியர்களை நியமித்திருந்தால் அவர்கள் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்லமாட்டார்களெனத் தெரிகிறது. இதனால் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர் பெரிதும் பாதிக்கப்படுவரெனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

## பட்டோடி நவாப் காப்டன்

பூனா, செப். 2
நியூசிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும் பாரத கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெறவிருக்கும் கிரிக்கெட் டெஸ்ட்ஆட்டங்களில் பாரதகோஷ்டிக்கு 28 வயதான பட்டோடி நவாப் காப்டனாக இருப்பார்.

முதல்டெஸ்ட் இம்மாதம் 24-ம் திகதி ஆமதாபாத்தில் ஆரம்பமாகிறது. நாகபுரி, ஹைதராபாத் ஆகிய இடங்களிலும் டெஸ்ட் ஆட்டங்கள் நடைபெறும்.

பட்டோடி 21 வயதில் பாரதகோஷ்டிக்கு தலைமை வகிக்க ஆரம்பித்தார் [illegible]

## விஞ்ஞானிகள் கருத்தரங்கு

லண்டன், செப். 2
சர்வதேச இளைஞர் விஞ்ஞான கருத்தரங்கு ஒன்று அண்மையில் லண்டனில் நடைபெற்றது. இரு வாரங்கள் வரை நடைபெற்ற இக் கருத்தரங்கில் 20 நாடுகளைச் சேர்ந்த 250 விஞ்ஞான மாணவர்கள் பங்குபற்றினர். "மனிதனும் அவன் சூழலும்" என்ற பொருள் பற்றியே இக்கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

லண்டன் சர்வகலாசாலையில் நடைபெற்ற இக்கருத்தரங்கை பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானியாகிய ரொட் பிரபு ஆரம்பித்து வைத்தார். இந்தவிஞ்ஞானமாணவர்கள் சொற்பொழிவுகள், விவாதங்களில் பங்குபற்றியதுடன் லண்டனிலுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், மற்றும் கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கும் விஜயம் செய்தனர்.

## பஸ்கொள்ளையைதொடர்ந்து புதிய பொலிஸ் நிலையங்கள்

— நமது நல்லூர் நிருபர் —
மாங்குளம் நெடுங்கேணி, முருங்கன் அல்லது செட்டிகுளம் ஆகிய இடங்களில் புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான அறிவித்தல் ஒன்றை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அனுப்பியுள்ளார்.

சென்றவாரம் யாழ்-மட்டக்களப்பு பாதையில் நடைபெற்ற இ போ ச பஸ் கொள்ளையைத் தொடர்ந்தே இந்தப் புதியபொலிஸ் நிலையங்கள் இப்பகுதிகளில் திறக்கப்படவுள்ளன. இப்பகுதிகளில் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டிய அவசியம்பற்றி அநுராதபுரம். யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டன்கள் ஐ பி யுடன் தொடர்புகொண்டு விளக்கியிருந்தனர். இப்பகுதியில் குற்றம் அதிகரிப்பதைத் தொடர்ந்தும் இவ்விதநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## இன்று கிருஷ்ண ஜெயந்திவிழா

யாழ்ப்பாணம், புதன்
ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி விழா வண்ணை ஸ்ரீ வரதராஜப் பெருமாள்ஆலயத்தில்இன்று நடைபெறும், மாலை 6-30 மணிமுதல் திவ்யஜீவனசங்கத்தினரின் பஜனையும் இரவு 9மணி தொடக்கம் பிரம்மஸ்ரீ சீதாராமசரஸ்திரிகளின் சொற்பொழிவும் பஜனையும், 10 மணி முதல் தெல்லியூர் மயில்வாகனஆழ்வாரது பஜனையும் சொற்பொழிவும் இடம்பெறும், இரவு 11-30-க்கு கிருஷ்ண ஜயந்தி வைபவம் நடைபெறும்.

நாளை
நாளை 5 மணி தொடக்கம் உறிஅடி உற்சவம் நிகழும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழரின் எதிர்காலம் நம் கையிலேயே உள்ளது"

## முதுபெரும் அரசியல் ஞானியின் அனுபவ யோசனைகள்

''முதலில் தமிழர்களுக்கிடையேயுள்ள பல்வேறு பிரிவினர்களுக்குள்ளும் அதிக நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கும். இலங்கையிலுள்ள மற்ற சமூகத்தவர்களான சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் இவர்களுக்குமிடையிலும் அதிகமான நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் இப்போதைக்கும் எதிர்காலத்துக்கும் அவசரமாகத்தேவைப்படுகிறது.

அவ்விதமான ஒத்துழைப்பும் நல்லெண்ணமுமே நாடனைத்துக்கும் மட்டுமன்றி தமிழ்மக்களுக்கும், பொருளாதாரம், அரசியல், ஆத்மீகம் முதலிய எல்லாத்துறைகளிலும் நன்மையைச் செய்வதாக இருக்கும்.''

இலங்கை அரசியலிலும், சமய சமூகத்தொண்டிலும் 50 வருடகாலத்துக்கு மேல் தீவிரமாக ஈடுபட்டுள்ள முதுபெரும் அரசியல் ஞானியான கொழும்பு புரக்டர் திரு. எஸ். சிவசுப்பிரமண்ய ஐயா அவர்களுக்கு சென்றவாரம் எழுபதாவது வயது பூர்த்தியாயிற்று. அவரை நமது விசேஷநிருபர் பேட்டி கண்டபோது அவர் தமிழர் உள்ளிட்டு இலங்கையின் முன்னேற்றத்துக்கான சில யோசனைகளைக் கூறுகையில் இவ்விதம் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

### நல்லெண்ணமும் ஒத்துழைப்பும்

மனித வாழ்வுக்கு அவசியம் தேவைப்படுவது, மனிதருக்குள்ளே நல்லெண்ணமும் ஒத்துழைப்புமே. சமயங்களெல்லாம் இதையே வற்புறுத்துகின்றன. கருத்து வேற்றுமைகள் இருக்கலாம் ஆனால் அவ்வித வேற்றுமைகள் நல்லெண்ணத்துக்கும் ஒத்துழைப்புக்கும் குறுக்கே நிற்கப்படாது.

இவ்வித ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் கீழ்க்கண்ட பலவழிகளிலே இருக்கச் செய்யலாம். தமிழ்மக்களும் அவர்களது தலைவர்களும் தங்களுக்குள்ளாக இருக்கும் வேற்றுமைகளைக் கூடுமான வரை குறைத்துக்கொள்ள வேண்டும். சமூகநன்மையைப் பாதுகாக்கவும், இலங்கைக்கு பணிசெய்யவும், ஆதிகாலம் தொட்டு நமதுபுனிதமான சமய, பொது இலக்கியங்களிலே பொதிந்துள்ள தமிழ் கலாசார உயரிய இலட்சியங்களை கடைப்பிடித்துப் பேணவும் இது அவசியமாகும்.

இலங்கையிலுள்ள மற்ற சமூகங்களுடனான உறவைப் பற்றியவரை சிங்களவருக்கும் தமிழருக்கும், சமயம் கலாச்சாரம், சமூக உறவு, ஒரு பொதுவான நாட்டின் பிரஜைத்துவம், நாட்டிலே வாழ்க்கையில் பல துறைகளிலும் கூட்டாகச் சேர்ந்து முயற்சித்தல் போன்று ஒருவருக்கொருவர் மிக நெருங்கியவர்களாகவுள்ளனர். அவ்வளவு நெருக்கமுள்ள தமிழரும் சிங்களவரும் நல்லமுறையில் சேர்ந்து வாழமுடியாவிடில், உலகிலே எப்பகுதியிலும் வேறெந்த சமூகத்தவரும் நட்புமுறையில் வாழமுடியாது.

### முஸ்லிம்கள்

முஸ்லிம்களைப் பொறுத்தவரை, நமக்குள் பொதுவான மொழியுண்டு. தமிழ் மொழி, நாகரிகம், கலாசாரம் இவற்றுக்கு முஸ்லிம்கள் நல்கியுள்ள பணிகளை உணர்ந்து கொள்வது நல்லது. முஸ்லிம்கள் இலங்கையிலே சிங்களப் பகுதிகள், தமிழ்ப்பகுதிகள்என்றுகூறப்படும் இடங்களிலே பரந்து வாழ்வதால், அவர்களுக்குத் தனிப்பட்ட பிரச்னைகள் உண்டு. ஆகவே தமிழ்மக்களின் கருத்துக்களை முஸ்லிம்கள் அப்படியே முழுதுமாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பது நேர்மையோ, விவேகமோ அல்ல.

பறங்கிகள் சமூகத்தைப் பொறுத்தவரை, இலங்கையின் அரசியல் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் அவர்கள் மற்ற சமுகங்களுக்குத் தலைமை தாங்கியிருந்தனரென்பதை நினைவில் வைப்பது முக்கியமாகும். தமிழர்களிலே மிகப் பெரியவர்களில் ஒருவரான சேர். பி. இராமநாதன் அவர்கள், அட்டர்ணிஜெனரலாக இருந்த ஒரு பெரிய பறங்கி கனவானுன சேர் ரிச்சர்ட் மோர்கன் அவர்களின் மாணவராக இருந்திருக்கிருா. சேர். பி. இராமநாதன், சேர். பி. அருணுசலம், சேர். முத்துக்குமாரசாமி டாக்டர் ஆனந்த குமாரசாமி போன்ற, ஈழத்துத் தமிழ் சரித்திரத்திலேயே பெரும்பதவி வகித்தவர்களின் முன்னேற்றத்துக்கு சிங்கள மக்களும் அவர்களின் தலைவர்களும் உதவியிருக்கிருர்கள் என்பதையும் மறந்துவிடக் கூடாது. அத் தலைவர்கள் தங்கள் சிறந்த தகுதிகளினுலும், தமிழ்மக்கள் மூலமும் மற்ற சமூகத்தவர்களின் அன்பான ஆதரவாலும் முன்னேறியவர்களாவர்.

### அடிக்கடி சந்திப்பு

நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் எற்படுவதற்கு ஒரு முக்கியமான வழி, தமிழ் சமூகத்தவர்களுக்கும் மற்ற சமூகத்தவர்களுக்கும், அவர்களது தலைவர்களுக்குமிடையே அடிக்கடி சமூக, அரசியல், கலாசார சந்திப்புகள் ஏற்படவேண்டும். தலைவர்கள் எனும்போது அரசியல் தலைவர்களை மட்டும் நான் கூறவில்லை. மேலும் மற்றவர்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து அதை உணரவேண்டும். உலகிலே நமக்கு ஒரு நண்பர் வேண்டுமாகில், முதலில்நாம்அவர்ஒரு நண்பராகவேண்டுமென்ற மூதுரை ஒன்று உண்டு. ஆகவே நமது முன்னேற்றத்துக்கான முதற்படி நம் கையில்தான் உள்ளது. அதாவது தமிழர்களாகிய நாம் மற்ற சமூகத்தவர்களது நல்ல நண்பர்களாக இருக்கவேண்டும். பகலுக்குப்பின் இரவும், இரவுக்குப்பின் பகலும் தொடர்ந்துவருவதுபோல், மனித உறவுகளில் இந்த நட்பு முறையைக் கைக்கொண்டால், தமிழரும் தமிழ் நாடும் பெருநன்மையடைய முடியும். நட்பு என்பது அடங்கி அண்டி பணிந்து போவதேதென்ற அர்த்தமல்ல,

தமிழரின் அரசியல் அபிலாஷையைப் பொறுத்தவரை, நமது கருத்துக்கள் எண்ணங்கள் இவற்றில் சிலவற்றையாவது இலங்கையிலுள்ள மற்ற சமூகத்தவர்கள் உணர்ந்து கொள்ள உதவக்கூடிய நல்லதோர் சூழ்நிலை ஏற்படவேண்டியது இன்றியமையாதது. வேற்றுமைக்கான விஷயங்களைப் பற்றி நமது கருத்துக்களைப் பற்றி எடுத்துக் கூறும்போது, சுமுகமான முறையிலே அவர்கள் மனதுக்குப் படும்வகையில் இனிமையான சொற்களால் விளக்க வேண்டும். பலமான கண்டனங்களும் ஈட்டி போன்ற சொற்களால் குத்திக்காட்டுவதும் பலாத்கார பாஷையும், பலாத்கார எண்ணங்களிடையே பலப்படுத்தி. பலாத்கார காரியங்களையே தூண்டிவிடுவதாக இருக்கும்.

மேலும் சிங்களவர், தமிழர்களுக்குள்ளாகவும், முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலும் ஏற்கெனவே அரசியல் விஷயமாகவுள்ள ஒற்றுமைக் கருத்துக்களைக் கண்டுபிடிப்பதுடன், தமிழருக்கும் மற்ற சமூகத்தவர்க்குமிடையே புதிய ஒற்றுமைக் கருத்துக்களை மெதுவாக உருவாக்க முற்படுவதும் விரும்பத்தக்கதாகும். தமிழருக்கும், நாட்டுக்கும், அவ்விதமான ஒற்றுமைக் கருத்துக்கள் நன்மை பயக்கும். தமிழர்கள் இல்லாமல் எப்படி எப்படி இந்நாடு வாழமுடியாதோ, அதே போல் தமிழரும் மற்ற சமூகத்தவரின் ஒத்துழைப்பும் நல்லெண்ணமுமின்றி வாழ முடியாது.

அரசியல்கட்சிகள் ஒருபுறமிருக்க, தமிழர்களின் நன்மைக்காக தொண்டாற்ற வேறுபல ஸ்தாபனங்கள் தேவையாகும். தமிழர் உள்ளிட்டு எல்லா சமூகத்தவரும் சேர்ந்து தொண்டாற்றக்கூடிய ஸ்தாபனங்களும் இருக்கவேண்டும்.

### ஹரிஜனங்கள்

தமிழர்முன்னேற்றமடைய வேண்டுமாயின், மற்ருெரு முக்கிய விஷயம் ஹரிஜன மக்களின் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டு, சமுகத்திலே மற்றவர்களுடன் அவர்களும் சரிசமமான மனித அந்தஸ்துக்கு உயர்த்தப்படவேண்டும். வாழ்க்கையிலே பல துறைகளிலும் அவர்களுக்கு சம சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். இந்த அத்தியாவசியமான தேவை பூர்த்தி செய்யப்படாவிடில் தமிழ்ச் சமூகம் தனது பூரண அந்தஸ்துக்கு உயரமுடியாது. அச்சமூகத்துக்கு நாட்டில் செல்வாக்கு இல்லாதுபோவதுடன், பொதுநன்மைக்கும் உதவ முடியாமலும், சாதாரண மனிதப் பண்பும், நன்னெறியும் அற்றவர்கள் என்ற கண்டனத்துக்கும் அவர்கள் உள்ளாகவும்வேண்டியிருக்கும்.

### மலைநாட்டுத் தமிழர்

தமிழரைப் பொறுத்தவரை பற்ருெரு முக்கிய கடமைப்பாடு உள்ளது. தமிழரில் இங்கு இரு முக்கிய பிரிவினருள்ளனர். ஒரு பகுதியினரை இலங்கைத் தமிழரென்றும், மற்ருெரு பிரிவினரை இந்தியத்தமிழரென்றும் வசதி காரணமாகக் குறிப்பிடலாம். இந்தியத் தமிழரென்பவர் மலைநாட்டிலும், மற்றப்பகுதிகளிலும் குடியேறி வசிப்பவர்கள். மலைநாட்டில் வசிக்கும் இந்தியத் தமிழருடன், இலங்கைத் தமிழ்க் கலாசாரம், சமயம், சமூகம் முதலிய விஷயங்களில் அதிக தொடர்புகள் கொள்ளலாம். இதேசமயம் இந்தியத் தமிழர் மலைநாட்டிலே சிங்கள சகோதர சகோதரிகளிடையே வசிக்கிருர்கள் என்பதை நினைவிலிருத்த வேண்டியதவசியமாகும். அப்படியான நிலையில், சிங்கள மக்களுக்கும் இந்தியத் தமிழருக்குமிடையே எவ்வித தப்பபிப்பிராயமும், விரோதமும் ஏற்படுத்தக்கூடிய எதுவும் செய்துவிடக் கூடாது இவ்விஷயத்தில் இலங்கைத்தமிழ்மக்கள் ஒரு முக்கிய விஷயத்தை கவனத்தில்வைக்கவேண்டும் தங்கள் அரசியல் பிரச்னைகளிலும் எண்ணங்களிலும் தங்களை இந்தியத் தமிழர்கள் பூரணமாக ஆதரிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படாது. ஏனெனில் இவ்விரு பிரிவுத் தமிழரின் பிரச்னைகளும் வெவ்வேருனவை.

(16-ம் பக்கம் பார்க்க)

# ஆண் மகனின் வஞ்சனையே பெண்மையின் வீழ்ச்சிக்குக் காரணம்


தேவர்களின் வேண்டுதலின்படி, தேவேந்திரன் சாபத்தையும் ஒருவாறு போக்கிவைத்தார் கௌதமர். இப்படிகதை சொல்லும் விச்வாமித்திரன், ''அந்த அழகிய அகலிகைதான் கல்லாய்க் கிடந்தாள்'' என்று கதையை முடிக்கிருன். இப்போது பெண்ணுய் நிற்கிருள். எல்லாம் உன் மகிமைதான்!'' என்பதைத்தான் எவ்வளவு ரஸமாகவும் விளையாட்டாகவும் சொல்லுகிருன் முனிவன்.

இவ்வண்ணம் நிகழ்ந்த
வண்ணம் இனி இந்த
உலகுக்கெல்லாம்
உய்வண்ணம் அன்றி, மற்
ருேர்துயர் வண்ணம்
உறுவதுண்டோ?
மைவண்ணத்(து) அரக்கி
போரில் மழை எண்
ணத்(து)அண்ணலே உன்
கைவண்ணம் அங்குக்
கண்டேன்; கால்வண்
ணம் இங்குக்கண்டேன்.

நல்லவருக்கு வந்த துரதிர்ஷ்டமும் விசேஷநல்லதிர்ஷ்டம் ஆகிவிட்டதாம். தாடகை வதத்தில் துஷ்டநிக்கிரகமாகிய ''கைவண்ணம்'' கண்டவர் அகலிகையின் சாபவிமோசனத்திலே சிஷ்டபரிபாலனமாகிய ''கால்வண்ணம் கண்டாராம். எனவே ''இனித் தீயோர் அழிவர்; நல்லோர் நலம்பெறுவர்; உலகம் உய்ந்து போகும்'' என்றெல்லாம் நம்பிக்கைகள் எழுகின்றனர் முனிவன் உள்ளத்திலே அலை அலையாக தொலை தூரத்திலே நடைபெற இருக்கும் ராவணவதத்தைக்கூட விச்வாமித்திரன் இப்போதே நடந்துவிட்டதுபோல் கனவுகண்டு குதூகலப்படுவதுபோலத் தோன்றுகிறது. இந்த அழகான பாட்டிலேதான் எத்தனை ஆழ்ந்த கருத்துக்கள், எத்தனை சப்த ஜாலங்களால் எவ்வளவு வசீகரமாக வெளிப்படுகின்றன இந்த 'மைவண்ண'மும் 'மழைவண்ண'மும்தான் எவ்வளவு சாதுர்யமாக வந்துவிழுகின்றன; வந்து விழுந்து கைவண்ணத்தையும் கால்வண்ணத்தையும்எவ்வளவுமோகனமாக எடுத்துக்காட்டுகின்றன! தாடகையும் கறுப்பு, ராமனும் கறுப்பு. எனினும் அவள அழிப்பவள்! இவன் அழிப்பவன். அந்த மைவண்ணம் ஹிம்சை, பொய், வஞ்சனை முதலியவற்றின் அறிகுறி. இந்த மழைவண்ணமோ கருணைக்கும் உண்மைக்கும் தியாகத்துக்கும் அறிகுறியாகி அந்த வானவில்லின் மோகன சௌந்தர்யத்தையும் நினைப்பூட்டுகிறது. ராமன் 'கால்வண்ண'த்தால் பண்டை வண்ணமாகி-அதாவது, பறிபூண்டதற்கு முன்பு இருந்த வண்ணமாகவே-எழுந்து உவகையோடுநின்ருளாம்அகலிகை. அவளை யாமன் அப்போதே அன்னையென்று குறிப்பிட்டான். இப்போதே அன்னை

[14-ம் பக்கம் பார்க்க]

வாசகர்கள் சுவாமி நாதத்தம்பிரானின் கம்பர் கவிவிருந்தை அவர் வாயிலாகக் கேட்பதற்கு அரியதோர் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நல்லூர்கந்தசாமி கோவில் திருவிழாவையொட்டி கம்பர் கவிவிருந்து நல்லூரில் கதாப்பிரசங்கமாக நடைபெறுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சான்றுக்கு மதிப்பளிப்பவர் ஜனாதிபதி கிரி

இலங்கையில் ஒரு காலத்தில் இந்திய தூதுவராகவிருந்த திரு. கிரி, இலங்கை மலைநாட்டுத் தமிழர்களான தொழிலாளர்கள் விஷயத்திலும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து இங்குள்ள மக்களோடும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அந்த வகையில் அவர் இன்று இந்தியாவின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றிருப்பதில் நம்மவர்கள் அதிக மகிழ்ச்சியடைவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

இந்தியாவின் புதிய ஜனாதிபதி திரு. வி. வி. கிரிக்கு இப்பொழுது எழுபத்தைந்து வயது. இந்தத்தள்ளாத வயதிலும் இந்தியாவின் மிகப்பெரிய ஒரு பதவிக்கான போட்டியில் அவர் குதித்து வெற்றி பெற்றது அவரைப் பொறுத்தவரையில் ஆச்சரியமான விஷயமல்ல. ஏனென்றுல் சிறு வயது முதற்கொண்டே அப்படிப் பழக்கப்பட்டவர் அவர்.

மனச்சான்றின் உந்துதலின்பேரில் இந்தப் போட்டியில் இறங்கியதாக அவர் கூறியிருந்தார். மனச்சான்றின் உந்துதலால் மிக உயர்ந்த பதவிக்குப் போட்டியிட்டது போலவே மனச்சான்றின் உந்துதலால் மிகப்பெரிய பதவிகளைச் துச்சமென தூக்கியெறிந்துவிட்டுப் போவதிலும் அவர் பின்தங்கியதில்லை.

காலஞ்சென்ற பாரதப் பிரதமர் நேருவிடம் திரு. கிரிக்கு நிறைய மரியாதையுண்டு. சிறந்த தலைவராகவே அவரைப் போற்றி வந்தார். அதேசமயம் தனக்குப் பிடித்தமில்லாதபோது நேருஜியோடு மாறுபடவும் அவர் தவறியதில்லை. நேரு மந்திரிசபையில் இருந்தபோது வங்கிகள் சம்பந்தமான பிரச்னையில் மனச்சான்றின் உந்துதலின் பேரில் வெளியேறினுர். ஆனுல் நேருஜியும் அவரை விடவில்லை. உத்தரப்பிரதேசம், கேரளம், மைசூர் ராஜ்யங்களில் கவர்னராக நியமித்து கிரியின் சேவையை நாட்டுக்கு நல்லபடி கிடைப்பதற்கு வழிசெய்தார்.

கிரியின் தந்தை ஒரிஸ்ஸாவில் பெர்ஹாம்பூர் நகரில் பிரபல்யமான வழக்கறிஞராகவிருந்தார். பணவசதியும் செல்வாக்கும் நிறைய இருந்தது. என்ருலும் திரு. ஜோகையா பந்துலு தன்மகனின் சொந்தப்போக்கில் தலையிடவேயில்லை மகன் நல்லபடியாகப்படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று விரும்பிய தந்தை கிரியை அயர்லாந்துக்கு அனுப்பி வைத்தார். அங்கே போன இளம் இந்தியரான கிரி அயர்லாந்தின் விடுதலைப் போராட்டங்களைப் பார்த்து உணர்ச்சிபெற்று அவைகளில் கலந்துகொண்டதால் இங்கிலாந்துக்கு நாடுகடத்தப்பட்டார். பாரிஸ்டர் பட்டத்தோடு தாயகம்திரும்பினுர் கிரி. அரசாங்கத் துறையிலும் வழக்கறிஞர் தொழிலிலும் அவருக்கு பிரகாசமான காலம் காத்திருந்தது. ஆனுல் அவைகளைத் துறந்துவிட்டு காந்திஜின் விடுதலை இயக்கத்தில் குதித்தார் கிரி. ரௌலத் சட்டத்தை எதிர்க்க காந்திஜி பொறுக்கி எடுத்த முதலாவது சத்தியாக்கிரகத் தொண்டர்படையில் கிரியும் ஒருவராய்இருந்தார். அதன் பிறகு நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் அவர் செய்த தியாகங்கள் அனந்தம்.

சட்டம் பயின்ற கிரி தமது சட்டஅறிவையும் அவ்வப்போது பயன்படுத்தாமலிருக்கவில்லை. பர்மாவில் தொழிலாளர் தலைவராக இருந்த திரு ஏ. நாராயணன் என்பவரை பிரிட்டிஷ் அரசாங்கம் சிறையில் அடைக்க எத்தனித்தபோது கிரி ரங்கூனுக்கு விரைந்தார். ரங்கூனில் துறைமுகநிறுவனத்தின் நிர்வாகிகளாகிய ஐரோப்பியர் இருவரை லஞ்சம்பெற்ருர்களென்று குற்றஞ்சாட்டியதன் காரணமாகத் திரு. நாராயணராவ் ரங்கூன் உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். திரு. கிரி தமது சட்ட அறிவைக் கொண்டு வாதாடி திரு. ராவை விடுதலையடையச் செய்தார்.

ஐரோப்பியர்களின் தொழில் நிறுவனங்களில் வேலைசெய்த தொழிலாளர்களின் இயக்கங்களில் ஈடுபட்டு பல போராட்டங்களை நடத்தி தொழிலாளர்களுக்கு உரிமைகளைப்பெற்றுக் கொடுப்பதிலும் அவர் சளைத்ததில்லை.



1937-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது செல்வாக்குபெற்ற பொப்பிலி மகாராஜாவை கிரி தோற்கடித்தது அவர் வாழ்க்கையில் இப்பொழுது ஜனதிபதி பதவிக்குபோட்டியிட்டு வெற்றிபெற்றது போலவே மறக்க முடியாத குறிப்பிடத்தக்க ஒரு சம்பவம்.

பொப்பிலி மகாராஜா அப்பொழுது ஜஸ்டிஸ்கட்சியின் தலைவராகவும் சென்னையின் முதலமைச்சராகவுமிருந்தார். ஜமீன்தார் தொகுதியிலேயே பெரும்பான்மை வாக்குகளால் கிரி மகாராஜாவைத் தோற்கடித்தார்.


உண்மையான காந்தியசீடர் என்பதை அந்தக் காலத்திலேயே கிரி நிரூபித்திருக்கிருர். சென்னையில் ராஜாஜி மந்திரிசபையில் கிரி தொழில் அமைச்சராக பதவியேற்றதும் ஹரிஜனரான திரு. பி. எஸ். மூர்த்தியைத் தமது சட்ட சபைக் காரியதரிசியாக நியமித்துக் கொண்டார். அதோடு விடவில்லை. தமது காரியதரிசிக்கும் உரியமரியாதைகொடுக்கப்படவேண்டும் என்பதிலும் அவர் எப்போதும் விடாப்பிடியாக இருந்திருக்கிருர். பழைய சம்பிரதாயங்களில் ஊறிப்போன ஒரு பிரமுகர் திரு. கிரியைவிருந்துக்கு அழைத்திருந்தார். தமது காரியதரிசி மூர்த்தியும் பக்கத்தில் இருக்க அனுமதிக்கப்பட்டால் தான் விருந்துக்கு வரமுடியும் என்று மந்திரி கிரி கூறிவிட்டார். பிறகு என்ன காரியதரிசிக்கும் உரிய இடம் கிடைத்தது. திரு மூர்த்தி இப்பொழுது மத்தியமந்திரிசபையில் சுகாதார அமைச்சின் ஸ்டேட் மந்திரியாகவிருக்கிருர். சாதியின் பெயராலும், இனத்தின் பெயராலும் ஏற்படுத்தப்படும் தடைகளை அவர் எப்போதும் முறியடிப்பதில் தீவிரமாகவிருந்துவந்துள்ளார்; கன்னடிய பெண்ணை திருமதி சரஸ்வதியைத் திருமணம் செய்துகொண்டு சமூகசீர்திருத்தவாதியாகவும் அவர் பரிணமித்தார்.

உரியவருக்கு உரிய மதிப்பும் உரிய இடமும் கொடுக்கப்படவேண்டும் என்பதில் கிரி பிடிவாதக்காரர். இரண்டாவது உலகமகாயுத்தத்தின்பின் 1946-ல் ஆந்திரகேசரி பிரகாசம் சென்னையில் மந்திரிசபை அமைத்தபோது திரு பிரகாசத்திற்கு பதிலாக கிரியையே முதன்மந்திரியாக்குவதற்கு மேலிடத்தார் விரும்பினுர்கள். ஆனுல் திரு. பிரகாசத்தின் தியாகம், அனுபவம், வயது ஆகியவைகளைச் சுட்டிக்காட்டி முதன்மந்திரி பதவியை வேண்டாம் என்று மறுத்துவிட்டார் கிரி.

ஜனதிபதியாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டபொழுது திரு. கிரி தமக்குமுன் அப்பதவியை வகித்த பெருமக்களை நினைவுகூர்ந்தவர், "அவர்கள் தலைசிறந்த அறிஞர் பெருமக்கள் ஆனுல் நான் சாதா

(16-ம் பக்கம் பார்க்க)

# தீண்டாமையை ஒழிப்பது எப்படி?



## தியாகம் செய்க!

கல்லும் சுண்ணும்பும் வைத்து ஆலயங்கட்டுவதைக் காட்டிலும் தீண்டாமையை ஒழிப்பது எவ்வளவோ பெரிய காரியமாகும். இந்துக்கள் அதற்காக இரத்தம் சிந்த வேண்டும்; அதற்குரிய அபராதத்தைச் செலுத்தியாக வேண்டும். இந்தச் சாபக்கேட்டைப் போக்குவதற்காக மனைவியையும் மக்களையும் மற்றெல்லோரையும் தியாகம் செய்ய அவர்கள் தயாராக வேண்டும்.

இந்துக்கள் தங்களிடம் நடந்து கொள்ளும் முறையை மாற்றிக்கொள்ளாவிட்டால் தாங்கள் பலாத்காரத்தில் இறங்கப் போவதாக, தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்த சிலர், நான் புனுவில் இருந்தபோது என்னிடம் தெரிவித்தனர். இப்படிப்பட்ட முறைகளினுல் தீண்டத்தகாதவர்களுக்கு முன்னேற்றம் வந்துவிடுமா? வைதீகஇந்துக்களை பிடித்திருக்கும் வெறியிலிருந்து அவர்களைத்திருப்புவதற்குரிய ஒரேவழி, பொறுமையுடன் அவர்களிடம் வாதிப்பதும் சரியானமுறையில் நாம் நடந்துகொள்வதும்தான் அவர்களிடம் வன்முறைகூடாது. மனமாறுதல் ஏற்படாதவரை, உங்களுடைய விதியை நீங்கள் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தான் கேட்டுக்கொள்வேன். உங்கள்பக்கத்தில் இருந்து... உங்களுடைய இன்னல்களை உங்களுடன் சேர்ந்து பகிர்ந்து கொள்ள நான் தயாராய் இருக்கிறேன். மற்ற சாதிக்காரர்கள் அனுமதிக்கப்படும் எந்த ஆலயத்திலும் சென்று வழிபடுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கவேண்டும். மற்ற சாதிக்குழந்தைகளுடன் உங்கள் குழந்தைகளும் எந்த விதமான வேறுபாடும் இல்லாமல், பள்ளிகளில் அனுமதிக்கப் படவேண்டும். வைசிராய் ப... நாட்டில் உள்ள மிகஉயர்ந்த எந்தப் பதவிக்கும் நீங்கள் அருகதை உடையவர்களாய் இருக்க வேண்டும். தீண்டாமை ஒழிப்பைப்பற்றி நான் கூறக்கூடிய விளக்கம் இதுதான்.

ஆனுல் இதில் எனது சமயம் எந்த வழியைக் கூறுகிறதோ அதைநீங்கள் கடைப்பிடித்தால்தான் - மேற்கு நாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாக அல்ல- உங்களுக்கு இதில் நான் உதவமுடியும். அந்த வழியின் மூலம் நான் இந்து மதத்தைக் காப்பாற்றமுடியாது! உங்களுடைய கோரிக்கை புனிதமானது. சாத்தானுடையமுறைகளைக் கடைப்பிடித்து, ஒரு புனிதமான குறிக்கோளை ஒருவர் நிறைவேற்றமுடியுமா? காட்டுமிராண்டிகளின் பலாத்காரத்தைக் கடைப்பிடித்து உங்களுடைய பிரார்த்தனை நிலையை உயர்த்திக் கொள்ளும். யோசனை ... என்று நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன். ஆண்டவனை உள்ளத்தில் இருத்தி மனப்பூர்வமாகத் தியானிப்பதன் மூலம் ஒருவன் மோட்சத்தை அடையமுடியும் என்று கீதை கூறுகிறது. தியானம் என்பது ஆண்டவனிடம் விண்ணப்பிப்பதே. அவ்வாறுவிண்ணப்பிப்பதன் மூலம் மிக உயர்ந்த வரப்பிரசாதமான மோட்சத்தையே அடையமுடியுமானுல் அது எவ்வளவு விரைவில் தீண்டாமை ஒழிப்பைக் கொண்டுவரமுடியும்? ஆண்டவனிடம் விண்ணப்பிபபது என்பதற்கு நம்முடைய தூய்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் பொருள்.

— மகாத்மா காந்தி —

## பார்த்துக் கொண்டிருப்பதா?

தீண்டாமை ஒரு குற்றம் என்று நம்பும் சாதி இந்துக்கள், ஒன்றும் செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது போதாது என்பதை நான் உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் ஒருகொடுஞ்செயல் நடைபெறுவதைப் பேசாமல் பார்த்துக்கொண்டிருப்பவர் சட்டப்படியும் உண்மையிலும் அதில் நேரடியாகப் பங்கு கொண்டவர் தான். ஆகையால், சட்டபூர்வமான முறையிலும் நியாயமான வழிகளிலும் நீங்கள் உங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும்.

தீண்டாமையைப் பாவம் என்று கருதும் ஒவ்வொரு இந்துவும், தீண்டத்தகாதவர்களுடன்தோழமையுடன் பழகுவதன் மூலமும், அன்பு உணர்ச்சியுடனும் தொண்டுணர்ச்சியுடனும் அவர்களைத் தொழுவதன்மூலமும் அவ்வாறு தொட்டால்தான் புனிதமடைந்துவிட்டதாக கருதுவதன் மூலமும், மற்ற இந்துக்களை இவ்வாறு செய்யுமாறு தூண்டுவதன் மூலமும் இந்தப் பாவத்துக்குப் பிராயச்சித்தம் செய்யமுடியும் இந்த ஆன்மிக கண்ணோட்டத்துடன் ஒருவன் தீண்டாமை ஒழிப்பிற்கு முயலும்போது, அதனுடைய லோகாயத, அரசியல் விளைவுகள் எல்லாம் இருக்குமிடம் தெரியாமல் மறைந்துவிடும். இப்படிப்பட்ட விளைவுகளைப்பொருட்படுத்தாமலேயே தீண்டத்தகாதவர்கள் என்று கூறப்படுபவர்களுடன் அவன் நட்பு ஏற்படுத்திக்கொள்வான். சத்தியத்தை நாடிச் செல்பவர்கள், ஒரு விநாடி கூட தங்களுக்குக் கிடைக்கக்கூடிய லோகாயத நன்மைகளைப்பற்றி சிந்தித்து வீணுக்கமாட்டார்கள். அவர்களுக்கு இது ...

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசாபிமானம்

## சொல்லித் தெரியக் கூடியதல்ல; உணர்ந்து கொள்ள வேண்டியது

க. கந்தசாமி

அவனி எங்கும்- சர்வ தேசியத்தைப்பற்றிய எண்ணம் நிலவுகின்ற இக் காலத்திலே தேசாபிமானத்தைப் பற்றிய எண்ணம் அவசியமா? - என்ற ஐயம் ஒரு சிலரின் உள்ளத்தில் எழவும் கூடும் ஆங்கிலப் பேரறிஞர் "பேட்றன்றசல்" போன்றவர்கள் உலகு முழுமைக்கும் ஒரே அரசாங்க அமைப்பு- ஒரே மொழி என்ற கொள்கையைவலியுறுத்திக்கொண்டிருக்கும் வேளையிலேதான்- உலகின் பல்வேறு சிறிய நாடுகளும் - தத்தமது உரிமையை நிலைநாட்டுவதற்காக - போராடிக்கொண்டிருக்கின்றன. சில போராடி வெற்றிவாகை சூடிப்பெருமிதம்கொள்ளும் நிலையிலுள்ளன. "சர்வதேசியம் என்பது தேசியத்திலிருந்துதான் முளைத்தெழுகிறது' சர்வதேசியக்கொள்கைகளை பரப்பவேண்டுமென்று நினைத்தால்முதலில்நாம்நமது தேசியத்தைப் பலமான முறையில் ஸ்தாபிக்கவேண்டும். தேசியம் பலமான முறையில் வேரூன்றுவதற்கேற்ற நிலைமை ஏற்படாவிட்டால் சர்வ தேசியமும் பிறகு நன்ருகப் பிரகாசிக்கமுடியாது" என்று டாக்டர் "சன்யாட்சன்" அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்ருர்.

### தேசாபிமானம் என்ருல் என்ன?

தேசாபிமானம் என்ற சொல்லை இரு கூருகப்பிரிக்கலாம்.ஒன்று தேசம், மற்றதுஅபிமானம். தேசம் அல்லது நாடு, அபிமானம் அல்லது பற்று தேசாபிமானம்அல்லதுநாட்டுப்பற்று. தேசாபிமானம் சொல்லித் தெரியக் கூடியது அல்ல, உணர்ந்து தெரியக்கூடியது.ஒரு தேசம் அல்லது நாடு ஒரு இன மக்களைக்கொண்டதாக இருக்கலாம் அல்லது பல்வேறு இன மக்களைக்கொண்டதாக இருக்கலாம். ஒரு மொழிபேசும்மக்கள் அங்கே வாழலாம். அல்லதுபல்வேறு மொழி பேசும் மக்களும் அங்கே வாழலாம், ஒரே கலை கலாச்சாரம் உடைய மக்களும்வாழலாம். அல்லது மாறுபட்ட கலை கலாச்சாரம் உடைய மக்களும் வாழலாம். ஆனுல் அத்தனை மக்களும் பிறந்த பொன்ருட்டின்மீது நீங்காத பற்றுக்கொண்டு அவசிய அவசரம் நேரிடும்போது உணர்ச்சியால் உந்தப்பட்டு கிளர்ந்தெழுந்து நாட்டைக் காக்க தமது இன்னுயிரையும் ஈந்திடத் துணிவார்களாயின் அவர்களே தேசாபிமானங் கொண்டவர்கள்.

நாட்டுப்பற்று எரிமலை போன்றது. பூமியினடியிற் கனன்றுகொண்டிருக்கும் அனற்பிழம்பு எரிமலை வாயிலாக எழுந்து பீறிட்டுக் கிளம்புவதுபோல சில சில சந்தர்ப்பங்களிலே நாட்டுப் பற்று அல்லது தேசாபிமானமும் அத்தகைய உத்வேகத்தைக் கொள்கிறது.

அத்தகைய சந்தர்ப்பங்கள் யாது? தனது நாட்டின்மீது பிறிதொரு நாடு படையெடுக்கும் போது, தனது நாட்டின் பொருளாதாரத்தை வேறுநாடு சுரண்டிடும் போது, நாட்டின்விழி போன்ற மொழியை பிறர் அழித்து ஒழித்திட முயன்றிடும்போது நாட்டுப்பற்றெனும்இத்திவிர உணர்ச்சி புயலெனக்கிளம்பும்; தீயெனப் பரவும். தான்பற்றிய உள்ளங்கள் அத்தனையையும் பற்றியெரியச்செய்யும், செயலில் இறங்கத்தூண்டும்.

உணர்வு உள்ள ஒவ்வொரு மானிடருக்கும் பற்று இருக்கத்தான் செய்யும். தாய் மேற் பற்றுக்கொள்ளாத மனிதனே இல்லை எனலாம். அத்தகைய தாயைவிட நாட்டின்மேல் இடையருப் பற்றுக்கொள்ளச்செய்வது நாட்டுப் பற்றெனும்உணர்ச்சியே "பயிலுறும் அண்ணன்தம்பி அக்கம்பக்கத்துறவின் முறையார்' தயை மிக உடையாள் அன்னை, என்னை சந்ததம் மறவாத் தந்தை, குயில் போற் பேசிடும் மனையாள், அன்பைக் கொட்டி வளர்க்கும் பிள்ளை. அயலவராகும் வண்ணம் நாட்டுப்பற்று தனது இதயத்துள் உறைவதாக உணர்கிருன் நாட்டுப்பற்றுடையோன். நாட்டுப்பற்றுக்கொண்டவன் நாடு முழுமையும் ஒரேகுடும்பமாகக் காண்கிருன். அந்நாட்டில் வதியும் மக்கள் எந்த மதத்தைச்சார்ந்தவர்களாயினும், எந்த மொழியைச் சார்ந்தவர்களாயினும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் எனக் கருதுகிருன். அவனது இலட்சியம் புத்த பெருமானின் தத்துவத்துடன் அடங்கியிருக்கிறது.

ஒரு கால் புத்தர் பிரானை அவரது சீடர்களில் ஒருவன் அணுகித் தனது உள்ளத்தில் எழுந்த ஐய வினு ஒன்றைக் கேட்டான், "சுவாமி ஒரு துளி தண்ணீர் உலகில் நிலைத்து நிற்கமுடியுமா?" என்று. அதற்குப் புத்தர் "ஆம் முடியும்!" எப்படியெனில் ஒரு துளி நீரானது கடலினுள் கலந்துவிடுமாஞல் அதற்கு என்றும் நித்தியவாழ்வுண்டு என்ருர். நாட்டுப்பற்றுள்ளவனும் இதே தத்துவத்தைத்தான் தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கிருன் தனி ஒரு மனிதன் வாழவேமுடியாது. நாடென்னும் கடலில் அவனொரு துளி. கடலின்றேல் துளியில்லை, கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டால், புயல் அடித்தால் அவை துளியையும் பாதிக்கத்தான் செய்யும்.

### பிறந்த மண்ணின் உயர்வு

பிறந்தமண் எவ்வளவு உயர்ந்தது சிறந்தது என்பதை எடுத்துத்தெளிவுற விளக்குவதற்கு ஒரு சீன நாட்டுவரலாற்றுக்கதையை எடுத்துக்காட்டாகக் காட்டலாம். இற்றைக்குச் சில நூற்ருண்டுகளுக்கு முன்பு சீனநாட்டைச் சக்கரவர்த்தி ஒருவன் ஆண்டுகொண்டிருந்தான். அந்தக்காலத்தில் அந்நாட்டில் வாழ்ந்த பிரபல அறிஞனை 'குவாங் சுவாங்" என்பவன் சக்கரவர்த்தியை அணுகித் தான் பல நாடுகளையும் சுற்றிப் பார்க்க ஆவல்கொண்டிருப்பதாகவும், அதற்கு ஆசியும் அனுமதியும் தரும்படியாகவும் வினயமாக வேண்டினுன். சக்கரவர்த்தி உடனே எதுவும் பேசாது சேவகனை அழைத்து ஒரு கிண்ணத்தில் தண்ணீர் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அங்ஙனமே கிண்ணத்தில் தண்ணீர் கொண்டுவரப்பட்டது. அத்தண்ணீருக்குள்ளே ஒரு பிடி மண்ணை கையாலெடுத்துப்போட்டுக் கலக்கி, கலக்கிய அந்நீரை குடிக்கும்படி அறிஞனை வேண்டினுன். சபையிலிருந்த அத்தனை பேரும் பிரமித்துப்போனுர்கள். ஒரு சிலர் நினைத்தார்கள் இது என்ன பைத்தியக்காரத்தனம், உலகம் சுற்றிப் பார்க்கப்போகிறேன் என்று வந்த அறிஞரிடம் ஒரு பிடி மண்ணை தண்ணீரில் கலக்கிக் கொடுக்கிருரே இந்தச் சக்கரவர்த்தி. இதன் அர்த்தம் தான் என்ன? அறிஞருக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒவ்வோர் முகங்களிலும் சிந்தனை ரேகைகள் தோன்றின. சக்கரவர்த்தியே கடைசியில் தன் செயலுக்குரிய அர்த்தத்தை விளக்கினுர். "அறிஞரே, உலகம் சுற்றிப்பார்க்கப்போகிறேன் என்று சொன்னீர்கள். நீங்கள்சுற்றிப்பார்க்கப்போகும் நாடுகளில் மனதைக்கவரும் மலைகளும், சோலைகளும், மங்கையர்களும் அவர்கள் வாழும் மாடமாளிகைகளும் இன்னும் எத்தனையோ உள்ளத்தைக் கவரக்கூடிய புதுமைகளையும் காணலாம். அவற்றைப் பார்த்து நீங்கள் சொக்கலாம். அதனுல் நீங்கள் பிறந்த நாட்டை மறந்திடவும் நேரலாம். நீங்கள் பிறந்த மண்தான் உங்களுக்கு உயர்ந்தது, சிறந்தது. தன்னைப் பெற்றவள் தாய். அவள் எவ்வளவுதான் நலிந்து வாடியிருப்பினும் அவர் தாம் நமது நற்ருய் என்ற உயர்ந்த எண்ணத்தோடு தாங்கள்பயணத்தைத் தொடங்க வேண்டுமென ஆசி கூறி வழியனுப்பி வைத்தார் சக்கரவர்த்தி.

அன்னியரின் ஆட்சியினுல் அடிமைத்தளையில் சிக்குண்டு பஞ்சைகளாய், பராரிகளாய் "தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நின்றதாமோர் பாரததேசம் 'தன்னில்' அறியாமை இருளை ஓட்டி [illegible] உயரிய நாட்டுப்பற்றெனும் சிறிய உணர்ச்சிதான். அத்தகைய உணர்ச்சியினுல் உந்தப்பட்ட உத்தமர்கள் பலர். அவர்களுள் தலைசிறந்து விளங்குபவர் மகாத்மா காந்தி அவர்களே.

### மகாத்மாகாந்தி

அன்னியர் ஆதிக்கத்தினுல் தான் பிறந்த பொன்னுடு சீரழிகிறதே என்ற இடையருு எண்ணம் அவரது உள்ளத்தைக் குடைந்து கொண்டேயிருந்தது அரசியலுணர்வு சமுதாயத்திற்கு எத்தகைய அவசியமானது என்பதை அழுத்தம்திருத்தமாக ஆணித்தரமாக தனது சொற்பொழிவுகளிலும் தான் எழுதிய கட்டுரைகளிலும் விளக்கிக் காட்டினுர். அவர் தமது பிரார்த்தனைக் கூட்டங்களிலே ஆங்கிலக் கவிஞர் 'ஷெல்லி' அவர்கள் பாடிய புரட்சிக் கவிகளை அடிக்கடி பாடிக்காட்டி மக்களை உணர்ச்சி கொள்ளச் செய்தார். அவரது சீரிய தொண்டுக்கு உறுதுணையாய் இருந்தவர் பலர். அவர்களில் தமிழ் நாட்டின் தவப்பயனுய் வந்துதித்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஒருவர். சிந்தை, அணு ஒவ்வொன்றும் நாட்டின்விடுதலைக்காகவே அர்ப்பணம் என்று சொல்லிச் செயலாற்றிய கர்மவீரர். அவர் ஒரு விடுதலை உணர்வின் பிழம்பு.

பொதுவாக இந்திய விடுதலை வரலாற்றில் சிறப்பாக தமிழக வரலாற்றில் அவர் ஒரு திருப்பு முனையாக அமைந்தார். விடிவெள்ளியாகத் தோன்றி பலருக்கு வழிகாட்டினுர். பண்டிதர்களின் சொத்தாகிய பாட்டை விடுதலைப்படைக் கலக்கருவியாக்கித்தந்து மக்களை வீறுகொண்டெழச் செய்த பெருமை அவரையே தான் சாரும்.

"பெற்றதாயும் பிறந்த
பொன்னுடும் நற்றவவானி
னும் நனி சிறந்தனவே"

"எந்தையும் தாயும்
மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே"

எனப்பல கவிதைகளைப் பொழிந்தார். அவரது தொண்டு அடிமைத்தளையை அகற்றுவதற்குப்பெருந்துணை புரிந்தது

### நாட்டுப்பற்ருல் இழந்த நாட்டைப் பெற்றவர் யூதர்


மனிதாபிமானமும் ஜனநாயகமும் உலகிலே தழைத்தோங்குவதற்கு பாடுபட்ட செம்மல்கள் பலப்பலர். ஆதிக்கவெறி பிடித்தவர்களாய் அடக்கி ஒடுக்கப்பட்ட

(13-ம் பக்கம் பார்க்க)

"சர்வதேசியம் என்பது தேசியத்திலிருந்துதான் முளைத்தெழுகிறது. சர்வதேசியக் கொள்கைகளைப் பரப்ப வேண்டுமென்று நினைத்தால் முதலில் நாம் நமது தேசியத்தைப் பலமான முறையில் ஸ்தாபிக்க வேண்டும். தேசியம் பலமான முறையில் வேரூன்றுவதற்கேற்ற நிலைமை ஏற்படாவிட்டால் சர்வதேசியமும் பிறகு நன்ருகப் பிரகாசிக்கமுடியாது"

— டாக்டர் சன்யாட்சன்

மங்கையர் அங்கங்களுக்கு அதீத அழகைக் கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள்...
இன்றே விஜயஞ்செய்யுங்கள்



தெய்வா நகை மாளிகை
73, காங்கேசன் துறைவீதி,
யாழ்பாணம்.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழநாடு' பத்தாண்டு நிறைவை யொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் பாராட்டுப் பெறும் சிறுகதைகளில் இதுவுமொன்று—

# சுண்டுவிரல்

மெட்டி

### கதையைப் பற்றி...

உடல் அங்கங்களைக் கொண்டு பெண்ணின் குணங்களையே ஆராயும் நூலொன்றைப் படித்த வாலிபன் ஒருவன் தன் தாயையே சந்தேகிக்கிறான். அதே அமைப்பிலுள்ள தெய்வீக விக்கிரகங்களைக் கண்டு தெளிவு பெறுகிறான். கோவிலுக்குப் பெண்களை ரசிக்கப்போனவன் பின்பு அமைதியை நாடிப்போகிறான். பல போட்டிகளிலும் பரிசு பெற்ற சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழும் திரு. மு. கனகராசன் இக் கதையை நயம்படஎழுதியிருக்கிறார். படித்துச் சுவையுங்கள்.

(ஆ - ர்.)

மு. கனகராசன்

**வ**சந்தத்தின் எக்காளம் தடாகத்தின் பூரிப்பிலிருந்து தெரிகிறது. மலர்ந்துள்ள தாமரைகளின் கிளர்ச்சிதரும் நறுமணம் நெஞ்செலாம் செறிகிறது. இலைகளின் முத்துக்களில் நட்சத்திரங்கள் சிரிக்கின்றன. அது கோவில் தடாகம். பாற்கடலிற் திரண்டு வந்த வெண்ணெய்க்கட்டியாக அதில் வாத்தொன்று மிதக்கிறது. சுற்றிலும் மருத மரங்கள் மதாளித்து இருக்கின்றன. வில்வமரமொன்று ஓங்கி நிற்கிறது. சம்மணம் கூட்டித்தவமியற்றும் முனிபுங்கவரைப்போல மத்தியில் கம்பீரமாக வீற்றிருக்கிறது, சிவனின் ஆலயம். அந்தப் பிரதேசமெங்கும் பரவுவதற்காகத் தன் ஞான ஒளிப் பேழையைப் பிரமன் கவிழ்த்துவிட்டதைப்போல வானத்துக்கும் பூமிக்குமாக சரேலென ஓடி ஒளி பாலிக்கிறது, வானவில்தாரை. அருமருந்தான பொழுது. ஒடுவலை உள்ளும், புறமுமாக உந்திவிடக்கூடியஇத்தனை ஜீவகளைமிக்க அந்த க்ஷணப்பித்தநேரத்தில் தன்னைப் பிரித்துக்கொண்டு குளக்கரைப்பாறையில் அமர்ந்திருக்கிறான், நடேசன். அவனுக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி எதுவுமே இல்லை என்பதைப்போல அவன் அப்படியிருக்கிறான்.

சிவன்கோவிலின் மணிநாதவெள்ளம் 'ஹே! ஆத்மாவே. பகலிலிருந்தும், இரவிலிருந்தும் பிரிந்து தனித்து நிற்கும் இந்த ஏகாந்த வேளையில் இதோ என்னைப்பார்' என்பதைப் போலக் கணீரிடுகிறது. அவன் புல்லரித்து உடம்பைச் சிலிர்த்துக்கொள்கிறான். இந்தக் காற்றும் நீரும் இருப்பதைப்போலவே ஏதோ ஒன்று அவனுள்ளே ஓடி இதயத்தில் மோதுகிறது.

கோவில் சந்நிதியில் கூட்டம் பெருகுகின்றது. காஷாயத்துண்டுகள்-அர்ச்சனைத்தட்டங்கள் -குங்குமச் சரைகள்-பூச்சரங்கள். சற்று நேரத்துக்கு முன்பிருந்த இயற்கைக்கோலம் ஒருசேரப்பிணைந்த ஆண்டவத்தாண்டவத்தின் அற்புதக்கற்பனையான பெண்கள். மானுடத்துக்குச் சவாலாகிவிட்ட பாரிஜாதங்கள்.

நடேசன் ஒவ்வொருவராகப் பார்த்துக்கொண்டிருக்கின்றான். அவனிதயத்துக்குள்ளே ஓடித்திரிந்த 'அது' ஆத்மாவுக்குள்ளே போக மறுத்து மூளைக்குள்ளே ஓடி சரண்புகுந்து கொள்கிறது.

தம்மிடம் கவரப்படுவதற்காகத் தாழம் பூக்கள் சுகந்த மணத்தைக் காற்றிலே தூவுவதைப்போல கிண்கிணிக் குரல்கள் காற்றிலே மிதக்கின்றன.

நடேசன் திரும்புகிறான்.

அவனின் பார்வை அந்தப் பெண்களிடம் போகின்றது. அந்தப்பார்வைகான் பூனையின் நாக்கைப் போல எவ்வளவு சொரசொரப்பாயிருக்கிறது. நடேசனின் கண்கள் அந்தப் பெண்களின் ஆடைகளைச் சரேல் சரேலென உரிந்துவிடுகின்றன. நுங்கும் நுரையுமான அலைகளின் மீது காம்புகளைக்குத்தி, அந்த இதழ்களையே ஓடங்களாக்கிச் சிரித்துச்சிரித்து மிதந்துவரும் செவ்வரத்தம்பூந்தாதுகளைப்போல அந்தப் பாவையர் வருகின்றனர். பூக்களின் வாசம்கூட பூரிக்கின்ற வேளைதான்

சரித்திரகால சிற்பங்கள் இப்படித்தான் இருக்கின்றனவா? சிகிரியாவின் சித்திரக் கோலங்களா?- உருவங்கள், உறுப்புக்கள், உணர்வுகள், உயிர்கள்...அழகுகள்.

ஆத்மாவினின்றும் பிறக்கும் உணர்வு, உடலினின்றும் பிறக்கும் உணர்ச்சி, இரண்டுமே பிறந்ததற்காக அழகு.

நடேசன் மீண்டும் அந்தப் பெண்களை அதே கோலத்திலாக்கிப் பார்க்கின்றான்.

கோபாலனும் காந்தனும் எங்கேதான் போய்விட்டார்கள்? வெள்ளிக்கிழமையிலுமா தாமதிப்பது? இருந்திருந்தால் வாய்விட்டுப் பேசி ரஸிக்கலாமே.

காந்தன் நடேசனின் கல்லூரி நண்பன். சினிமாப் பத்திரிகைகளிலிருந்து மாணவியர்வரை விமர்சிக்க வல்ல நண்பன். பிரின்சிப்பல் ஏசினாலும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு வெளியே வந்தவுடன் 'இயற்கையை ரசிக்கத் தெரியாவிட்டால் கலைஞர்களாக மட்டுமல்ல மனிதர்களாகவே இருக்க முடியாது' என்று உற்சாகப்படுத்துபவன்.

ஒருநாள் அப்படித்தான் வகுப்பில் எலிசாவின் பக்கவாட்டு அழகை மெய்ம்மறந்து ரஸித்துக்கொண்டிருந்த காந்தன் ஏதோ சொன்னான். செக்ஸியாகத்தான் சொல்லிவிட்டான். தற்செயலாக வந்துவிட்ட ஆசிரியர் இருவரையும் தனியாக அழைத்துப் புத்திமதி சொன்னார், கடைசியில் 'உணர்ச்சிகள் தவறானவை என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் மாணவர்களின்மூளை பலமுள்ளனவாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்களின் லக்ஷியங்கள் துர்ப்பலமானவையாகிவிடும்' என்றார். அதற்கு நடேசனும் சிரித்துக்கொண்டே 'சார் எங்களின் மூளைக்குச் சுதந்திரம் இருப்பதைப்போலவே உணர்ச்சிகளுக்கும் சுதந்திரம் இருந்தால்தான் பாடங்களே மூளையிற் பதிகின்றன' என்றானே அவர் அவர்களைத் திட்டித் தீர்த்துவிடவில்லை. தர்க்க பலமுள்ள அவர்களின் கருத்துக்களை என்னசெய்வது?—

தோளிற் தட்டிவிட்டு எதிரே நிற்கிறான் கோபால். —''எங்கே காந்தனைக் காணோம். அங்கேபார் வெசாக் கூடுகளை. ஏன் இவ்வளவுநேரம்?'' நடேசன் வெசாக் கூடு என்பது பெண்களைத்தான். அவர்கள் வண்ண வண்ண ஆடைகளணிவதால் அந்தப்பெயர்.

''மச்சான் ரமணியைக் கண்டேன்டா! நான் வரும்போது அவள் பஸ்ஸுக்கு நிற்கிறா. அன்றைக்குத் தியேட்டரில் கண்டோமே அதே 'டைட் ஸ்கேர்ட்'டும் பச்சை 'ஹேண்ட் பேக்'கும்தான். ச்சா! அவள் கூலிங் கிளாஸ் போட்டாலே அது ஒரு தனி ஸ்டைல்தான்டா''-என்று தாமதத்துக்கு விளக்கம் தருகிறான் கோபால்.

''பேசினயா? படத்துக்குத்தான் போகிறாளோ? போய்ப்பார்ப்போமா...?'' -கேட்டுக்கொண்டே கையை உயர்த்தி நேரத்தைப் பார்க்கிறான் நடேசன்.

''சந்தர்ப்பத்தை விடுவேனா? பஸ் வருமட்டும்பேசிக்கொண்டிருந்தேனே. ஏதோ துணிவாங்கப்போகிறாளாம். படத்துக்குப் போகலாமெனக் கூப்பிட்டேன். மெட்னிக்கென்றால் வந்திருப்பாள். ஸ்வீட் கேர்ல் இல்லையா?''-என்கிறான் கோபால். ஆனால்...? ஆமாம், ரமணி பஸ்ஸுக்கு நின்றதென்னவோ உண்மைதான், யாரோ ஒரு மனுஷியுடன். கோபால் போய்க் கதைத்தது, படத்துக்குக் கூப்பிட்டது எல்லாம்...ஓ! கோபால் அப்படித்தான். இவ்வளவு நேரமும் தானும் பஸ்ஸிற்காகக் காத்திருப்பவன் போல பக்கத்திலே நின்று அவளின் உடல் நெளிவுகளைக் கண்களாலேயே பிசைந்து கொண்டிருந்தான் என்பதுதான் உண்மை. அப்படியொரு 'வீக்னஸ்'. கோபால் ஒரு புடைவைக் கடைச் சிப்பந்தி. இப்படி எத்தனையோ பேரைத் தெரியும் அவனுக்கு.

காந்தனும் வருகிறான். அவனுடன் வருவது யார்? நடேசன் நன்றாக உற்றுப் பார்க்கிறான். அவர் அடுத்த வீட்டு இராமலிங்கசர்மா. சிங்கள மொழிச் சட்டத்தால் ரிடையராகிவிட்டு வீட்டோடேயே இருக்கிறார். நல்ல கல்விமான். சமஸ்கிருதத்திலும் பரிச்சயமுண்டு. சிவபக்தராதலால் அடிக்கடி கோவிலில் காணலாம். நடேசனின்தாய் சர்மாவை அவனுக்கு டியூசன் சொல்லித்தர ஏற்பாடு செய்தாள் அவரிடம் அவனுக்கு நிறைந்த ஒரு மரியாதை உண்டு. ஆனால் அவரைக் கண்டால் எங்கோ ஓடிவிடவேண்டும போலிருக்கும். பாடம் முடிந்த கையோடு ஆத்மீகத்தைப் பற்றிப் பேசத்தொடங்கிவிடுவார். நடேசனிடம் பக்தியில்லை. அவன் கோவிலுக்குப் போவதுமில்லை எனக்கண்டு கொண்ட சர்மா ஒருநாள்:-

'ஞானம் சிவமயம், பக்தி; சைவ,
தியானம் சிவாத்மகம்,
சைவ விரதம், சிவார்சேத்தி
சிவயோகோ ஹி பஞ்சதா'

என்று தொடங்கி 'சிவனை வழிபடாதவன் வாழ்வில் மீண்டும் மீண்டும் உழலும் மிருகத்தைப் போன்றவன் என்று உபதேசிக்கத் தொடங்கினார். அவர் நம் வாலிபர்கள் பரீட்சைக்குக் கணிதத்தைக் கட்டாய பாடமாக எடுப்பதைப்போல தினமும் தியானத்திற்குக் கொஞ்சநேரத்தை ஒதுக்குவதை லக்ஷியமாக்க வேண்டும் என்பார். வாலிபர்கள் ஆற்றலுள்ளோராய் ஆக வேண்டுமானால் சமய அறிவு வேண்டும். ஏனென்றால் ''நம் மதமானது புத்திசாலித்தனமானதும், சந்தோசமானதுமான மக்களையல்லாமல் வீரர்களையும், துறவிகளையும் உருவாக்குகிறது'' என எல்லோரிடமும் சொல்வார். அவரின் பேச்சையே ஓர் உபத்திரவமாகக் கருதித்தான் நடேசன் ரியூசனையும் விட்டுவிட்டான். அப்படியானவரிடம் அகப்பட்டுக்கொண்டால் காந்தனால் வேலைக்கே வரமுடியுமா என்ன?

மிகக் கஷ்டப்பட்டு சர்மாவின் தலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு வந்து நண்பர்களோடு சேர்ந்துகொள்கிறான் காந்தன்.

மூன்று நண்பர்களும் விபூதி இட்டுக்கொள்வார்கள். சந்தனப்பொட்டு துலங்கும் கோவிலையும் கும்பிடுவார்கள். எல்லாம் அந்தச் சுற்றாடலில் இருப்பதற்கு 'லைசென்ஸ்' பெற்றுக்கொள்வதைப் போலத்தான்.

கோவில்-கடவுள்- தியானம் அதையெல்லாம் சிந்திக்க அவர்களுக்கு நேரமில்லை. மற்றவர்கள் பார்க்கின்றார்களே அருவருப்பான காட்சியாயிருக்குமேயென்று தங்களின் 'திருவிளையாடல்' பற்றி நினைக்க மாட்டார்கள் 'கோவிலுக்குள்ளேயிருக்கும் கண்ணன் கோபியர்களுக்குச் செய்ததைவிடவா இதுமோசம் என்பது அவர்களின் கட்சி.

ஒருநாள் அப்படித்தான் நடேசனும் கோபாலும் பஸ்ஸிற்காகக் காத்திருக்கிறார்கள். தூரத்தில் ஒருத்தி வருகிறாள். சிவப்புப் பூக்களிட்ட இளநீலச்சேலை. அதற்கே ஏற்றதான குங்குமம் தூவியதைப்போல ஒரு ஜாக்கெட். அளவான உடல். வெட்டி எடுத்த வானத்திற்கு வைரமிழைத்து வீதியில் விட்டதைப் போல நடந்துவரும் அழகு. தமிழ்நாட்டு எழுத்தாளர் ஒருவர் 'சீதை நடப்பதே அழகு' என்று சொன்னதைப்போன்றதொரு வசீகரம். அவளைப் பார்வையால் கௌவி விழுங்கிக்கொண்டிருக்கும் கோபால் வார்த்தைகளை அள்ளி வீசுகிறான். பதிலுக்கு நடேசனும் வர்ணிக்கிறான். இருவரும் வாய்விட்டுச் சிரிககிறார்கள். அந்தச் சிரிப்பிலே அவர்களுக்கு ஒரு சுகம். சுகமா? தலையிலே நிறைந்துவிட்ட பேனை உருவி இழுக்கும் போதுகூடத்தான் சுகமாக இருக்கிறது.

அந்த உருவம் அருகில் வந்துவிட்டது நடேசன் கூர்ந்து பார்க்கிறான். இத்தனைநேரம் அவன் மனதில் ஊர்ந்தது மரவட்டையா?

சிலிர்த்துக்கொண்டு, அந்த அட்டையைத்தூக்கி எறிகிறான். வந்தது...... தான் மிகவும் மரியாதை வைததிருக்கும் ரீச்சர். என் நெஞ்சிலேயே ஓங்கி ஓங்கிக் குத்திக்கொண்டால் என்ன என்றதொரு ஆதங்கம்.

நண்பர்களுக்கு ஒரு புத்தகம் கிடைக்கிறது. மூவரும் மாறி மாறி மிகவும் அனுபவித்துப் படிக்கின்றார்கள். இடையிடையேயுள்ள படங்களை ரஸிக்கின்றார்கள்.

அது அப்படியொன்றும் ஆராய்ச்சிப் புத்தகமல்ல. அவர்களும் கலை, இலக்கியம், விஞ்ஞானம் என்றெல்லாம் தரம் பிரித்துப் புத்தகங்களைத் தேடிப் படிப்பவர்களுமல்ல துர்ப்பலமுள்ள மனிதர்களின் உணர்ச்சிகளை நம்பியே வயிறு வளர்க்கப் புறப்பட்டுவிட்ட ஒருவன் எழுதிய புத்தகம்தான். அதற்குத் தோதாக நைந்துபோன புலன்களின் இரைக்காக என்று சில பத்திரிகைகளின் கட்டுரைகளும், செய்திகளும் வேறு அவர்களுக்குக் கிடைக்கின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில்

## ஆறுதற் பரிசுபெற்ற நான்கு ஓரங்க நாடகங்களில் இதுவுமொன்று

# பூமலர்

உடுவை

தில்லை நடராஜா



[சென்ற வாரத் தொடர்ச்சி]

(சுந்தர் கோப்பியைக் குடித்து முடித்துவிட்டு திரும்பவும் கட்டிலில் சாய்கின்ருர். குளிக்கச் சென்ற பூமலர் பூத்துவாயினல் தலையைத்துடைத்துக்கொண்டே வருகிருள் )

பூமலர்: இதென்ன அநியாயம்?-பிறகும் படுத்திருக்கிறியள். நான் குளிச்சிட்டு வந்திட்டன். பாத்ரூமிலை ஒருதருமில்லை. போய்க்குளிச்சிட்டு வாருங்கோவன்.

சுந்தர்: நான் பிறகுதான் குளிக்கவேணும். ஒரு மாதிரித்தலையைச் சுத்துது. என்னெண்டு தெரியயில்லை.

பூ: சூட்டிலையாக்கும். உடம்பிலை பச்சைத்தண்ணிபட எல்லாம் சரியாப்போயிடும்.

சுந்: சூடல்ல...அண்ணனைப் பார்க்கவேணும் அண்ணனைப் டார்க்கவேணுமெண்டு உன்ர கரைச்சல் தாங்காமல் நேற்று டெஹிவலைக்குப் போனம்தானே! அண்ணுவோடை 'சூ'வெல்லாம் சுத்தியடிச்சதுதான் இப்ப தலையைச் சுத்துது. உடம்பும் வலுசோம்பலாயிருக்கு.

பூ: எல்லாத்துக்கும் நான் தான் சாட்டு. நான் மட்டுமே அண்ணுவைப் பார்க்க வேணுமென்டு சொன்னது. நீங்களும் மச்சானைப் பார்க்க வேணுமெண்டு சொன்னனீங்கள் தானே...

சுந்: சரியப்பா...சரி.

(பூமலர் தன்னைச் சிங்காரித்துக்கொண்டே சாறியையும் உடுத்திக் கொள்கிருள் )

பூ: மறந்துபோனன். இண்டைக்கு என்ன கிழமை தெரியுமா?

சுந்: போயாவெண்டு தெரியும். மற்றும்படி ஆருக்குத்தெரியும் உங்கடை நாளும் கிழமையும் ...

பூ: இண்டைக்கு வெள்ளிக்கிழமை. அதுவும் கடைசிக்கிழமை.

சுந்: போயா வந்ததிலையிருந்து ஒரு நாளும் தெரியாது. கிழமையும் தெரியாது.

பூ: இண்டைக்குக் கடைசிவெள்ளி. எப்பிடியும் கோயிலுக்குப் போகவேணும். எழும்புங்கோ.

சுந்: எனக்கு ஒரு மாதிரியிருக்கு. நீர் போட்டு வாரும்.

பூ: இதென்னப்பா! கடைசி வெள்ளிக்கிழமையெண்டாலும் கோயிலுக்குப் போகவேண்டாமே?

சுந்: நீர் வெளிக்கிட்டு விட்டீர்தானே! போயிட்டு வாரும்.

பூ: நீங்களும் வாருங்கோ-உதிலைதானையிருக்கு மாரியம்மன் கோயிலும், பிள்ளையார் கோயிலும். அப்படியில்லாட்டி ஒரு ரக்ஸியிலை போவம். ஐம்பது சதம் தானே?-

சுந்: எனக்குச் சுகம் வந்தால் பின்னேரம் போறன். இப்ப வரேலாது. நீர்தான் போயிட்டுவாரும்.

பூ: நான் கதைக்கயில்லை. கோயிலுக்குப் போறதோ போகாமல் விடுறதோ அது அவரவற்ற மனதைப் பொறுத்தது. மற்ற ஆக்கள் போகச்சொல்லினம் எண்டு ஆக்கிளைக்காகப்போகக்கூடாது. தாங்களாக விரும்பிப் போற ஆக்களுக்குத்தான் முழுப்பலனும் கிடைக்கும்.

சுந்: துலைஞ்ச கேஸ்தான் ... நீர் தத்துவம் பேசத் தொடங்கியிட்டீர்.

(சுந்தர் கட்டிலிலிருந்தபடியே எழுந்து தலையணையொன்றைச் சாய்வாக வைத்துக்கொண்டு சாய்ந்திருக்கின்ருர். கோயிலுக்குப் புறப்படத் தயாராகிவிட்ட பூமலர் தேங்காய், பாக்கு, பழம் முதலியவற்றை அருச்சனைத் தட்டொன்றில் வைத்துக் கொண்டிருக்கின்ருள்.)

பூ: நீங்கள் படுத்திருங்கோ...நான் வெளிக்கிட்டிட்டன். பின்னேரம் போகவும் வசதிவராது. போயிட்டு வாறன். (பூமலர் குழைந்து கொண்டு) எனக்கு...

சுந்: உமக்கு...என்ன?... எங்கடை ரேடியோ மாதிரி இடையிலை நிண்டிட்டாய். மின்சாரக் கோளாறே? கறண்ட் வரயில்லையே?

பூ: போதும் உங்கடை பகிடி. கோயிலுக்குப்போகக் காசு வேணும்.

சுந்: காசோ...

(சுந்தர் உதிர்க்கும் மெல்லிய சிரிப்பைக் கவனியாமலே பூமலர் மண்ணெண்ணை அடுப்பின் மேலிருந்த சாதம் கறி முதலியவற்றை இறக்கி ஒழுங்கு செய்து வைக்கின்ருள்.)

சுந்: அது பொம்பிளையளுக்குள்ள இயல்பான குணம். எவ்வளவு சீலை வைச்சிருந்தாலும்-புதிதாக ஒரு சாறி வந்த உடனை அதை வேண்டிக் கட்டாட்டி அவையின்ர மனம் திருப்திப்படாது. காசு விஷயத்திலையும் அது போலைதான்... எவ்வளவு காசு வைச்சிருந்தாலும் கோயிலுக்குப்போறபோதோ அல்லது கடைக்குப்போறபோதோ புருஷமாரட்டைக் காசு கேட்டு வேண்டாட்டி அவைக்குச் சந்தோஷமே இராது. அப்படித்தானே?

பூ: சும்மா -அ...போதும். போதும். கோயிலுக்குச் சும்மா போட்டு வரமுடியுமே? அருச்சனை செய்யத் தானே வேணும்; அதுக்குக் காசுவேணும். வெள்ளிக்கிழமையானபடியால் மரக்கறிக்காரனையும் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது,

கோயிலுக்குப்போறனுன் தானே! அப்படியே கையோடை கொட்டாஞ்சேனை மார்க்கட்டுக்கும் போட்டுவந்தால் கரைச்சல் தீர்ந்தது.

சுந்: அந்த ஸ்டான்டிலையிருக்கிற நீலநிறசேட் பொக்கற்றிலை காசு இருக்கவேணும்.

பூ: அதெல்லாம் தடவிப்பார்த்திட்டன். அங்கை ஒரு சதமும் இல்லை.

சுந்; அப்பிடியா விஷயம் — அதுதானை பார்த்தன்? வழக்கமாகச் சேட்டிலை வைக்கிறகாசு வீட்டில்தான் களவுபோகும். ஆர் களவெடுக்கினமெண்டும் வடிவாகத் தெரியும். அ ...

அப்படியிருக்க களவெடுக்கிற வழக்கத்தை மறந்து காசு கேக்கிறீரே எண்டு யோசிச்சன். சேட் பொக்கட்டிலை காசு இல்லையோ...?

டீபோய்க்குக்கீழே இலக்கியவழி புத்தகத்திலை ஐஞ்சுரூபா இருக்கவேணும், எடுத்துக்கொள்ளும்.

பூ: தாங்ஸ்.

(பூமலர் டீபோயின்கீழே வைக்கப்பட்டிருக்கும் புத்தகமொன்றிலிருந்து காசையெடுத்து தனது ஹான்ட்பாக்கில் வைக்கிருள்)

பூ: நான் போயிட்டுவாறன்.

சுந்: எனக்காகவும் கும்பிட்டிட்டுவா. செரியோ.

பூ: செரியோ.

[பூமலர் கோவிலுக்குச்சென்று இரு நிமிடங்களுக்குள் - பக்கத்து அறையில் வசிக்கும் பத்மநாதன் கையில் 'ஈழநாடு' பததிரிகையுடனும், இரண்டு கடிதங்களுடனும் வருகிருர்]

பத்மநாதன்; குட் மோர்னிங் மாஸ்டர்.

சுந்: ஓ ... ... பத்மாவா? குட்மோர்னிங் ... மோர்னிங் ... அப்பிடி அந்தக் கதிரையிலை இருங்கோ,

பத்; தாங்யூ ... என்னமாஸ்டர் உசாரைக் காணயில்லை.

சுந்: போயாடே எண்டால் உப்பிடித்தான். உதென்ன? பேப்பரும் தபாலுமாக வெளிக்கிட்டிருக்கிறியள்?

பத்: மன்னிக்கவேணும் மாஸ்டர். நேற்று உங்களுக்கு இரண்டு தபால் வந்தது. உங்களைக் காணயில்லை. நான்தான் வாங்கி வைச்சனுன். நீங்கள் வருவீங்களெண்டு பின்னேரம்வரையும் இருந்து பார்த்தனுன். நீங்க வரயில்லை நானும் நேற்றிரவு 'நைற் டியூற்றி' இப்ப கொஞ்சம் முதல்தான் வந்தனுன்.

சுந்: பரவாயில்லை. நாங்கள் நேற்று அவ ...... மிஸ்ஸிஸ்ஸின்ர தமையனைப் பார்க்க டெஹிவளைக்குப் போனனுங்கள் வர லேட்டாயிடுத்து.

(பத்மநாதனின் கையிலிருந்த இரண்டு கடிதங்களையும் சுந்தர் வாங்கி முகவரிகளை மட்டும் படித்துவிட்டு டீபோயின்மேல் வைக்கிருர்)

பத்: எங்கை மாஸ்டர்? உங்கடை மிஸிஸ்ஸைக் காணயில்லை ...

சுந்: கோயிலுக்குப் போயிட்டா ... மறந்துபோனன். தாங்ஸ், எனக்கொரு தபாலும், அவவுக்கொரு தபாலும் கொண்டுவந்திருக்கிறீங்கள்.

பத்: இந்த ஈழநாடு பேப்பர் பார்த்தீங்களா?

சுந்: பார்க்கயில்லை — என்ன விசேஷம்?

பத்: உங்கடை மிஸிஸ் எழுதின சிறுகதையொண்டு வந்திருக்கு.

சுந்: எனக்குச் சொல்லவேயில்லை. அவவுக்கு உது தானே வேலை. நான் பள்ளிக்கூடம் போனஉடனை — பட்பட்டெண்டுசமையலை முடிச்சிட்டு கதையள் எழுதிறதும் கட்டுரையள் எழுதிறதும்தானே அவவின்ர வேலை.

பத்: அது நல்லது மாஸ்டர். மற்றப்பொம்பிளையளெல்லாம் பக்கத்துவீட்டிலைபோய் அரட்டையடிச்சுக் கொண்டிருக்கையிலை, வீட்டோடையிருந்து அதைஇதை எழுதிறது நல்லதுதானே! புகழும் வரும். கொஞ்சக் காசும்வரும்;

சுந்: (வேண்டா வெறுப்பாக)

என்னவோ நெடுக எழுதிக்கொண்டுதான் இருக்கிரு. இடைக்கிடை 'இந்தப் பேப்பரிலை என்ர கதை வந்திருக்கு. அந்தப் பேப்பரிலை என்ர கட்டுரை வந்திருக்'கெண்டு சொல்லுறவ. எனக்கு நேரமும் வசதியுமெல்லா வரவேணும் எப்பவாவது இருந்திட்டு இரண்டொண்டு பாக்கிறதுதான் ...

பத்: நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது மாஸ்டர். இப்பிடி ஒருஆளுக்கு எழுதிற திறமை இருக்கிறபோது உசார்ப்படுத்தி உற்சாகப்படுத்திவிட்டால்தான் அவை தொடர்ந்து எழுதுவினம்.

சுந்: என்னவோ புகழும் காசும்தான்! சும்மாபேப்பருக்குக் கதையை அனுப்பிப்போட்டு அது எப்பவரும் எடபவரும் எண்டு காத்துக்கொண்டிருப்பாள். அங்கினை இரண்டொரு பேப்பர்காரன்தான் பதினைஞ்சு இருபது ரூபா கொடுப்பங்கள். மற்றவங்கள் கதையைப் பிரசுரித்த பேப்பரைக்கூட அனுப்பமாட்டாங்களாம்.

பத்: நீங்க சொல்லுறதும் சரிதான்! நான் நினைக்கிறன் எங்கடை இலங்கையிலைதான் பேப்பர் நடத்திறவங்கள் இப்பிடியெல்லாம் திருகுதாளங்கள் செய்யிருங்களெண்டு. ஒருவன் ஒருகதையை எழுதிறபோது எவ்வளவு ஆசையோடை எழுதுவான் எண்டதைப் பற்றி பத்திரிகை ஆசிரியர்கள் கொஞ்சமும் யோசிக்கிறதில்லை.

''என்னுடையகதைவரும். அதைப்பற்றி எல்லாருக்கும் சொல்லலாம். கதை நல்லாயிருந்தால் அதுக்குக் காசும்வரும்'' எண்டெல்லாம் எண்ணிக்கொண்டுதான் அநேகமான ஆட்கள் எழுதிறது. அதெல்லாம் எங்கை தெரியப்போகுது இந்தப் பேப்பர்காரங்களுக்கு. இன்னுஞ்சிலபேப்பருக்கு கதையோடை முத்திரையைவைச்சு அனுப்பினுலும் — கதையைப் பிரசுரிக்கவும்மாட்டாங்கள். போகட்டும் — அந்தக்கதையையாவது திருப்பி அனுப்பவேண்டாமா? அதுவும் இல்லை. கதையோடை முத்திரையையும் எடுத்திடுவாங்கள்.

சுந்: பேப்பர் வாசிக்கவேணுமெண்ட ஆசையையே இல்லாமல் செய்துபோடுவங்கள் பேப்பர்காரர்.

பத்: அதுவும்சரிதான்! அரைவாசிப் பேப்பருக்கு மேலே விளம்பரம். பிறகு உந்தச் சினிமா படங்கள். எலந்தப்பயம் பாட்டுக்கு அவ அப்பிடி ஆடுறது ஆபாசமாயிருக்கு எண்டு ஒரு பகுதி எழுதிறது. அது ஆபாசமில்லையெண்டு இன்னொரு பகுதி எதிர்த்து எழுதிறது.

சுந்: அதைவிட்டுத் தள்ளுங்கோ பத்மா! நாங்கள் பள்ளிக்கூடங்களிலைபடிச்ச காலங்களிலை-'பேப்பர் படிக்கவேணும், பேப்பர் படிக்கவேணும்' எண்டு எங்களைப் படிப்பிச்ச ரீச்சர்ஸ் அடிக்கடி சொல்லுவினம். இப்பெல்லாம் நாங்கள் அப்பிடிச்சொல்லமுடியாமலிருக்கு. நாங்கள் சொல்லாவிட்டாலும் பள்ளிக்கூடமாணவர்களில் கனபேர் உந்த ஐஞ்சாறுசதப் பேப்பரும் பத்திச்சதம் பேப்பரும் வேண்டிப்படிச்சுப் பழுதாகிருங்கள்.

பத்: ஓம் மாஸ்டர். முழுக்க முழுக்க வம்புச்செய்தியளைத்தானை போடுருங்கள்.

'அவளை அவன் தூக்கினுன்-இவள் அவனேடை ஓடினுள்-பத்துவயதுச் சிறுமிமீது பலாத்காரம்- தட்டெழுத்துப் படிக்கப்போய் தொட்டுவிளையாடினுர்-பஸ் நிலையத்தில் காதலித்தாள்-பல்லிளித்தார்.

சுந்: இந்த மாதிரியான செய்திகளைப்படிக்கிற மாணவர்கள் தாங்களும் அப்படிச்செய்தால் என்ன

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் நாடக வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் தந்துதவுங்கள்'

## மன்றுடி அரங்க தலைவரின் வேண்டுகோள்

கடந்த சில காலமாக உயர்ந்த பல நாடகங்களை மேடையேற்றித் தமிழ்மக்களின் பாராட்டைப்பெற்று வரும் மன்றுடி அரங்கின் தலைவரான நவாலியூர் சோ. நடராசன் பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

''தமிழ்ப் பெருமக்களது பண்பாட்டின் உயர்ந்த அம்சமாக விளங்குவது அவர்களுடைய நாடகக்கலை. நாடகக்கலை, நடனம், நடிப்பு, இயற்றமிழ் இசை, ஓவியம் என்ற பல கலைகளைத் தன்னகதே அடக்கியிருப்பதால் இக்கலை ஈழத்திலேயும் தென்னகத்திலேயும் வளர்ச்சி குன்றியிருக்கிறது. அதனைப்பழையமரபுப் படி அறிந்து மறுமலர்ச்சி அடையச் செய்வதற்கும் புதிய போக்குகளை அனுசரித்து அதை வளர்ப்பதற்கும் கலைஞராகிய நாமும், ரசிகப் பெருமக்களும் ஊக்கங்கொள்ள வேண்டிய கட்டம் வந்துவிட்டது. தொல்காப்பியர் துவங்கி நாவலர் பெருமானீருக தமிழ்ப் பேரறிஞரெல்லாரும் வளர்த்துவந்த நாடகக்கலை கோலம்மாறி அழியாது காப்பாற்றவேண்டியது நமது கடமை.

### நாடகக்கலையின் மகத்துவம்

முன்னெல்லாம் அரசரும் பிரபுக்களும் போற்றியகலைகளுக்கு இன்று ஆதரவு அளிப்பவர் மக்களே. மக்களின் ஆதரவு அவசியமாகிறது. நாடகக்கலை மக்கள் கலை என்கிறார்பரதமுனிவர். கல்விகேள்விகளில் குறைவுள்ள மக்களுக்கு ஒரு வேதம் வேண்டுமென்று பிரமாவைக் கேட்டபோது அவர் நாடகவேதத்தை ஐந்தாம் வேதமாக அருளி இதனை மக்களிடம் பரப்ப ஆணையிட்டாராம் பரத முனிவருக்கு. எண்ணிறந்த விலாசங்களும், நாடகங்களும், அழிந்துபோன நாட்டுக்கூத்துகளும் இதைத் தான் வற்புறுத்துகின்றன. நாடகம் மக்கள் கலை மக்கள் அறியவேண்டியதையும் அறியத்தக்கதையும் நாடகக் கலைமூலம் அறிவுறுத்தலாம்.

### ரூ 5 லட்சம் தேவை

எங்களுக்கு இன்று நாடகத்தை வளர்க்கநல்லதொரு நாடக அரங்கு கிடையாது. ஒத்திகைகள் ஒழுங்காக நடத்த வசதிவாய்ந்த அரங்கில்லை. நடிப்புத்திறமைக்கோ நம்மிடைகுறைவில்லை. சங்கீதப்புலமைக்கோ குறைவில்லை. நாடக ஆசிரியர்களும் தோன்ற ஆரம்பித்துவிட்டார்கள். இவையனைத்தையும் ஒன்று சேர்த்துத் தொழிற்படுத்தி இயக்கப் பணமில்லை. நல்லதொரு நாடகஅரங்கு அமைப்பதானுல் குறைந்தது ஐந்துலட்சம் ரூபாய் தேவை. நடிகர், கலைஞர் முதலியோருக்குப் பணம் கொடுத்து அவர்கள் கலைத்திறனை வளர்க்காவிட்டால் நாடகம் வளராது. இவற்றையெல்லாம் உத்தேசித்து நாட்டிலுள்ள பல பெரியார்களின் வேண்டுகோளுக்கிணங்கி மன்றுடி அரங்கு தமிழ் நாடக இயக்கத்தைக் கடந்த பிப்ரவரி மாதம் 9-ம் திகதி ஆரம்பித்தது. இன்று அந்த இயக்கம் பலருடைய ஆதரவினுலும் பரவிவருகிறது. அடுத்தமாத இறுதியில் தமிழ்நாடகஇயக்கத்தினர் ஒரு ரூபாய்நிதியை ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

### ஒரு ரூபாய்

''அதாவது இந்தநாட்டிலேயுள்ள ஒவ்வொருபிரசையையும் இந்நிதிக்காக ஒருரூபாய் தரும்படி கேட்கப்போகிறோம். தமிழ்நாடகம் உயிரோடு இருக்கவிரும்பும் அனைவரும் ஒரேயொரு ரூபாய் கொடுத்து இந்த முயற்சிக்கு ஆதரவளிக்குமாறு தமிழ் மக்களையும், முஸ்லிம்மக்களையும், சிங்கள மக்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். நிதியைநிர்வகிக்க ஒரு நிர்வாக சபையும், தர்மகர்த்தாக்கள் சபையும் உருவாக்கப்பட்டுள்ளன. கலையின் பேராலும் கல்வியின் பேராலும் இந்த வேண்டுகோளை விடுகிறேன். எல்லாருடைய ஆதரவையும் வேண்டுகிறோம்'' என்று இந்த வேண்டுகோளில் கேட்டுக்கொண்டுள்ளார்.




## வி. கே. ராமசாமியை நாகேஷ் ஏமாற்றிஞர்!



வி. கே. ராமசாமி மனைவியிடம் நாகேஷ்கோள்மூட்டிஞர்.

### நாகேஷ் திட்டம்

தபால்காரராக வேலைபார்த்துவந்தார் நாகேஷ். மனேரமா ஒரு நர்ஸ். இருவருக்கும்காதல்ஏற்பட்டுவளர்ந்து வந்தது.

ஆஞல்இது மனேரமாவின் அப்பா வி. கே. ராமசாமிக்குப்பிடிக்கவில்லை. எனவே அவரை பழிவாங்க நாகேஷ் திட்டமிட்டார்,

### கிழவன் வேஷம்

அதன்படி ஒருநாள் கிழவன் வேஷம் போட்டுக் கொண்டு வி. கே. ராமசாமியின் வீட்டுக்கு வந்தார். வி கே. ராமசாமியின் மனைவியிடம் அவருக்குஇன்னெரு மனைவியிருப்பதாக கூறிஞர். அவர் கூறியதை உண்மை என்று நம்பிய வி.கே ராமசாமியின் மனைவி கணவனுடன் சண்டைபோட்டார், இதைப்பார்த்து நாகேஷ் நகைத்தார்,

நாகேசின் வேலை எப்படியோ வி.கே. ராமசாமிக்கு தெரிந்துவிட்டது. கிழவன் வேடத்தில் வந்தது நாகேஷ் தான் என்று தெரிந்து கொண்டார். அவரும் ஒரு திட்டம் தீட்டிஞர்.

### அன்னமிட்டகை

அதன்படிசிறிது நேரத்தில் அவரும்ஒரு கிழவனைப்போல வேடம் போட்டுக்கொண்டு வந்தார். அவரைப் பார்த்த மனேரமா''யாரு இந்த முன் பல்லுக்கிழம்''என்று சிரித்துக் கொண்டே கேட்டார். நாகேஷ் ஒன்றும் புரியாமல் தடுமாறிஞர்.

நாகேஷ் சமாளித்துக் கொண்டு''நீ யார்''என்று கேட்க''நான்தாண்டா உன் அப்பன்'என்றுர் வி.கே.ராமசாமி.

இக்காட்சி ராமச்சந்திரா புரொடக்சன்சாரின்''அன்னமிட்டகை''படத்திற்காக படமாக்கப்பட்டது எம். கிருஷ்ணன் டைரக்டு செய்தார்.

## சினிமாவை 'காப்பி' அடிக்காமல் சொந்தப் பாணியில் ரசிகர்களை கவர்ந்த 'மனக்கோயில்!'

காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றத்தினர் பெரிய விழான் கலைவிழாவில் 'மனக்கோயில்' என்ற சமூக நாடகத்தை அரங்கேற்றி ரசிகர்கள் மனதைப் பெரிதும் கவர்ந்தனர். மீண்டும் மேடையேருதோ என்ற ஆவலை ரசிகர்கள் மனதில ஏற்படுத்திவிட்டனர்.

அமெரிக்காவிலே பட்டம் பெற்றுத் திரும்பிய டாக்டர், தான் சிகிச்சை அளிக்கும் ஒரு குருட்டுப் பெண்ணைக் காதலிக்கிருர். தன் தம்பிக்காகவே தன் வாழ்வைத் தியாகம் செய்து தன் கண்களைக்கூட இழந்துவிட்ட டாக்டரின் குருட்டு அண்ணன் அதனைத் தடுக்கிருர். தன் தங்கைக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கும் குருட்டுப்பெண் சாந்தியின் அண்ணனும் அக்காதலைத் தடுக்கிருர்: ஆஞல் காதலோ வளர்கிறது. இடையில் பல இன்னல்கள் அது, டாக்டர் மூலம் தன்கண்களைப்பெற்ற சர்ந்தி வாழ்வை மட்டும் பெறவில்லை. ஆஞலும்அவள் தன் நன்றிககடனை டாக்டரின் குருட்டு அண்ணனுக்குத் தன் கண்களைத் தானம் செய்துவிட்டுத் தன்வாழ்வை முடித்துக்கொள்கிருள். இதுவே நாடகத்தின் மையக்கரு.

ஆறுகாட்சிகளோடு இரண்டு மணித்தியாலங்கட்குத் தொடர்ந்து நிகழும் இந்த நாடகம் ஆறு பாத்திரங்களைக்கொண்டே அமைக்கப் பட்டிருக்கிறது. நடிகர்கள் யாவரும் தமக்குள் போட்டியிடுவதுபோல் இதில் நடித்துள்ளனர். அவர்கள் திறமையாக நடிக்க கதாசிரியரின் திறமையே முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது.

முற்றிலும் இளைஞர்களைக் கொண்டு மிகச் சிறப்பான முறையில் மனக் கோயிலை ஆக்கி அளித்த காங்கேசன் துறை இளந்தமிழர் மன்றத்தினரின் பதினேழாவது தயாரிப்பு இது என்பதை அறியும்போது அவர்களை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

### நாடக விமர்சனம்

சினிமா நடிகர்களையும் சினிமாவையும் அப்படியே பிரதிபண்ணி நடிக்கும்இந்த நாட்களில் தமக்கெனச் சொந்தப்பாணியை வகுத்துக்கொண்டு மனக்கோயில் நடிகர்கள் நடித்தமைபோற்றுதற்குரியது. டாக்டராக நடித்த செல்வன் சதானந்தனும் குருட்டு அண்ணனுக நடித்த செல்வன் விக்னேஸ்வரனும் தம்பியின் காதலைத் தமையன் கண்டித்த வேளையிலும், தம்பியைத் தன் கைத்தடியால் அடித்துவிட்டு பாச உணர்வால் துடித்த வேளையிலும் நடிப்பின் சிகரத்துக்கே சென்றுவிட்டனர்!

சாந்தியாக நடித்த செல்வன் லிங்கவேலாயுதமும், சாந்தியின் அண்ணனுக நடித்த செவ்வன் கனக. மகேந்திராவும் தன் தங்கை ஏமாற்றப்பட்டுவிட்டாள்

(10-ம் பக்கம் பார்க்க)


# தம்பி அன் கோ.,

284, K. K. S. ரேட், வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 11 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 12 சத வீதம் |
| ரூ. 10,000/-க்கு மேல் | — | வருடம் 12 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

வட்டி ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கனிப் பொருள் பல தந்த விஞ்ஞானி

— கலாநிதி க. குலரத்தினம் —

(புவியியல் பேராசிரியர், இலங்கைப் பல்கலைக் கழகம்)

ஆசிய தொல்பொருளாராய்ச்சியில் இரண்டாவது சர்வதேச மகாநாடு இம்மாதம்22-ந்தேதி ஆரம்பமாகியுள்ளது. தொல்பொருளாராய்ச்சிக்குத் தன் வாழ்நாளின் பெரும் பகுதியை அர்ப்பணித்த டாக்டர் ஆனந்தா செ. குமாரசாமி பிறந்ததினமும் ஆகஸ்ட் 22 ஆகும். டாக்டர் ஆனந்தகுமாரசாமியின் பிறந்த தினமும் தொல்பொருளாராய்ச்சி மகாநாடும் ஒரே தினத்தில் வந்துள்ளமை எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தரவல்ல சம்பவமாகும்.

## தலைசிறந்த மேதை

'தற்காலத்தின் தலைசிறந்த அறிஞர்களுள் ஒருவரான ஆனந்த குமாரசாமி சர்வதேச கலாச்சார அறிவும் கலைக்களஞ்சிய அறிவும் ஒருங்கே கைவரப்பெற்ற மேதை. லண்டன் பல்கலைக்கழகம் உருவாக்கிய விஞ்ஞானிகளில் முக்கியத்துவம் வாய்ந்தவருமாவர். கீழைத்தேச கலைகளில் சிறந்து விளங்கிய இவர் இந்திய கலை, கலாச்சாரம் மட்டுமன்றி அரேபியா, பாகிஸ்தான், சீனு, யப்பான் ஆகிய நாடுகளின் கலை கலாச்சாரங்களிலும் நன்கு தேர்ச்சிபெற்று அவைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவராகத் திகழ்ந்தார்.''

''இக்காலத் தலை சிறந்த அறிஞர்களுள் ஒருவ'' ரென அவரைக் குறிப்பிடும் டாக்டர் மலலசேகரா அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில்:- ''டாக்டர் ஆனந்தகுமாரசாமியின் ஆராய்ச்சிகள் உலகப் புகழ் பெற்றவை மட்டுமன்றி யாவராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கவைகளாகும்

மொழிகள் பலவற்றின் வரலாறுகள் இசை, தொல்பொருளாராய்ச்சி தற்கால அரசியல் சமூகவியல் சம்பந்தமான பிரச்னைகள் ஆகிய சகல துறைகளையும் இவரது ஆராய்ச்சிகள் அடக்கியுள்ளன. வரையறையில்லாத அவரது ஆக்கவேலைகள் பெருமதிப்புக் குரியன.'' இவர் இறப்பதற்கு முன்னர் வெளியிடப்பட்ட புத்தகங்களின் வரலாறும், விபரமும் பற்றிய வெளியீட்டிலிருந்து 500க்கு மேற்பட்ட ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டார் என்பது அறியப்பட்டது. பின்னர் அவர் வாழ்ந்த 5 வருட காலப் பகுதியிலும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. கலைக்கும் கலாச்சாரத்திற்கும் அருந்தொண்டாற்றிய இத்தொண்டர் 1916-ம் ஆண்டிலிருந்து 1947-ம் ஆண்டு வரை பொஸ்ரனிலுள்ள நுண்கலை நூதனசாலையில் ஆசியப் பகுதிக்கு அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

## கனிப்பொருள் ஆராய்ச்சியும் கண்டுபிடிப்புகளும்

லண்டன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்தில்டாக்டர் பட்டம்பெற்ற முதல் இலங்கையர் டாக்டர்ஆனந்தகுமாரசாமி.பயிற்சிபெற்ற அவர் ஒருபுவிச்சரிதவியலாளர். 26 வயதில் இங்கிலாந்தில் தனது கல்வியை முடித்துக்கொண்டு 1905-ல் இலங்கைக்குத் திரும்பினர். இலங்கை திரும்பிய இவர்கனிப்பொருளியல் தொல்பொருளாராய்ச்சி ஆகியவற்றில் தானுகவே ஈடுபட்டார். இத்துறையில் அவரது விஞ்ஞான கண்டுபிடிப்புகள் லண்டனிலும், இலங்கையிலும் கருத்துக்களைத் தூண்டி இலங்கையில் கனிப்பொருள் ஆய்வை ஆரம்பிப்பதற்கு அடிகோலின.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கனிவள ஆய்வின் அதிபர் பதவி ஆனந்தகுமாரசாமிக்கு வழங்கப்பட்டது. அவர் நாலு வருடங்களுக்கு அப்பதவியை ஏற்றுக் கொண்டார். இக்கால இறுதிப்பகுதியில் அவர் இலங்கையை விட்டுச் சென்றுர். புவிச்சரிதவியலில் ஆழ்ந்த அனுபவம் பெற்ற டாக்டர் ஆனந்த குமாரசாமி தனது நேரத்தின் பெரும் பகுதியை வெளி ஆய்வில் செலவழித்தார். ஒவ்வொரு இடங்களுக்கும் கால்நடையாகவும், மாட்டுவண்டி மூலமும் பிரயாணம் செய்தும், மலைப்பிரதேசங்கள், காடுகள் எங்கும் கூடாரமடித்துத் தங்கிநின்று ஆய்வுகள் நடத்தினுர். இவ்வாறு கடும் உழைப்புமூலம் நடத்திய ஆய்வினுல் இந்நாட்டு மக்கள் பாறைகள், கனிப்பொருள்கள் ஆகியவற்றை நன்ருக அறிந்துள்ளதோடு அவற்ருேடு நெருங்கிய தொடர்புடையவரானுர். இதுதான் கலை, தொல்பொருளியல், சமயம், மனிதஇனவரலாறு, சமூகவியல்போன்ற இன்னேரன்ன பல புதிய துறைகளில் ஆரம்பத்திலேயே இவர் வெற்றியீட்டியமையின் இரகசியம் உள்ளது.

குறுகியகாலப்பகுதியில்புவிச்சரிதவியல், கனிப்பொருளியல் ஆகிய துறைகளில் செய்த ஆக்கவேலைகள், கண்டுபிடிப்புகள் ஆகியன அவருக்குப் பின்னர் கடந்த 60 வருட காலப்பகுதியில் இத்துறைகளில் ஈடுபட்டவர்களின் வேலைகளோடுஒப்பிடும்போது மிகக் கூடுதலாகவே காணப்படுகிறது.

# டாக்டர் ஆனந்த கே. குமாரசாமி

கனிவள ஆய்வு சம்பந்தமான அவரது நிர்வாக அறிக்கைகளைவிட டாக்டர் ஆனந்தகுமாரசாமி பிரித்தானிய புவிச்சரிதவியல் சங்கத்தின் புவிச்சரித சஞ்சிகை லண்டன், பிரித்தானிய சங்க அறிக்கைகள், கனிவளவியல் சஞ்சிகை, இன்பீரியல் இன்ஸ்டியூட் புலற்றின் ஸ்போலியாசிகானியா, 'ரேயல் ஒசியாற்றிக் சங்கத்தின் சஞ்சிகை முதலிய பல சஞ்சிகைகளில் அதிகாரபூர்வமான பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவைகளைவிட அவரின் ஆக்கவேலைகளில் குறிப்பிடத்தக்கதாக சுரங்கவேலைகளில் சிங்களவர்கள் கையாளும் சொற்களையும் வைரங்களின் பெயர்களையும் சேர்த்து உருவாக்கிய சொற்தொகுதியும் இலங்கை புவிச்சரிதவியல் நூல்களின் வரலாறும்அவற்றின் விபரமும் பற்றியநூலும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

டாக்டர் ஆனந்தக்குமாரசாமியின் கண்டுபிடிப்புகளில் இலங்கையின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இரும்புத்தாது, தூரியம், அப்பிரகம்; சந்திரவட்டக்கல், தங்கம் முதலியன உள்ளன

புவிச்சரிதவியலாளர் என்ற வகையில் அவரைப் பற்றி எவ்வளவு சுருக்கமாகக் குறிப்பிடவிரும்புகிறவர்களும் அவரதுகனிப்பொருள் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை. 1904-ம் ஆண்டில் புதியதொரு கனிப்பொருளைக் கண்டுபிடித்த டாக்டர் ஆனந்தகுமாரசாமி தற்புகழை விரும்பாதவர் ஆதலால் தனது பெயரடியாகப் பிறந்த ஒருபெயரை அந்தக் கனிப்பொருளுக்கு வைக்கவில்லை. தங்கள் கண்டுபிடிப்புகளுக்குத் தங்கள் பெயரை வைப்பது சர்வ சாதாரணமாகவிருந்தபொழுதும் இவர் தான் கண்டுபிடித்த கனிப்பொருளில் அதிகம் காணப்பட்ட ரசாயனப் பொருளான 'தோரியம்' என்பதை முதலாகவைத்து அக்கனிப் பொருளுக்கு 'தோரியனைற்' எனப்பெயர் இட்டார்.

## ஞாபகச் சின்னம்

இலங்கைப் புவிச்சரிதவியலாளர்கள் புவிச்சரிதவியலுக்கருந்தொண்டு செய்த டாக்டர் ஆனந்தகுமாரசாமியை என்றென்றும் நினைவு கூருவதற்காகவும் அவரது பெயர் அழியாது வழங்கி வரவும் டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி புவிச்சரிதவியல்சங்கத்தை நிறுவியுள்ளார்கள். ஆனந்த குமாரசாமிக்குப்பின்னர் புதியதொரு கனிப் பொருளைக் கண்டுபிடித்த புவிச்சரித ஆராய்வாளரான திரு. டி. பி. பட்டியாராய்ச்சி டாக்டர் ஆனந்தக்குமாரசாமியின் ஞாபகமாக அதற்கு 'ஆனந்தைற்' எனப் பெயரிட்டுள்ளார். இவை யாவும் இங்குள்ள புவிச்சரிதவியலாளர்கள் டாக்டர் ஆனந்தகுமாரசாமிக்கு நன்றியறிதலுடையவராகஅவர் பெயரைஅழியாதுகாப்பாற்ற வேண்டியவர்களாக உள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

திருக்கோணேஸ்வரம்—ஆராய்ச்சி கட்டுரை

# விஜயன் முதல் தேவநம்பியதீசன் கா[...] இலங்கையை ஆண்டவர்கள் இந்து ம[...]

பண்டித ரத்தினம்
சி. எஸ் நவரத்தினம்

புத்தளம் மாவட்டத்தில் 1926-1957 வரை கண்டு பிடிக்கப்பட்ட எலும்புகள், மண்டையோடு ஆகியவற்ருேடு கூடிய புதைக்கப்பட்ட பொருட்கள், கந்தரோடையில் 1918-1919 வரை சேர் போல் இபீரிஸினுல் கண்டு பிடிக்கப்பட்ட துளைகள் பொருந்திய நாணயங்கள், புராணங்களும் 1888-ல் முல்லைத்தீவில் உள்ள கிணறென்றில் கிண்டி எடுக்கப்பட்ட துளைகள் பொருந்திய நாணயங்கள் அண்மையில்வடகிழக்கு கரையோரப்பகுதியில் உள்ள கதிரவேலியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள 'டொமெனட்' படைகள் ஆகியனவும் கோணேசர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டனவும் இக்கோணேசர் ஆலயம் கலியுகம் 512-ல் கட்டப்பட்டது என்பதற்கு ஆதாரமளிப்பவைகளாக வுள்ளன. இதை யாவும் புகழ்பெற்ற இந்துசமவெளி நாகரீகத்தை யுருவாக்கிய மக்களை இந்தியா எங்கும்பரவிப்பின்னர் இலங்கையிலும் வந்து பரவியுள்ளனர் என்பதையும் குறிப்பிட்டுள்ளர். ஹைதராபாதத்தில் சரித்திர காலத்துக்கு முன்னர்இருந்த கோபுரங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில்காணப்பட்ட மட்டாண்டத்துண்டுகளும் இந்துநதிப்பள்ளத்தாக்கில் இருந்து மக்கள் இந்த மாவட்டங்கள் வழியாக இலங்கைக்குவந்தனர் என்பதை எடுத்துக்காட்டியுள்ளன. கோணேசர் ஆலயம் 512 கலியுகத்தில் நிறுவப்பட்டது என்பது புராணங்களில் மிகைபடுத்திக் கூறப்பட்டது அல்லவென்பது மேற்குறிப்பிட்ட காரணங்களால் தெளிவாகிறது.

## தமிழ்க் கல்வெட்டுகள்

திருக்கோணேஸ்வர ஆலயத்தை 1624-ம் ஆண்டில் கொன்ஸ் தான்தைன் டீசா தகர்க்கமுன்னர் அங்கு காணப்பட்ட கல்வெட்டில் இக்கோவிலின் வரலாறு கூறப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டை இங்கிருந்த ஒரு கல்விமான் மொழிபெயர்த்து நீதிபதியொருவரினுல் அதை உறுதிப்படுத்தி போர்த்துக்கேய மன்னனுக்கு அனுப்பினுர். அந்த மொழியாக்கம் பின் வருமாறு:

''லங்காவின் சக்கரவர்த்தி மாணிக்கராஜா இந்த ஆலயத்தை வீதிய - மேல்-மண்டப கடவுளுக்கு நிறுவினுர். இதை... (திரும்பத்திரும்பவருவதால் கி. மு. 1300ல் நிறுவினுர் எனலாம்) பிரான்ங்ஸ் என்ற நாட்டவர்கள் இக்கோவிலை அழிப்பர். திரும்பவும் இக்கோவிலைக் கட்டுவதற்கு ஒரு அரசனும் இருக்கமாட்டான்'' லிஸ்பனிலுள்ள அஜீடா வாசிகசாலையில் கொடெக்ஸ் 51-VIII-40-ல் இம்மொழி பெயர்ப்பு காணப்பட்டது. (JCBRAS-Vd. xxx No. 80p.449)வீதிய மேல் மண்டா என ஒரு கடவுள் இல்லை. இதன் தமிழ் சொற்கள் வீதியும், மேற்றளியும், மண்டபமும் (Vedium, Matthadium, Mamdapamum) இக்கோவிலைக் கட்டியவர் அசன்றவீதியைய...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...டலிலே மீன்
எண்ணிக்கை பெருகி
மன்னவா. அவற்
தால்லை பொறுக்க
ல்லை. கரை மோதும்
டனே அள்ளுண்டு
ஒதுங்கி அவை
வுக்குள்ளேயும் குதி
ம்போலிருக்கிறது.
படி கொளுத்திப்
ாலே ஆயிரமாயிர
செத்து மிதக்கின்
துஷ்ட நிக்கிரகம்
து எங்களைக்
வேண்டும், பிரபு''-
எந்தக் கரையோரக்
கள் எக்காலத்தில்
மன்னரிடம்
முறையிட்டிருப்
ளா நாமறியோம்.
வடகடலில் 'கஜ
என்று பெயர் வைத்
ண்டு ஒரு காவலர்
ரோந்து சுற்றிவரு
ப் பத்திரிகைச்
தெரிவிக்கிறது. இல
அரச கடற்படைக்
ஒன்றுக்கு 'கஜபாகு'
பெயராம். கள்ளக்
ற்றத்தையும் கள்ளக்
லயும் தடுப்பதற்
ந்தக் கஜபாகுதான்
டையுடன் வடகட
திக்விஜயம் செய்தி
. முன்பொரு சம
ரெங்கும் கண்ணகை
க்குப் பொங்கலும்
ட்டு விழாக்கொண்
பங்குனி சித்திரை
ளிலும் வடகடலை
களின் முற்றுகையி
பாதுகாக்கும் நோக்
தே கஜபாகு படை
பக்கம் தலைகாட்டி
ால்- இவர்களுக்
ந்திரகா... கஜபாகு
னவ்வித சம்பந்த
க்காதென்பது இல
சரித்திரம் தெரிந்த
ஊகித்தறிந்து
க்கூடியதொன்று.

செங்குட்டுவன்
த் தெய்வத்துக்குச்
டி விழா எடுத்த
அவ்விழாவிற்கு இல
லிருந்து சென்ற
மன்னனே கண்
பாட்டை ஈழத்
ப்பினுன் என்பது
ம். எந்த நாட்டிலி
த்தெய்வ வழிபாடு
டுக்கு பக்திசிரத்தை
கொண்டுவரப்பட்
அதே அயல் நாட்

டுக்கு எதிராக அத்தெய்வத்துக்கு விழாக் கொண்டாடும் நாளில் போர்க்கோலம் கொண்டு இந்திய சமுத்திரத்தை முற்றுகையிடும் இந்த நவீன கஜபாகு அந்த ஒரிஜினல் கஜபாகுவாக எப்படி இருக்க முடியும்?

கஜபாகுவா கயவாகுவா? எப்படியும் பொருள் ஒன்றுதான். கந்தபுராணம் சிங்காசுரனையும் கயமுகாசுரனையும்பற்றிக் கதை கூறுவது போல மகாவம்சம் என்ற சிங்களர் வரலாற்று நூல் சிங்கவாகுபற்றியும் கயவாகுபற்றியும் கூறுகிறது. கயவாகு என்ற பெயரில் ஒருவர் அல்ல இருபேர் சரித்திர காலத்தில் மன்னர்களாக அரசாண்டிருக்கிறுர்கள். சேரன் செங்குட்டுவனின் மதிப்புக்கு ஆளான கயவாகு தவிர, மற்ற கயவாகு எக்காலத்திலாவது கடல் கடந்து இந்தியா சென்றதாகவோ, கரையோரக் காவல் புரிந்ததாகவோ அல்லது மீன் பிடித்ததாகவோகூட வரலாறு இயம்பவில்லை.

மகாவம்சத்தில் கஜபாகு என்னும் பெயருடைய இருவர் குறிப்பிடப்படுகின்றனர். முதல் கஜபாகு கி. பி. இரண்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் அரசாண்ட

## பசுந்துளிர்

வன். அவன் காலத்துக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு மற்ருெரு கஜபாகு அரசு புரிந்தான். இவ்விரு அரசர்களில் முதல் கஜபாகுவே செங்குட்டுவன் காலத்தவன் ஆதல் வேண்டும் என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்சொள்கை. இதனுல் செங்குட்டுவன் அரசாண்ட காலம் இரண்டாம் நூற்ருண்டின் பிற்பகுதி என்பதும், சிலப்பதிகாரம் குறிப்பிடும் 'கடல்சூழ் இலங்கை கயவாகு மன்னன்' முதலாம் கஜபாகுவாகத்தானிருக்க வேண்டும் என்பதும் தெளிவாகிறது

இனி நமது காலத்தில் தோன்றியிருக்கும் இந்த மூன்ருவது கயவாகுவைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?

சரித்திரகாலத்து கஜபாகு மன்னர் நிலைதான் இன்று இப்படித் தலைகீழாகிப்போயிருக்கிறதென்ருல், புத்த மதத்தை முதன் முதலாக இலங்கைக்குக் கொணர்ந்து பரப்பியதாக மகாவம்ச காலம் தொட்டு ஒப்புக் கொள்ளப்பட்ட மகிந்தன் நிலையும் புதியதொரு ஆராய்ச்சிப்படி தலைகீழ்ப பாடமாகிப்போகிறது. மகிந்தனும், சங்கமித்தையும்

இலங்கை வந்த விஜயன் முதலில் குவேனி என்பாளை மணந்து பின் அவளைக் கைவிட்டு மதுரைப்பாண்டியன் மகளை மணந்துகொண்டானென்ற சரித்திரக் கூற்றும் ஒப்புக்கொள்ளக் கூடியதல்லவாம், அது வடஇந்திய 'மதுரா' வாகத்தானிருக்க வேண்டுமாம். இலங்கையின் ஆரம்பசரித்திரகாலம் தென்னிந்தியாவுடனன்றி வட இந்

செங்கடகல் ஆயிற்றென்றும், இன்றைய கறுவாத் தோட்டம் முன்பு குருந்துவத்தையாக குருந்து மாவட்டமாக இருந்ததென்றும் அவர் அடுக்கிக்கொண்டே போக, உதவி ஆசிரியர்கள் தங்கள் வேலையையும் மறந்து அவர் வாயைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்துவிடுவார்கள்.

அடுத்தவீட்டுதம்பிப்பயல் என்ன சொல்கிருன் தெரி

# தலைகீழ்ப் பாடமாகும் சரித்திரம்

அசோகமன்னனின் பிள்ளைகளே அல்லர் எனவும் அசோகனுக்கு இப்பெயர் தரித்த பிள்ளைகள் இருந்ததாக வடநாட்டில் எங்கேயும் ஆதாரம் கிடைத்திலது எனவும் அசோகன் எக்காலத்திலும் அதுமாதிரி ஒருதூது இலங்கைக்கு அனுப்பினுன் என்பதற்குச் சான்றுகளே கிடையாதென்றும் வடநாட்டில் யாருமே இவர்கள் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டியிருக்கவில்லை என்றும் இந்தப் புதிய ஆராய்ச்சி முடிவு காட்டுகிறது. காலஞ்சென்ற குணசேகரத்தார் எழுதிய நூல் ஒன்றில் தான் இது பற்றியதொரு குறிப்பு வாசித்தேன். இலங்கை மன்னன் தேவநம்பிய தீசன் அசோகசக்கரவர்த்தியின் நண்பனுயிருந்தானும்.

மகிந்தனை மிகுர்தலைக் காட்டில் முதல்தடவையாக தேவநம்பியதீசன் சந்தித்ததன் பலனுக புத்தமதத்தைத் தழுவி அதன்பின் நாடெங்கும் புத்தமதத்தைப் பரப்பலானுன் என்பதுதானே நாம் படித்த சரித்திரபாடம். மகாவம்சத்தில் கூட அப்படித்தான் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது.

தியாவுடன்தான் பின்னப்பட்டிருந்ததாம்.

இப்படியாக ''மகாவம்சத்தில் இடம்பெற்ற மகாபாரதக்கதைகள்'' என்ற டொக்டர் ஜி. ஸீ. மெண்டிஸின் ஆராய்ச்சிக் கட்டுரைக்குப் பதிலளித்து குணசேகரத்தார் வெளியிட்ட ஒருசிறு நூலில் இதுமாதிரி பல ருசிகரமான செய்திகளை அவர் குறிப்பிட்டு சிங்கள சரித்திர ஆராய்ச்சியாளர்களைப் பிடித்தாட்டும் ஆரியமாயையைக் கிண்டல்செய்கிறுர்.

### கொழுகொம்பு

கோப்பாய் குணசேகரத்தார காலமாவதற்கு முன்பு எப்பொழுதாவது 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வருவார். அப்பொழுது ஆசிரியர்குழாம் அவரைச் சுற்றிச் சூழ்ந்துவிடும். அவரது உரையாடலில் சிந்திய சில பொறுக்குமணிகள் தருகிறேன்.

கொழும்பு என்ற பெயர் அவ்வூருக்குஎப்படி வந்தது தெரியுமா? மகால்லம் என்றிருந்த பெயர்தான் நாளடைவில் மருவி கொழும்பு ஆகியதாம். ஒரு காலத்தில் கொல்லம் என்று மறுபெயர் பூண்ட மலையாளநாட்டவர்கள இவ்வூரில் பெரும்பகுதியினராகக் குடியேறி வசித்தார்களாம். கொச்சியார் என இன்னெரு பெயரால் அழைக்கப்பட்ட இந்த மலையாளத்தார் அதிகம்பேர் வசித்த பகுதிதான் கொச்சிக்கடை என்று இன்றைக்கும் நிலைபெற்றிருக்கிறதாம்.

அப்படியானுல் நீர்கொழும்புபற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டால் ''அதற்கு வேருெருபொருள்தம்பிமாரே. நீர்கொழும்பு என்ருல் நீர்வளைவு. நீர்கொம்பு என்றிருந்ததுதான் நாளடைவில் நீர்கொழும்பு ஆகிவிட்டது'' என்று விளக்கம் தருவார். இப்படியே ஒவ்வொரு ஊருக்கும் சொல்லுவார். தெய்வேந்திர முனை என்று அழைக்கப்படும் டொன்ட்ராமுனை தென்னவன் துறையாகவிருந்ததென்றும், செங்காட்டன் கல்லாக இருந்ததே இன்று

யுமா? கொழுகொம்பு என்பதுதான் நாளடைவில் மருவிக் கொழும்பு ஆயிற்று என்கிருன்.

ஏனடாதம்பி அப்படி என்றுகேட்டால் கொழும்பில் வேலைபார்க்கும் வாலிபர்களைத்தானே தமிழ் ன் னியர் தங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு தாவிப்படருவதற்கான பற்றுக்கோடாக கொழுகொம்பாக எண்ணியிருக்கிறுர்கள் அதனுல் கொழுகொம்புதான் பின்பு கொழும்பு ஆக மாறியிருக்க வேண்டும் என்று வியாக்கியானம் தருகிருன். இவனுடைய அக்காள் ஒருத்திக்கும் கொழும்பு உத்தியோக மாப்பிள்ளை ஒருவருக்கும் விரைவில் கல்யாணம் ஆக

## எழுதுவது மணிபுறவம்

விருக்கிறதாம். அதனுல் அக்காள் விரைவில் தன்னை விட்டுப் பிரிந்துபோய்விடுவாளே என்ற விசாரந்தான் இவனுக்கு இவ்விதமான ஆராய்ச்சிக்கோளாறு உண்டுபடுத்தக்காரணமாயிருக்க வேண்டும்.

அதெல்லாமில்லையடா தம்பி. கொழும்பு என்றிருந்ததுதான்நாளடைவில் மருவி கொழும்பு ஆகிவிடக்கவேண்டும் என்று அவனுக்குச் சமாதானம் கூற முயன்ருல் ''ஐயோ என்அக்காள் என்ன சோககாய் குழம்பு வைப்பாள் மாமா'' என்று விம்மி வெடித்து அழத் தொடங்கி விடுகிருன்.

'ஈழநாடு' தினசரி நடத்தி வந்த முதலெழுத்து விகடப் போட்டியில் சிலமாதங்களுக்கு முன்பாக இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் பற்றி விகடவாக்கியம் அமைக்கும்படி பத்திரிகை ஆசிரியர் கேட்டுக்கொண்டதற்கு இசைந்து ஒரு நேயர் ஒரேமூச்சாக 17 வாக்கியங்களைத் தொடுத்து அனுப்பிய ஒரு வாக்கியத் தொகுப்பை ஒருநிமிடம் படித்துச் சுவைக்கிறீர்களா? 'மணிப்புறவம்' பழைய எழுத்துப் பிரதிக் குவியலைக் கிளறிய போது அதன் பார்வையில் பட்டது இது;-

இறைவனுர் ஒலிவடிவக் கூடாரம்.

இம்மைக்கு ஒளிபரப்பும் கூடமுமாம்.

இல்லையென ஒருநாளும் கூருர்.

இருப்பதையே ஒளியாமல் கூத்தடிப்பார்.

இப்பொருது ஒரு கூட்டிய இசை

இனி ஒருக்கால் கூட்டு வாத்தியம்.

இரவு ஒன்பது மணிக்குக் கூட்டுப்பிரார்த்தனை.

இப்படியும் ஒரு கூட்டணி

இவ்விதமும் ஒரு கூட்டுக் கறி

இத்தனையும் ஒரு கூடரக்கு; வான்குரு (ள)விக் கூண்டு

இமையானன் ஒட்டிசுட்டான் கூட்டுறவு

இலுப்பைமரம் ஒட்டகம் கூழ்ப்பானை

இராவணனும் ஒருநாள் கூச்சலிட்டான்

இராமதூதன் ஒருபோது கூத்திசைத்தான்.

இந்தப்பக்கம் ஒருக்கால் கூ...ய்...!

இன்றிரவு ஒலிபெருக்கி 'கூத்தர்பிரான்'

இப்போது ஒன்பதுக்கு மேல் ஒரு நிமிஷம்கூட

### அட பசாசே!

இலங்கைவானெலியில்சில ஆண்டுகளுக்கு முன்பாக வாரந்தோறும் ஒலிபரப்பாகி பல நேயர்களைக் கவர்ந்த பிரசித்தமானதொரு தொடர்நாடகத்தில் லண்டன் கந்தையாவாக வரும் ஒரு பாத்திரம் அடிக்கடி மைகோஸ்ட்! மைகோஸ்ட்! என்றுகூறி எல்லோரையும் சிரிப்பில் ஆழ்த்தியது. ஞாபகமிருக்கிறதா? மைகோஸ்ட் என்ருல் ஏன் சிரிக்கவேண்டும் என்று கேட்டீர்கள். ஆங்கிலத்தில் எங்கள் பேச்சு வழக்கில் 'அட கடவுளே! சிவனே! என் தெய்வமே! என்றிருப்பதுபோல 'மைகோட்' என்று ஒரு பேச்சு மொழி இருக்கிறது. இந்த வானெலி நாடகத்தில் வரும் ஒரு பாத்திரம்-முக்கியமான நடிக பாத்திரம் - ஆங்கிலக் கல்வி கற்காதபோதிலும் அசல் நாட்டுப்புறமாயிருந்த போதிலும் ஐரோப்பிய நாகரிக மோகம் கொண்ட சுத்த முட்டாள். இப்படியான ஒரு ஆசாமிவாயில் 'மைகோட்' என்ற வார்த்தை ''மைகோஸ்ட்' ஆக தடுமாறிய தொன்றும் வியப்பில்லை. ஆனுல் 'கோஸ்ட்!' என்ற ஆங்கிலச்சொல் கொடுக்கும் பொருள்தன் இந்த இடத்தில் சிரிப்புக்கிடமானது. 'கோஸ்ட்' என்பதற்கு ஆங்கில மொழியில்' பிசாசு என்று பொருள். ஐயோ கடவுளே என்பதற்குப் பதிலாக ஐயோ என் பிசாசே என்று உளறினுல் அது 'ஐயோ என்னைப்பிடித்தாட்டும் நாகரிக மோகப் பிசாசே என்று அந்த ஆசாமி தன் தலையில் அடித்துக் கொள்வதாகத் தானே மற்றவர்களுக்குத் தோன்றும் சிரிப்பு வராதா? அப்பொழுது நம்மைஅறியாமல் நம்மைப் பார்த்ததும் நம்மைப்பற்றியுமே நாம் நகைக்கிருேம். இது எந்த வகைச்சிரிப்பில் அடங்குமோ ஒருவேளை இதுதான்சிரிப்பா சிரிப்போ?

## தங்கக்கடல்

நாம் மிகவும் மதிப்பு வாய்ந்ததாகக் கருதும்தங்கம் சாதாரண கடல்நீரில் இருந்து கிடைக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிருர்கள். லட்சம் கோடி தொன் கடல் நீரில் ஆறு தொன்தங்கம்கிடைக்கும் அல்லதுஒருமைல் அளவு கடல் நீரில் 22000 பவுண் தங்கம் அதாவது 35,00,00,000 ரூபா விலைமதிப்புடைய தங்கம் கிடைக்கும் மொத்தத்தில் கடல் முழுவதிலும் இருந்து 230,00,00,000 தொன் எடை உள்ள தங்கம் கிடைக்கும் என்று தெரிகிறதாம்.

# ...லம் வரை மன்னர்களே

...ற்றளியையும்,
மண்டபத்தை
ருக்கு அளித்துள்

பிரான்ஸிய
த் தெரியுமாத
லுள்ள மக்கள்
ரை பிரான்ஸிய
ரடிப்படையி
ழத்தார்கள்.
இம்மக்கள் தங்
திருந்தனர் என்
ப் போர்த்துக்
ச்சரியமடைந்த
றைவிட மேலும்
ங்களைத் தேடுவ
ள்ள கோட்டை
ப் பயன்படுத்
ப் பரிசோதித்த
ஒன்றும்கிடைக்க

வாயிலில்
ழ் கல் வெட்டு
தை முதலியார்
யகம் ஆங்கிலத்
பெயர்த்துள்
தில் கூறப்பட்டி

ருப்பதாவது: ''அரசனே! குளக்கோட்டனுல் கட்டப்பட்ட இந்த புனித ஆலயத்தை போர்த்துக்கேயர் அழிப்பார்கள். பின்னர் இதை ஒருவரும் திருப்பிக் கட்டவும் மாட்டார்கள். அது மட்டுமன்றி வருங் காலத்தில் வரும் அரசர்களும் அதைக்கட்டுவதற்கு நினைக்கவும் மாட்டார்கள்

### கால ஆராய்ச்சி

யாழ்ப்பாண வரலாற்றைப்பற்றி விரிவாகக் கூறுகின்ற மயில்வாகனப் புலவரால் எழுதப்பட்ட வைபவமாலையில் விஜயன் இலங்கைக்கு அரசனுக முன்னர் கிழக்கில் கோணேஸ்வராலயத்தையும் தெற்கில் தேவேந்திரா முனையில் சந்திரசேகரத்தையும், வடக்கில் நகுலேஸ்வரத்தையும், மேற்கில் திருக்கேதீஸ்வரத்தையும் திரும்பப் புனருத்தாரணம் செய்தான் எனக் கூறப்பட்டுள்ளது. (Yvm. p. 6)

விஜயன் தொடக்கம் தேவநப்பியதீசன்வரை (247-207 கி. மு.) இலங்கையை ஆண்ட மன்னர்கள் யாவரும் இந்துக்களாவர். இந்தக் காலப்பகுதியிலேயே இந்து நிறுவனங்கள் பல நிறுவப்பட்டு விளங்கின. 3-ம் நூற்ருண்டில் இலங்கைக்கு பௌத்த சமயம்வர இந்துசமய வளர்ச்சியில் தடையேற்பட்டது. ஆனுல் திரும்பவும் எல்லாள மன்னன் (145-101. கி. மு.) காலத்தில் தனது பழைய நிலையைச் சைவம் பெற்றது.

மகாவம்ச ஆசிரியர் கி. பி. 4-ம் நூற்ருண்டில் நடைபெற்ற சம்பவங்கள்பற்றிக் குறிப்பிடுகையில் — அரசன் (மகாசேனன்) மணிகிர விகாரையையும் கட்டுவித்து அழிக்கப்பட்ட பிராஹ்மண கடவுளர்களின் 3 கோவில்களையும் கண்டுபிடித்தார். கோகன்ன விகாரை, எரகவில்லவிகாரை, பிரஹ்மண காலந்த விகாரை.'

(Mv. [கெய்கர்] 'அத்தியாயம். 37V. 41) இந்த இடங்கள் யாவும் இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் இருந்தன.

மகாவம்சம்பற்றியும் அனுராதபுரத்தில் ஆண்ட மன்னர்கள்பற்றியும் தெரியாத யாழ்ப்பாண வைபவமாலையின் ஆசிரியர் பாண்டு மன்னனின் ஆட்சிக்காலத்தில்- சக காலம் 358 (436 கி. பி.) குளக்கோட்டன் என்னும்

சோழ இளவரசன் திருக்கோணமலைக்கு வந்து கோணேசர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து அவ்வாலயத்தில் நித்திய பூஜைகள் நடைபெறுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். பாண்டு அரசர்கள் அனுராதபுரத்தை கி. பி. 433-ல் இருந்து கி. பி. 460 வரை அரசாட்சி செய்தார்கள். குளக்கோட்டனுல் கோணேஸ்வரம் கட்டப்பட்டது என்பதற்கு பிரடரிக் கோட்டை வாயிலில் உள்ள சிற்சாசனத்தில் ... [illegible]

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமலர்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

எண்டு எண்ணிக்கொண்டு கெட்ட செயல்களைச்செய்கிறார்கள்.

பத்: செய்தியள்தான் அப்பிடியிருக்கெண்டால் பேப்பரிலே வாற கதை கட்டுரையளையும் அப்பிடித்தானே பார்த்துப் போடுறாங்கள். முந்தின காலத்திலையெல்லாம் வாற கதை கட்டுரையளைப் படிச்சு மனிசன் திருந்தலாம். இப்ப என்னடா எண்டால்- "அவளுக்கென்ன அழகிய முகம்-"ரஞ்சி ஏன் கூலிங்கிளாஸ் போடுகிறாள்"-"பொன்மணிக்குப் போன் வந்தது"... ஐயோ கண்றாவி.

சுந்: இப்ப அநேகமான பத்திரிகைக்காரர் தாங்கள் வாழுறதுக்காக - கனக்கக் காசு சேர்க்கிறதுக்காக-பேப்பர்ஸ் எல்லாம்கூட அழியவேணுமெண்டதுக்காக கூடாத செய்தியளையும் அருவருக்கத்தக்க கதையளையும் போடுறாங்கள். சனங்கள் அதைவேண்டி வாசிச்சு ாக்கேடுகெட்டுப்போனாலும் பரவாயில்லை-பேப்பர்ஸ் நல்லாவித்தால் போதுமெண்டதுதான் அவங்கடை இலட்சியம்.

பத்: அண்டைக்குச் சிநேகிதர் ஒருதரைச் சந்தித்தனான். அவர் ஒரு பேப்பர் ஒவ்வீசிலை அலுவலக நிருபர். அவர் சொன்னது என்னெண்டால்...ஒவ்வொரு ஊரிலை இருக்கிற நிருபர்கள் கொஞ்சச்செய்தியளை அனுப்புவினம். அந்த அலுவலக நிருபர் என்ன செய்யிறதெண்டால்—நிருபர் அனுப்பின நியூசை வெட்டிக்கொத்தி—கூட்டிக்குறைச்சு எடுத்தஉடனே ஆக்கள் வாசிக்கக்கூடிய ஸ்டைலிலை கவர்ச்சிகரமாகப் போடுவாராம்.

அவர் இன்னும் நல்ல விளக்கமாகச்சொன்னவர். பஸ் ஸ்டாண்டிலை பஸ்சுக்காக ஒரு பொடியனும்பெட்டையும் நிற்கினம். பஸ் வந்து நிண்டஉடனே இடிபட்டுக்கொண்டு ஏறிறதுதானே! ஏறிறபோது தப்பித் தவறி பொடியனின்ரை கை பெட்டையிலைபட்டிட்டால் பெட்டை ஒருக்கால் திரும்பிப்பார்ப்பாள். அவ்வளவுதான்! இதைப் பேப்பர்காரங்கள் என்னசெய்வங்களெண்டால்...'பஸ்ஸில் ஏறமுயன்ற கட்டழகுக்கன்னியை கட்டியணைத்து முத்தமிடப்போனார் கட்டிளம் காளையொருவர். அவளின் காலிலிருந்த செருப்பு கட்டிளம் காளையின் கன்னங்களைப் பதம்பார்த்தன" - இந்த மாதிரியான செய்தியளைப் படிக்கிறதெண்டால் இளம் பிள்ளையளுக்கு விருப்பமாக இருக்கும்.

சுந்: பேப்பர் ஒவ்வீசிலை வேலைசெய்யிறவங்களுக்கு இதெல்லால் விளங்கும்தானே ஆக்களின்ர பெயர், சம்பவம் நடந்தநேரம் ஒன்றும் போடமாட்டாங்கள். ஏனெண்டால் நியூஸ் பெரும்பாலும் பொய்யாகத்தானேயிருக்கும்.

பத்: அவர் பிறகும் சொன்னது... அப்பிடி நியூஸ் நிருபர்மாரட்டையிருந்துவராவிட்டால்...தாங்களாகவே ஒவ்வீசிலையிருந்துகொண்டு ஒவ்வொரு நியூசைக்கற்பனை செய்துபோடுறதாம். இந்த பேப்பர் முழுக்க நடத்துறதுக்கெண்டு சீவ் எடிட்டர் ஒரு ஆள் இருப்பர் தானே? - அவர் சொல்லுறதாம்- 'கட்டாயமாக ஏதும் நியூஸ் போடவேணும். அப்பிடிநியூஸ் வராவிட்டால் நீங்களாக எழுதித்தரவேண்டும்"-என்பராம்.

பின்னை இவங்களும் நூற்றி அம்பது இருநூறு ரூபா சம்பளக்காரர்தானே!-இதைவிட்டால் வேறை பிழைப்பு இல்லையெண்டதுக்காக அதையும் இதையும் எழுதிக்குடுக்கிறது

சுந்: இதுகளாலைதான் பேப்பரைப் படிக்கவேணுமெண்ட விருப்பத்தையே விட்டிட்டன்.

பத்: 'ஈழநாடு' இன்னும் அவ்வளவு மோசமான நிலைக்குப் போகயில்லை தமிழ் ஆக்களின்ர நிர்வாகத்திலை நடக்கிறபடியாலேயோ என்னவோ தெரியயில்லை- இன்னும் அந்தத் தரம் குறையாமல் வந்துகொண்டிருக்கு.

சுந்: இடைசுகம் ஈழநாடும் பார்க்கிறதுதான். அதிலை யாழ்ப்பாணச்செய்தியள்கூட நல்ல தெளிவாக வாறது. உலகச்செய்தியளும் பிழையில்லை. இப்ப ஒரு மாதிரி அமைப்புமுறையும் திருந்தியிருக்கு. எழுத்துக்கள்தான் விளக்கமாக விழுறது குறைவு. பிளட்டிங் சீற்றிலை எழுதினமாதிரி...

பத்: மற்றப்பத்திரிகைகளிலை எழுத்துக்கள் நல்லாயிருக்கு. ஆனல் அதிலையிருக்கிற விஷயங்கள் நல்லாயில்லை. ஈழநாட்டிலை விஷயங்கள் ஓரளவுக்குப் பிழையில்லையென்ன, நல்லாயிருக்கு ஆனல் எழுத்துக்கள்தான் கொஞ்சமும் சரியில்லை...

சுந்: உந்தப் பேப்பரிலை அவ...மிஸிஸ் என்ன கதை எழுதியிருக்கிறு?

பத்: பாத்தீங்களே மாஸ்டர்...நானும் ஏதோ கதைக்கவேணுமெண்டு வந்து எதையோ கதைச்சுக்கொண்டுருக்கிறன்.

சுந்: இல்லையில்லை-இதுகளும் தேவையான விஷயங்கள். பேப்பர் வாசிக்கிறவங்களெல்லாம் இதுகளைப் பற்றி நல்லாக யோசியாதபடியால்தான் பேப்பர்காரர் இவ்வளவு துணிவாக பிஸ்னஸ் செய்யிறுங்கள்.

பத்: அ—இந்தப் பேப்பரிலை "மனப்புண்" எண்டு ஒரு சிறுகதை எழுதியிருக்கிறு. நல்ல அருமையாக எழுதியிருக்கு, இப்ப அனேகமாக எல்லாரும் காதலை மையமாக வைச்சுக்கொண்டுதான் சிறுகதை எழுதுறுங்கள்.காதலைவிட்டால் அவங்களுக்கு வேறுகதையேயில்லை.

ஆனல் உங்கடை மிஸிஸ்- பூமலர் வாழ்க்கையிலை மற்றப்பகுதிகளை எடுத்து ஒவ்வொரு விஷயமாக அலசி எழுதிறபோது படிக்க ஒரு ஆசையாகத்தான் இருக்கும். இதிலையும் பாருங்கோ...

(பத்மநான் பத்திரிகையை விரித்து சில வரிகளைப் படித்துக்காட்டுகிறார்.)

"பெரிய பெரிய விபத்துக்களில் சிக்கி காலிலோ அல்லது உடலின்மற்றப்பகுதிகளிலோபுண்களும் காயங்களும் ஏற்பட்டால்- அந்தப் பெரியபுண்களைக்கூட மாற்றிவிடக்கூடிய மருந்துவகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதனுல் உடலில் ஏற்படும் புண்களை மாற்றுவது அவ்வளவு கடினமல்ல...

சிலசமயங்களில் சிறுசிறு சம்பவங்களால் உள்ளத்தில் பெரியபுண்கள் ஏற்படுகின்றன. உள்ளத்தில் புண் ஏற்பட்டுவிட்டால்— அந்த மனப்புண்ணை மாற்றுவது எளிதானகாரியமல்ல எதிர்பாரார்த விதமாக விபத்துக்களில் சிக்குவதால்தான் உடலில் புண்கள் உண்டாகின்றன. அது தவிர்க்கமுடியாததொன்று.

ஒருவரின் பேச்சு செயல் முதலியவற்றுல்தான் மற்றவர்களின் மனதில் புண் உண்டாகின்றது. ஆகவே ஒருவர் தான் பேசுவதை நன்ருக உணர்ந்து சொல்வதன் மூலமும் தான் செய்பவற்றை நன்ருக [illegible] செய்வதன்மூலமும் மற்றவர்களின் மனதில் புண் உண்டாகாது பார்த்துக்கொள்ளலாம்.

(தொடரும்

## நன்றே தோழி!

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வச் செருக்கை ஒரு நாளும் புகழக்கூடாது. இதை மனதில் கொண்டீர்களானல் உங்கள் வாழ்க்கை இனிது அமையும். புகழ முற்பட்டீர்களானல் உங்கள் அன்பு வாழ்க்கையில் நீங்களே மண்ணைப் போட்டவர்களாவீர்கள். இந்தப் பாகுபாட்டை ஒழித்தால் வாழ்க்கையில் உண்மையான அன்பு மிளிரும் சங்ககால மகளிர் உண்மையான அன்புவாழ்க்கை வாழ்ந்தனர். அதனுல் அவர்களுக்கு கணவனுடைய நாடும், இருப்பிடமும்தான் சிறந்ததாகக் காணப்பட்டது. வெள்ளி விதைக்கப் பொன்னே விளையினும் வேண்டேன் பிறந்தகத்து வாழ்வு என அறைகூவி, குப்பைக்கீரை உப்பின்றிச் சமைத்ததையும் அமுதமாக எண்ணி மகிழ்ந்த ஒரு தலைவியின் அன்பு மேம்பாட்டை அகநாநூற்றுப் பாடலொன்று விளக்குகின்றது, இதனை நீங்களும் படித்துச் சுவையுங்கள்.

"இராமழை பெய்த
இரா ஈரத்துச்
செங்கோல் வேந்தன்
உழவனுகிப்
பனைநுகங் கொண்டு
யானை ஏர் பூட்டி
வெள்ளி விதைக்கப்
பொன்னே விளையினும்
வேண்டே பிறந்தகத்
தீண்டி வாழ்வே
செங்கேழ் வரகும்
பைங்குரல் கொய்து
கன்று காத்துக் குன்றில்
உணர்த்தி ஊடுபதம்
போக்கி முன்னுதவி
ஞேர்க் குதவிக்
காடுகளில் இன்பதம்
பார்த் தெடுத்துக்
குப்பைக்கீரை உப்பின்றி
வெந்ததனை
இரவற்றுலும்
விரையுடன் எடுத்துச்
சோறுகொண்டு
பீறலடைத்து
ஒன்றுவிட்டொரு
பொழுது இன்றே
கிடப்பினும்
நன்றே தோழி நம்
கணவன் வாழ்வே!

## சினிமாவை...


(7-ம்பக்கத்தொடர்ச்சி)

என்றதும் எரிமலைபோல் சீறிய வேளையிலும், பாச உணர்வால் துடிக்கையிலும் அதே அண்ணனையே சாந்தப்படுத்தி அவன் மூலமே அந்த டாக்டருக்கு கல்யாணப்பரிசு கொடுத்தனுப்பும் அளவுக்குச் சாதுரியப்படுத்தும் கட்டத்திலும் அவ் இருவரும் நடிப்பின் உச்சியில் நிற்கும் அதேவேளையில் மக்கள் மனதில் நீங்காத பாத்திரங்களாகவும் அமைந்துவிட்டனர்.

தந்தையாக நடித்த செல்வன்பாலச்சந்திரனும், உதவி டாக்டராக நடித்த செல்வன் சத்தியநாதனும் மற்றைய நடிகர்களிலும் தாம் நடிப்பிற் பின் தங்கியவர்கள் அல்லர் என்று காட்டுவதுபோலத் தமது பாகத்தைச் சிறப்பாகச்செய்து மக்கள் மனதைக் கவர்ந்தனர்.

இந்த நாடகத்தில் பாடல்கள் இல்லாமையும், காட்சி அமைப்புக்கள் சிறப்பாக இல்லாமையும், பின்னணி இசை நன்கு அமையாமையும் பெரும் குறைகளாகும்.

மொத்தத்தில் - மனக்கோயில் ஒரு தரமான நாடகம். மக்கள் மனதில் மாருத இடத்தில் அது இருக்கிறது.




# தேகாப்பியாசம் செய்வோம்

— ராஜன் —

சரீர ஆரோக்கியத்திற்கு உணவு அவசியம் போலவே தேகப்பயிற்சியும் அவசியமானது. சிறு குழந்தைகளை நாம் நன்கு கவனித்தால் தேகாப்பியாசம் இயற்கையிலே இன்றியமையாததென்பதை உணரலாம். சிறு குழந்தை படுக்கை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் தன் கால், கைகளை அடித்துப் புரளுவதைக் காணலாம். இவை குழந்தையின் வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாகும்.

இரத்தோட்டம் அதிகரிப்பதற்கும் தேகம் வளருவதற்கும் அப்பியாசம் தேவை.

அப்பியாசங்கள் செய்வதனுல் துர்நீர் வெளிப்படுகின்றது. மாணவர்கள் மூளையைப் படிப்பிலும் சிந்தனையிலும் செலவழிப்பதனுல் அவர்களுக்கு தேகாப்பியாசம் மிக மிக அவசியம். அன்றுட தொழிலாளிக்கு தேகாப்பியாசம் செய்ய வேண்டிய அவசியமில்லை. காரணம் அவன் தினமும் கை, கால் அசைய தொழில் செய்கின்ருன்.

மற்றைய ஆசிரியர், இலிகிதர் போன்ருேருக்கு அவரவர் வயதுக்கேற்ப தேகாப்பியாசம் அவசியம்.

**பயிற்சியும் வயதும்**

சிறு குழந்தைகட்கு அவர்களின் செய்கைகளே போதுமானதாகும்.

வாலிபர்களுக்கு: இவர்களின் தேகம் வளர்ச்சியுறுவதற்கு இரத்தோட்டம் அவசியம். ஆதலால் பாய்தல் பந்தடித்தல், குண்டெறிதல் முதலியன இன்றியமையாதனவாகும்.

வயோதிபருக்கு: இவர்களின் தேக உறுப்புகள் தளர்ந்து பெலவீனமடைந்திருப்பதாளுல், பெருமப்பியாசங்கள் புரிதலாகா. ஆதலால் வாகனங்களில் உல்லாசப் பிரயாணம் செய்தல், உலாவிவருதல் முக்கியமானதாகும்.

தேகநிலையும் அப்பியாசமும்: சுகதேகிகள் தத்தம் நிலைமைக்கேற்ப பயிற்சி செய்தல் வேண்டும். பெலவீனர்கள் வியாதிஸ்தர்கள் வீட்டுத் தோட்டம், சிறிது உலாவுதல் என்பன இன்றியமையாததாகும்.

தொழிலும் அப்பியாசமும்: தினம் கஷ்டப்பட்டு தொழில் செய்பவர்களுக்கு அப்பியாசங்கள் தேவைப்படா. அவர்கள்மேலும் பயிற்சி செய்வதால் உறுப்புகள் தளர்ச்சியுற்று வியாதிக்குள்ளாகின்றனர். மற்றைய இரண்டாம்தர தொழிலாளர்கள் விளையாட்டுகளில் ஈடுபடுவதால்அவரவர்உடல் வளர்ச்சி பெறல், கழிவுகள் நீங்குதல் என்பன ஏற்பட்டு உடல் பெலனுறும், அழகும் உண்டாகும்.

இடமும் அப்பியாசமும்: தேகாப்பியாசம்செய்வதற்கு நல்ல காற்ருேட்டமான இடமாகவும், விசாலமானதும் மட்டப்படுத்திய தரையாகவும் இருத்தலவசியம்.

நேரமும் அப்பியாசமும்: காலை நேரம் அன்றி மாலை நான்கு மணி முதல் ஆறு மணி வரையுள்ள நேரம் இன்றியமையாதது.

சிறப்பு அனுட்டிப்புகள்: தேகாப்பியாசம் செய்கையில் ஆடைகளை இறுகக் கட்டிக்கொண்டும், வயிறு புடைக்க உணவை அருந்திய பின்னும், நீண்ட ஆடைகளை அணிந்துகொண்டும் பயிற்சி செய்தால் இரத்தோட்டம் தடைப்பட்டு, அஜீரணமுண்டாகும்.

பயன்: தேகத்தில் உள்ள உறுப்புகளிலிருந்து கழிவு நீர் நீங்கி தசைகள் வலுவடைகின்றன. இரத்தோட்டம் நன்கு நடைபெற்று தேகபோஷணை சரிவர நடைபெறுகிறது. சுவாசாசயம் பிராணவாயுவை பெற்று இரத்தம் சுத்திகரிக்கப்படுகின்றது. இவைகளினுல் தேகசௌக்கியம் உண்டாகி ஆயுள் நீடிக்கின்றது.

# நீரில் நீந்தும் பஸ்

15 அடி நீளம், 9 அடி அகலத்திற்கு சாதாரண பஸ் போன்ற ஒருவாகனம் ஆறு, ஏரிகளில் படகு போல பயன்படுத்தப் படுகிறது பொதுவாக வீதியில் போய்க் கொண்டிருக்கும்இந்த வாகனம் ஆறு ஏரி குறுக்கிடும்போது, நீந்தத் தொடங்குகிறது. தரையில் 45 மைல் வேகத்திலும் தண்ணீரில் 35 மைல் வேகத்திலும் ஓடும் இந்த 'ஹோவர் கிருப்ட்' மினி ரக வாகனம் பிரிட்டனில் உருவாக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நைல் நதியில்4000மைல்கள் இதன் மூலம் திருப்தியாகப் பயணம் செய்திருக்கின்றனர்.

இப்போது அமெரிக்கா, ஹாலந்து, ஸ்வீடன், மெக்ஸிக்கோ, கிழக்குஜெர்மனி, கென்யா ஆகிய நாடுகளில் இது உபயோகமாகிறது.

## கனவைக் கலைத்தால்

நாம் காணும் கனவுகள் நடுவில் கலைந்தால் மருட்சியை உண்டாக்கும் ஒரு நச்சுப்பொருள் உண்டாகின்றது என்பது ஆராய்விலிருந்து தெரியவருகிறது. வேண்டுமென்றே முறித்தால் மூன்று நாட்களுக்குள் மனக் கோளாறு வந்துவிடுமாம். இந்த உண்மை மூளைச்சலவை, செய்ய விரும்பும் ஆட்களுக்கு மிகவும் நன்ருகத் தெரிந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழிக்கு தோழி
# வம்பில் சண்டை வளரும்

தோழிக்கு... தோழி தொலைபேசிமூலம் வழங்கும் அறிவுரையில் இவ்வாரம் வம்பளக்கும் வசந்திக்கோர் அறிவுரை.

**ஹலோ** வசந்தி...!

வீட்டில் எல்லா வேலைகளையும் கவனித்துக் கொள்ள வேலையாட்களும் மாமியாரும் இருப்பதால் நீ பகல்பொழுதை அடுத்த வீட்டுக்காரிகளுடன் வம்பளப்பதிலும், மாலையில் மாதர் சங்கத்திற்குப் போவதிலும் கழிப்பதாகவும் கூறுகிறாயே. இது எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. மனவருத்தத்தைத் தருகிறது.

அருணா

அடுத்த வீட்டிற்குப் போய் அடிக்கடி வம்பளப்பதோ, அடுத்த வீட்டுக்காரிகளை அழைத்து வைத்துக்கொண்டு வம்பளப்பதோ நல்ல மனைவிக்கு ஏற்றதல்ல. வசந்தி! வம்பில் சண்டை வளரும்; பெயர் கெடும். வம்பளக்கும் மனைவியின் பிள்ளைகள் கெட்டொழிகின்றனர். அடுத்த வீட்டிற்கு அடிக்கடி போவது நல்லதல்ல. வேலையை முன்னிட்டுப் போனால் போதும்.

கணவன் வரும் மாலை நேரம் வீட்டிலிருந்து அவன் தேவைகளைக் கவனிக்காது மாதர் சங்கம், சமூக சேவை, என்று கூறிக்கொண்டு வெளியேறி விடுவது நல்ல மனைவியின் செயலல்ல. சங்கமும் சமூகசேவையும் விதவைகளுக்கும், மணமாகாதவருக்கும், பொறுப்புள்ள மருமகளையுடைய வயதுவந்த பெண்களுக்குமே உரியதாகும்.

பிற பெண்களை இழிவுபடுத்திப் பேசுவது, அடுத்த குடும்ப விஷயத்தை அனாவசியமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, வீட்டுக்கதையைப் பிறரிடம் விளம்பரப்படுத்துவது இவையாவும் வம்பளப்பால் வரும் கேடுகள் வசந்தி!

ஆழம் தெரியாமல் வம்பளந்து உனது கணவன் சந்தேகத்திற்கு ஆளாகாதே! பிறரிடம் அளவோடு பயனுள்ளதைப்பேசு...

## குடும்பச் சுடர்



தயாரிப்பு: குணம்

## நன்றே தோழி! நம் கணவர் வாழ்வே!!

— தமிழ்ப்பிரியை —

இந்தக் காலத்துப் பெண்மணிகள் திருமணமானதும் கணவன் வீடு செல்லாமல் பிறந்த வீட்டிலேயே தங்கி விடுகின்றனர். காரணம் கணவன்மார் சீதனம் வாங்கும்போது வீட்டையும் கேட்டு வாங்கிவிடுகிறார்கள். பெற்ற மகள் என்ற பாசத்தினாலும், சீரும் சிறப்புமாக வாழவேண்டும் என்ற அவாவினாலும் பெற்றோர் லட்சக்கணக்கில் பணத்தைக் கொட்டி அருமையான மாளிகைகளைக் கட்டிக் கொடுப்பர்.

ஆனால் ஆண்மகனைப் பெற்ற பெற்றோர் பிள்ளையின் மனைவியோடு அருமையான வீடு வரும் என்பதனாலே பெண்ணைப் பெற்றவர்களைப்போல் வீட்டைக் கட்டுவதில்லை. ஆனால் பிள்ளையைப் பெற்றவர்களின் வீடு வெறும் குடிசையாகக் காணப்படும். கணவனோடு சென்று குடிசையில் வாழப் பிடிப்பதில்லை நம் பெண்மணிகளுககு. அத்தோடு நம்முடைய சீதன வீடு என்ற பெருமையும் ஏற்பட்டு விடுகிறது. அதனால் கட்டிய கணவனை மதிக்கத் தவறி விடுகின்றனர். அப்படியான இல்லற வாழ்க்கையில் அன்பும் ஒற்றுமையும்நிலவமாட்டாது. குடிசையாக இருந்தாலும் அங்கு கணவனோடு வாழ்வதைப் பெருமையாகக் கொள்ள வேண்டும்.

பெண்மணிகளே! புகுந்த இடத்தில் பிறந்த இடத்தின்

(10-ம் பக்கம் பார்க்க)

## பொறியியலாளர் 'பூக்க' உதவும் ரோஜா

எலக்ரோனிக் பொறியியலாளர் செல்வி ரோஸ் வின்ஸ்லேட்டுக்கு விற்பனைத் துறையில்தெரியாதது ஒன்றுமில்லை.

பாரிய ரிட்டிஷ் மின் பொறியியல் கம்பனியின் எலக்ரோனிக்ஸ் பிரிவின் இணை மனேஜராக இவர் இருந்தவர். பல வருடங்களாக இவர், இக்கம்பனியின் விற்பனைப் பொறியியலாளராகக் கடமையாற்றியவர். இப்பொழுது இவர், முன்னேறும் நாடுகளில் தொழில் நுட்ப, வர்த்தகக் கல்விக்கு அவசியமான வழிவகையறிவுகளை அளித்துக்கொண்டிருக்கிறார்.

வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சின் கீழ்' 1962-ம் ஆண்டு நிறுவப்பட்ட முன்னேறும் நாடுகளுக்கான தொழில்நுட்பக்கல்விப்பயிற்சிக்கான கவுன்சிலின் அங்கத்தவராகவே அவர் மேற்கூறிய கடமைகளையாற்றுகிறார்.

முன்னேறும் நாடுகளில் தொழில்நுட்பக் கல்வியை ஊக்குவிப்பதே இக்கவுன்ஸிலின் நோக்கமாகும். செல்வி வின்ஸ்லேட், பெண்கள் பொறியியலைத் தம் தொழிலாகத் தேர்ந்தெடுக்க முன்வரவேண்டும் என்ற எண்ணத்துடனேயேகடமையாற்றுகிறார். பொறியியலில், பெண்கள் மேற்கொள்ளக்கூடிய அரிய சந்தர்ப்பங்களை இவர் மிக்க மகிழ்ச்சியுடன் விளக்குகிறார்.

இங்கிலாந்திலுள்ள பெண்களுக்கான பொறியியல் சபையின் முன்னாள் தலைவரான செல்வி வின்ஸ்லேட் பெண்களுக்கான இரண்டாவது சர்வதேசமகாநாட்டை ஒழுங்கு செய்வதற்கு முன்னின்று உதவிசெய்தார்.




## அறிந்து கொள்ளுங்கள்!

கிராம்புத்தூளை எலுமிச்சை சாற்றில் கலந்து வைத்தால் பல்வலி குணமடையும்.

0 0 0

உங்களது பிள்ளைகளுக்கு இருமல் உண்டானால் கிராம்புத்தூள் சிறிதளவு எடுத்து எலுமிச்சைச்சாறு சேர்த்து இரவு படுக்கைக்குப் போகுமுன் குடிக்கக் கொடுங்கள்.

0 0 0

எலுமிச்சைச் சாற்றில் பசும்பால் ஆடையைக் கலந்து காலை மாலை முகத்தில் பூசுங்கள் பருக்கள் மறையும்.

எலுமிச்சைச் சாற்றில் காய்ந்த மஞ்சள் தூளை அரைத்து நெற்றியில் தடவினால் தலைவலி குணமாகிவிடும்.

0 0 0

ஒரு எலுமிச்சம் பழத்தின்சாறு, சீனி 6 அவுன்ஸ். உப்பு 2 மேசைக்கரண்டி, வெந்நீர் சிறிதளவு இவை கலந்து குடித்தால் வயிற்றுவலி குணமாகிவிடும்.

0 0 0

எலுமிச்சைச் சாற்றை தேங்காய் எண்ணெயுடன் கலந்து கைகால் வலியுள்ள இடங்களுக்குத் தடவினால் வலி நீங்கும்.

# தமிழ் மகளிருக்கென அமைந்த ஓரேயொரு விவசாய போதனாபாடசாலை

தமிழ்ப் பகுதிகளிலுள்ள பெண்கள் விவசாயக் கல்வியைப் பெறுவதற்கு தமிழ்ப்பகுதியில் ஒரே ஒரு விவசாயப் போதனா பாடசாலை உள்ளது. யாழ்ப்பாணத்தில் தின்னவேலியிலுள்ள இப்பாடசாலையில் விவசாயம் முக்கிய பாடமாக இருந்தபொழுதும் மற்றும் ஒவ்வொரு பெண்ணும் தெரிந்திருக்கவேண்டிய கலைகளாகிய தையல், சமையல், கைவேலை, மிருக பரிபாலனம், குழந்தை வளர்ப்பு ஆகியனவும் பயிற்றப்படுகின்றன




### தோட்டவேலை

வீட்டுத்தோட்டம் அமைத்துப் பயிரைப் பராமரிக்கும் முறைகள் பயிற்றப்படுகின்றன. வீட்டுத்தோட்டம் செய்வதனால் தனது வீட்டின்சமையலுக்கு வேண்டிய மரக்கறிகள், பழவகைகள் ஆகியவற்றை இங்குள்ள மாணவிகள் பயிரிடுகிறார்கள். இவைகளுக்கு எவ்போது எந்தெந்த உரங்களைப் பயன்படுத்த வேண்டும் செடிகளை ஒட்டும் முறைகள் முதலியன விசேஷமாகக் கற்பிக்கப்படுகின்றன.

மரக்கறித் தோட்டம், பழத்தோட்டம், மட்டுமன்றி அழகிய பூந்தோட்டத்தையும் இம் மாணவிகள் செய்கிறார்கள். வெவ்வேறு சுவாத்தியங்களில் வளரும் பூச்செடிகளை இங்கு பயிரிட்டுப் பயன்பெறக் கூடிய முறைகள் இங்கு போதிக்கப்படுகின்றன.

இதில் மாடு, ஆடு, கோழி ஆகியவற்றை, வளர்த்தல் அடங்கும். இவற்றைப் பராமரிக்கும் முறைகளை மாணவிகள்கற்கிறார்கள். இதனால் அவர்கள் தங்கள் வீடுகளில் இவற்றை வளர்த்து அதிலிருந்து பிரயோசனங்களைப் பெறக்கூடியதாக இருக்கும், மாடு, ஆடுகளை வளர்ப்பதால் தேவையான

### மிருக வளர்ப்பு

பாலை நோயற்ற, சுத்தமான நீர் கலக்காத பாலாகப் பெறக்கூடியதாக இருக்கும். கோழிகளை வளர்ப்பதால் கோழிமுட்டை, இறைச்சி போன்றவற்றை மலிவாகப் பெறக்கூடியதாக விடுக்கும். இம்மிருகங்களுக்குக் கொடுக்க வேண்டும் உணவுவகைகள் நோய்களில் இருந்து அவற்றைப் பாதுகாக்கவேண்டிய வழிவகைகள் யாவும் இங்கு பயிற்றப்பட்ட சிறந்த ஆசிரியைகளால் பயிற்றப்படுகின்றன.

### சமையல்

இக்கலையினால் சத்துள்ள உணவுகளை விதம்விதமாகப் பாகம்பண்ணும் முறைகளை மட்டுமன்றி அதிகமாக கிடைக்கக்கூடிய உணவுப் பொருட்களையும், மிஞ்சும் உணவுப் பொருட்களையும் சேமித்துப் பாதுகாத்து வைக்கும் முறைகளை அறிகின்றனர். பழரசம், அச்சாறு, ஊறுகாய், ஜாம், ஜெலி போன்றவற்றைத் தயாரித்து உணவுவகைகளை பல நாட்களுக்குப் பயன்படச் செய்கிறார்கள்.

### கைவேலை


தச்சுவேலை, நெசவு, பன்ன வேலை போன்றவற்றையும் இவ் விவசாய போதனா பாடசாலையில் கற்பிக்கின்றனர். தச்சுவேலையில் மரத்தால் சிறு விளையாட்டுப் பொருள்கள், அகப்பை, அலங்காரப் பொருட்கள் போன்ற சிறிய பொருள்களைச் செய்யும் முறை பயிற்றப்படுகிறது இதே போன்று ஓலையினால் வீட்டுத்தேவைக்குத் தேவையான பாய், பெட்டி, நீற்றுப்பெட்டி போன்றவைகளையும் பின்னப் பழகிக்கொள்கின்றனர்.

மேற்குறிப்பிட்டவைகள் போன்றே இப்போதனாபாடசாலையில் தையற் கலையும் பிரதான இடத்தைப் பெறுகிறது. பலவகையான அலங்காரத் தையல்களை மாணவிகள் கற்றுப் பயனடைகிறார்கள்.

சுருங்கக் கூறின் திருநெல்வேலி விவசாய போதனா பாடசாலை விவசாயக்கல்வியை மட்டுமன்றிப் பெண்களுக்கு வேண்டிய சகல கலைகளையும் கற்றுத்தருகிறது. இத்தகைய சகல கலைகளும் ஒருங்கே வரப்பெற்ற போதனா பாடசாலைகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கத்தால் நிறுவப்பட்டால் நாட்டிலுள்ள பெண்கள் சமுதாயம் மிக விரைவில் முனனேற்றம் அடையும். இதனால் நாட்டின் பொருளாதாரமும் முன்னேற்றமடையலாம்.

காலத்திற்கேற்ற கவர்ச்சியும்

நவீன நாகரீகமுமுடைய



தங்க வைர நகைகளுக்கு

நாணயமுள்ள ஸ்தாபனம்

ராணி ஆபரண மாளிகை

224, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

இன்றே வாருங்கள்!

நன்றே கொள்ளுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பர் கண்ட வள்ளுவர்

# சான்றேனை பெற்றதாய்க்கு உவகையுண்டு

—வள்ளுவர்

# தந்தைக்குப் பெரியதோர் உவகையுண்டு

—கம்பர்

— பி. ஜி. கருத்திருமன் —

உலகிலே தோன்றிய தொன்மையான மொழிகளிலே நம தமிழ்மொழி முதலிடம் வகிக்கின்றது. மொழியின் சிறப்பு தொன்மையினுல் மட்டும் ஏற்படுவதில்லை மொழி எந்த முறையில் வளர்க்கப்படுகின்றதோ, மக்கள் பண்பாடு எவ்வளவு சிறந்த முறையில் ஆக்கப்பட்டு அனுபவிக்கப் படுகின்றதோ அதைப் பொறுத்துத்தான் மொழியின் சிறப்பும், மக்களின் தகுதியும் உயரும். மொழி தொன்மையாக இருப்பதனுல்மட்டும் சிறப்புறுவதில்லை அந்த மொழியை வளர்ப்பவர்களுக்கே அதில் பெரும் பங்குண்டு.

தமிழ்மொழியைப் புரவலர்களும், புலவர்களும்காத்தனர், வளர்த்தனர். தொல்காப்பியர்தான் மொழிக்கு ஓரளவுஅறுதியிட்டார் என்றும், அகத்தியர் சிறப்புக்கொடுத்தார் என்றும், நக்கீரர் மொழியை ஆண்டாரென்றும் பற்பல காலங்களிலே சொல்லப் பட்டுவருகின்றது.

தெய்வீக மொழியென்று நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமிழ் மொழியை ஆண்டு அனுபவித்தனர். எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுலே தோன்றிய மொழியே கதியாக இருந்தவர்கள்இருவரே, ஒருவர் தமிழை மறையாக ஓதியவர் இன்னொருவர் தமிழ் மொழிக்கே மெருகு கொடுத்துத் தமிழினுடைய சிறப்பை அழியாத நிலையில் வைத்துப் பெருமைகொடுத்தவர். முதலாமவர் திருவள்ளுவர் திருவள்ளுவர் கொடுத்த தமிழ் மறையைச் சிறப்புறச்செய்தவர் கவிச் சக்கரவர்த்திகம்பரேயாவர்.

திருவள்ளுவரின் குறள் 1330க்கும் உரையாசிரியர் கம்பரே கவிச்சக்கரவர்த்தி கம்பர், வள்ளுவருக்குப்பின்னுல் பல நூற்றுண்டுகளுக்குப்பின்னர் வாழ்ந்தவர், தம்முடைய ராம காதையிலே திருவள்ளுவருடைய குறள் அனைத்தையும் புகுத்தி, பெருமை கொடுத்து, தம்முடையகாப்பியத்தைச் சிறப்புறச் செய்திருக்கிறுர். இவ்வளவு சிறப்புச் செய்தவருடைய காலத்தில் தமிழ்மக்கள் யாவற்றிலும்சிறப்புற்றவர்களாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

''நிலத்தில் கிடந்தமை
கால் காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச்
சொல்''
(குறள்-959)

ஒரு விளை நிலத்தில் உள்ள பூமிச் சிறப்பை, அந்தநிலத்திலிருந்துவெளிக்கிளம்புகிற முளையே காட்டி விடும். அதைப்போலவே, ஒருவன் வாயிலிருந்து வரும் வார்த்தைகளேஅவனுடைய குடிப் பிறப்பின் சிறப்பைக்காட்டி விடும். அதுபோலவே, நம் நாட்டில் தோன்றிய பெரும் கவிகள், நாட்டுமக்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எடுத்துக்காட்டாக இருந்துள்ளனர். வள்ளுவருடைய மறை உலகத்திலுள்ள எல்லாப் பகுதி மக்களும் போற்றுதற்குரியது. அதைப்போலவே, கம்பருடைய காப்பியமும். அதன் சிறப்பினைப் புரிந்துகொள்வோமானுல் வள்ளுவரைப் போற்றுபவர்கள், கம்பரைப்பின்பற்றி மகிழ்வார்கள்.

கம்பரும், தம் காப்பியத்தில் வள்ளுவர் மறையினைக் கையாண்டார் என்பதைச் சில உதாரணங்களால் காண்போம்:-

''ஈன்றபொழுதிற் பெரி
துவக்கும் தன்மகனைச்
சான்ருேன் எனக்கேட்ட
தாய்.''
(குறள்-69)

தன்மகன் சான்ருேன் எனக் கேட்டு தாய் மட்டுமா மகிழ்வாள்? பெற்ற தந்தைக்கு மகிழ்வதற்குத் தகுதி இல்லையா? அதைக் கம்பர் பெருமான் தம் காப்பியத்திலே அற்புதமாகப் புகுத்தியுள்ளார்:—

''மற்றவன் சொன்ன
வாசகம்
கேட்டதும் மகனைப்
பெற்றவன்றினும் பிஞ்ஞகன்
பிடித்த அப் பெருவில்
இற்றவன்றினும் எறிமழு
வாளவன் இழுக்கம்
உற்றவன்றினும்
பெரியதோர்
உவகையன் ஆனுன்''

—கம்பர்.

ஆகவே திருவள்ளுவர், பெற்றதாய்க்கு உவகை உண்டு என்பதை, தந்தைக்கும் அதைவிடப் பெரியதோர் உவகை உண்டு என்பதன்மூலம் கம்பர் தம் காப்பியத்தில் காட்டுகிறுர்.

மீண்டும், கம்பர் தாம் கண்ட ராமராஜ்யத்தில் ஓர் அற்புதமான அரசியலைக் காட்டுகிறுர். கம்பருடைய ராமராஜ்யத்தில் எல்லோரும் கற்றவர்கள். எல்லோரும் உழைத்துப் பயனை எய்துபவர்கள். ஆகவே அறிவும், செல்வமும் அரிய பொருள்கள் அல்ல, மலிவான பொருள்கள். எல்லோரும் அனுபவிக்கும் சமதர்மத்தையும் காட்டுகிறுர்.

''கல்லாது நிற்பார்
பிறரின்மையின்
சல்விமுற்ற
வல்லாருமில்லை அவை
வல்லர் அல்லாருமில்லை
எல்லாரும் எல்லாப்
பெருஞ்செல்வம்
எய்தலாலே
இல்லாருமில்லை, உடையார்
களுமில்லை மாதோ''

— கம்பர்

என்ன அற்புதமான சமநீதி வாழ்வைக் காட்டுடுகிறுர் கம்பர். இத்தகைய அரசினைத் தன்மகன் ராமனுக்கு ஒப்படைக்க எண்ணி மக்களைக் கேட்கிறுன் தசரதன் இராமனுடைய பண்பே ஒரு தனி. வீதியிலே போகும்படியான மக்களை எல்லாம் சந்திக்கிறுன் ராமன். எல்லாக் குறைகளையும் கேட்டு அறிந்து, ஆவன செய்து வாழ்கிறுன்' இதனைக் கம்பர்:—

[13-ம் பக்கம் பார்க்க]

'ஈழநாடு' 10வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பெற்ற இலக்கியப் போட்டியில் ரூபா 500-00 பரிசு பெற்ற காவியம்.




(சென்ற வாரத் தொடர்ச்சி)

## அமைச்சர் பதவியும் அழிவுத்திட்டமும்

சங்கிலி அடுத்த நாள்தன்
தமையனை அமைச்சனுக்கி
அங்குளார்க் கெடுத்துக் கூற
அண்ணனும் எழுந்து சொல்வான்
இங்குள்ள பெரியோ ரேஎன்
இச்சையோ பிணிதீர்க் கின்ற
சங்கைசேர் தொழிலே யன்றித்
தாரணி ஆளல் அல்ல.

ஆயினும் எந்தன் தம்பி
ஆண்டி லோமிகவி ளைஞன்
நேயமாய் இந்த நாட்டை
நிலைபெற ஆளு தற்கு
தாயினும் கனிவாய் நாங்கள்
தக்கவா றுதவ வேண்டும்
தீயவை நெருங்கா வண்ணம்
தேசத்தைக் காப்போ மென்ருன்.

மன்றத்தி லுள்ளோர் எல்லாம்
மகிழ்ந்தனர்; மன்னன் சேயைக்
கொன்றவன் சொன்ன தெல்லாம்
கொடியபொய் ஐய மில்லை
இன்றிவன் மகிழ்ச்சி காணீர்
இவன்சதி செய்கு வானே
என்றுமே யுரைத்த வண்ணம்
இருப்பிடம் கலைந்து சென்ருர்.

சிற்றர சாக வூர்கா
வற்றுறை யளு கின்ற
குற்றமே யன்றி வேறு
குணமறி யாத மூடன்
கற்றறிந் தோரைப் பேணுக்
சாக்கைவன் னியனை ஓர்நாள்
அற்பர்கள் அழைத்தே திட்டம்
அமைத்தனர் அழிவுக் காக

கோட்டையும் கொழும்பும் னூன்று
குரைகடல் ஆட்சி செய்யும்
நாட்டின ரான வெள்ளை
நண்பர்கட் காயிற் றன்றே
ஈட்டருஞ் செல்வஞ் சேர்த்தல்
யேசுமார்க் கத்தை யெங்கும்
நாட்டுதல் அன்றி வேறு
நாட்டமே யில்லா தார்கள்.

மன்னனை அவர்க ளோடு
மாறிட வைத்தே நாங்கள்
அன்னவர் துணையி னேடு
ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும்
என்றுமே கப்ப மீவோம்
யேசுமார்க் கத்தை யிங்கே
நன்ருகப் பரப்ப வைப்போம்
நாமெனில் உதவி செய்வார்.

வன்னியன் உள்ளத் துள்ள
வஞ்சகத் திட்டந் தன்னை
சொன்னதும் மகிழ்வு கொண்ட
துரோகியப் பாந யந்து
நன்மையே அன்றி வேறு
நமக்கினி வருவ தில்லை
இன்றுயாம் சென்றே யன்னுர்
இசைவினைப் பெறுவோ மென்ருன்.

இப்படி யாகத் திட்டம்
இவர்களு மிட்ட பின்னர்
அப்பாவும் வன்னி யானும்
யாருமே அறியா வண்ணம்
கப்பலில் ஏறி வெள்ளைக்
காரரைச் சந்தித் தன்னுர்
ஒப்புதல் பெற்றே நாட்டுக்
குலைவைக்கத் தொடங்கி னுர்கள்.

வாசனைப் பொருள்கள் வாங்கும்
வணிகத்தி லீடு பட்ட
தேசத்தோ ரான இந்தத்
தீயராம் போர்த்துக் கேயர்
நாச காரருக்குச் செய்த
நன்மையால் நாடு தீய்ந்து
மோசமே யடைந்த செய்தி
மொழிந்திட வியலு மோதான்.

மூவரும் வகுத்த திட்டம்
முற்றிட முதற்கண் நாட்டில்
சாவிற்கு மஞ்சாத் தீயர்
சண்டாளர் சிலரைத் தூண்டி
காவலர்க் கெதிராய் மக்கள்
கலகங்கள் புரிய வைக்க
ஏவினர் என்ற போதும்
இவையெலாம் தோல்வி கண்ட

[தொடரும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமையை ஒழிப்பது எப்படி?

(3 ம் பக்கத் தொடர்ச்சி

கொள்கையல்ல. உயிரிலேயே இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று. தீண்டாமை ஒழிப்பிலும்இது.அதேஅளவு உண்மைதான். அதனுடைய தலையாய முக்கியத்துவத்தை நாம் ஒருமுறை உணர்ந்துவிட்டால் போதும்.

## ஆன்மீக அடிப்படை

எந்தத்தீங்கை ஒழித்துக்கட்ட விரும்புகிறோமோ அது தீண்டத்தகாதவர்கள் குறித்தது மட்டுமல்ல என்பதை நாம் கண்டுவிடுவோம். முதலில் கடுகளவு இருக்கும் ஒரு தீங்கு பின்னர் பெரிய ஆலமரமாக வளர்கிறது. நீண்ட காலத்தில் அது எதன்மீது வேர்விட்டதோ, அதையே அழித்துவிடுகிறது. தீண்டாமையில் விழுதுகள் எண்ணற்றவை. மற்ற மதங்களையும் பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் குறித்து இது தற்போது இருக்கிறது. ஏன், ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களையும் கூடவிடுவதில்லை. இதனுல் தீண்டாமையின் சில வகைகள் பூமிக்கு உண்மையிலேயேபாரமாகி விட்டன சிலர் ஓயாது தண்ணீரில், மூழ்கிக்கொண்டிருக்கின்றனர். தங்களுக்கெனத் தனியாகச்சமைத்துக்கொள்கின்றனர். இதனுல் தங்களைத்தாங்களே கவனித்துக்கொள்ள அவர்களுக்குப் போதுமான நேரமில்லை. ஆண்டவனுக்கு வழிபாடு செய்வதுபோல் அவர்கள் பாசாங்கு செய்கிறுர்களே தவிர அவர்கள் உண்மையிலேயே வழிபாடு செய்வது தங்களைத்தான். ஆகவே தீண்டத்தகாதவர்களை நண்பர்களாகக் கொள்வதுடன் மட்டுமல்லாது. எவ்வுயிரையும் தம்முயிர்போல் நேசிப்பதன்மூலம்தான் இந்தப் பாவவிமோசனம் கிடைக்கும். தீண்டாமை ஒழிப்பு என்பதன் பொருள், உலக முழுவதையும் நேசித்து அதற்காகத் தொண்டு செய்வதென்பதாகும். இவ்வாறு செய்யும்போது, அஹிம்சையில் இரண்டறக் கலந்துவிடுகிறது. தீண்டாமை ஒழிப்பானது மனிதனுக்கு மனிதன்உள்ள வேற்றுமை மட்டுமல்லாது பல்வேறு உயிர்களுக்குமிடையே உள்ளதடைகளையும் அகற்றுவதாகும். உலகெங்கிலும் இப்படிப்பட்ட முள் வேலிகள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். ஆயினும் இங்கு தீண்டாமையைப் பற்றி-இந்தியாவில் சமயத்தின் அங்கிகாரம் பெற்ற தீண்டாமையைப்பற்றி-கோடிக்கணக்கான மக்களை அடிமைத்தனத்தின் விளிம்பில்கொண்டு போய்விட்ட தீண்டாமையைப் பற்றித்தான், பிரதான கவனம் செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்.

கீழ்மக்களின் வழிதுறைகளைக் கடைப்பிடித்து அரிஜனங்களின் குறிக்கோளையும் இந்துமதத்தின் குறிக்கோளையும் நாம் நிறைவேற்றமுடியாது. இந்தியாவிலேயே, சொல்லப்போனுல் உலகிலேயே தீண்டாமை எதிர்ப்புத்தான் மிகப்பெரிய சமய சீர்திருத்த இயக்கமாகும். ஏனெனில அடிமைத்தனத்தில் வாழும் நான்கு கோடி மக்களின் நல்வாழ்வைக் குறித்தஇயக்கம் இது. இதை ஏற்கமறுக்கும் வைதிகப் பிரிவினரையும் நாம்வெறுக்க வேண்டாம். மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்த வேண்டும். அன்பின் மூலமாக தியாகத்தின் மூலமாக முழுமையான தன்னடக்கத்தின் மூலமாக நம்முடைய வாழ்க்கையின் தூய்மை எவ்விதச் சத்தமும் இன்றி அவர்கள் உள்ளத்தில் பிரதிபலன் ஏற்படுத்த வாய்ப்பளிப்பதன் மூலமாக, நாம் அவர்களை வெல்லவேண்டும். தம்முடைய அன்பும் சத்தியமும் எதிரிகளை நல்வழிக்குத் திருப்பும்என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும்.

# சான்றோனே......

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

''எதிர்வரும் அவர்களை
எமையுடை இறைவன்
முதரும் கருணையும்
முகமது மலர
எதுவினை இடரிலை
இனிதினும் மனையும்
மதிதரும் குமரரும்
வலியதுகொல்.''
— கம்பர்

எனவே எத்தகைய ஜனநாயகப்பண்பாட்டை இராமனிடம் காட்டுகிறுர் கவிச்சக்கிவர்த்தி!

இத்தகைய பண்புடைய இராமனை மக்கள் தங்கள் தலைவனுக ஏற்றுக்கொள்ளும் சமயம், பொதுமக்கள் கூறுவதைக் காண்போம்:—

''ஊருணி நிறையவும்,
உதவு மாறுயர்
பயன்மரம்
பழுத்தற்றுகவும்
கார்மழை பொழியவும்
கழனிநீர் பெருகவும்
ஈறுக்கின்றுர்கள் யார்?'
— கம்பர்

இது பொதுமக்கள்வாக்கு. இதை வள்ளுவப் பெருந்தகை தமது மறையில் 'ஒப்புரவறிதல்' என்ற அதிகாரத்திலே உள்ள இரு குறள்களில் கூறுகின்றுர்.

'ஊருணி நீர்நிறைந்
தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு.''
''பயன்மரம் உள்ளூர்ப்
பழுத்தற்றுல் செல்வம்
நயனுடை யான்கண்படின்''
—(குறள் 215, 216)

இம்முறையிலே திருவள்ளுவருடைய எல்லாக்குறள்களையும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பூரணமாக, தெளிவாக, உயர்வாகச் சிறப்பித்துத் தம்காப்பியத்தில் காட்டியுள்ளார்.

ஆகவே, தமிழ்க்கதிக்கு இருவர்தான்-கம்பரும், திருவள்ளுவரும்.

# தேசாபிமானம்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

நாடுகள் பலப்பல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமது இனத்தின் மாண்பை மறந்து தாம் பிறந்த நாட்டைத் துறந்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வந்தவர்கள் யூத குலத்தவர்கள். கிட்லரின் விஷவாயு அறைகளிலே 60 லட்சம் யூதர்கள் மடிந்தனர். அவர்கள் சென்ற இடமெல்லாம் விரட்டி அடிக்கப்பட்டனர். அவர்களது நாட்டுப்பற்று மட்டும் மங்கி மங்கி ஒளிர்ந்து கொண்டிருந்ததேயன்றி மடிந்துவிடவில்லை. அவர்களது இடையரு உழைப்பினுலும், அளப்பரிய தியாகத்தினுலும் இழந்த நாட்டைப் பெற்றனர். இன்று உரிமை வாழ்வு வாழ்கின்றனர். சைப்பிரஸ்தீவு சதிகாரர்களின் கையிலே சிக்கித் தத்தளித்த நேரத்திலே மதத்தைப் போதிக்கப் புறப்பட்ட பாதிரியார் 'மக்காரியோஸ்' நாட்டுப்பற்றினுல் உந்தப்பட்டு விடுதலைப் போரிலே ஈடுபட்டார். இன்னல் பல ஏற்றுர். இறுதியில் வெற்றியும் கண்டார். இத்தாலியநாட்டின் உதய சூரியனுக விளங்கிய மாஜினி அந்நாட்டு விடுதலைக்காக இளைஞர் படையை திரட்டி வெற்றி கண்டான்.

# வில்பிரட் தீசிகர் - 1




அராபியப் பாலைவனங்களில் பல மயிர்க்கூச்செறியும் பிரயாணங்களை மேற்கொண்டு. உலகப் பிரசித்தி பெற்ற வில்பிரட்தீசிகர், எதியோப்பாவின் தலைநகரான அடிஸ் அபாவிலிருந்த பிரிட்டிஷ் தூதுவரின் மகனுக 1910-ம் ஆண்டு பிறந்தார். 1916-ம் ஆண்டு, எத்தியோப்பியாவில் நடைபெற்ற மாபெரும் உள்நாட்டு யுத்தத்தை அடக்க இராணுவத்தினர் விரைந்து சென்று கடமையாற்றிய காட்சிகளெல்லாம், அப்போது ஆறுவயதுச் சிறுவனுக இருந்த தீசிகரின் இளம் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டன.

பிரிட்டனில் படித்துக்கொண்டிருந்த தீசிகர், 20 வயதானபொழுது ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து, சக்கரவர்த்தி ஹேய்ஸ் செலாஸியின் முடிசூட்டுவிழாவில் கலந்துகொள்ள எத்தியோப்பியா வந்தார். தீசிகர் தந்தை முடிக்குரிய இளவரசனை, சக்கரவர்த்தியின் குழந்தையை உள்நாட்டு யுத்தத்தின்போது காப்பாற்றியதற்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவே தீசிகரின் குடும்பத்தினர் முடிசூட்டுவிழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பாலைவனங்களில் பிரயாணம் செய்யும் சிறுவயது முதலே கனவு கண்டுகொண்டிருந்த தீசிகர், 24 வயதில் சூடான் அரசாங்க சேவையில் சேர்ந்து, மூன்றுநான்கு சகாக்களோடு, ஒட்டகங்களில்ஏறி பாலைவனம் முழுவதையும் சுற்றிப் பார்த்தார். தாங்களே சமைத்து, ஒரே பாத்திரத்தில் வைத்து ஒன்றுக உண்டு மகிழ்ந்தனர்.

1945-ல் தென் அராபியாவின், யாருமே முன்பின் சென்றிராத வரண்ட பாலைவனமான 'ரப் அல்காலி'யில் பிரயாணம் மேற்கொள்ள வேண்டுமென விரும்பி, ஒட்டகத்தில் ஏறிச் சென்று, சுமார் 5 ஆண்டுகள் பலவிதக் கஷ்டங்களுக்கிடையே பாலைவனத்திலேயே வாழ்ந்தார்.



முக்ஸின் என்ற மரங்களடர்ந்த, தண்ணீர் உள்ள பிரதேசத்திலிருந்து. பாலைவன வழிகாட்டிகளான 'பெது'க்களின் உதவியுடன், தனது வீரதீரப் பிரயாணத்தை மேற்கொண்டார். பெதுக்களில் ஒருவனுக்குப்பல்வலி ஏற்பட்டபோது, அவனது பல்லைப் பிடுங்கவும் தீசிகர் உதவினுர்.

வெகுதூரம் போகு முன்பே, 500 அடிக்கும்அதிகம் உயரமான மணல் மலைகளை ஏறிக் கடக்கவேண்டிய இடர்பாடு ஏற்பட்டது ஒரு 'மலை' யைக் கடக்கும் போது ஒட்டகமொன்று இடறி விழுந்துவிட்டது. பாலைவனப் பிரயாணங்களில், மிகமிக, மிகமிக முக்கியமான தண்ணீரைச் சுமந்துகொண்டு வந்த ஒட்டகம் தண்ணீர்ப் பையைச் சேதப்படுத்திவிட்டதோ என்றுதீசிகர் பயந்துபோனுர். நல்லவேளையாகத் தண்ணீர்ப்பை தப்பியிருந்தது.

தாகத்தைச் சிரமப்பட்டுச் சமாளித்துக்கொண்டு பிரயாணத்தை மேற்கொண்டார்கள், இரவு நேரங்களில் கூடாரமடித்துத் தங்கி, பாலையும் தண்ணீரையும் கலந்து ஆளுக் [illegible] ளவோடு அருந்துவார்கள்.

பகலெல்லாம் கொளுத்தும் வெயில்; இரவெல்லாம் நடுங்கும் குளிர்; எந்நேரமும் பசியும் தாகமும். இந்த நிலையில் இரவோடிரவாக, சந்திரனின் பிரகாசமான ஒளியைப் பயன்படுத்தி பிரயாணத்தை மேற்கொண்டனர். பாலைவன வழிகாட்டிகள் பாடினர்; பாலைவனத்தில் வேறு என்னதான் செய்யமுடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பர் கவிவிருந்து

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றுகுறிப்பிடுகிருன். பிறகு விச்வாமித்திரன் ராம லட்சு மணரோடும், அகலிகையோ டும் கௌதம முனிவரது ஆச்சிரமத்தை அடைகிருன் விச்வாமித்திரன் கௌத மரை தோக்கி,

''அஞ்சன வண்ணத்தான்
தன்அடித்துகள் கதுவா
முன்னம்
வஞ்சிபோல் இடையாள்
முன்னை வண்ணத்தள்
ஆகிநின்ருள்
நெஞ்சினுள் பிழைப்பிலாளை
நீஅழைத்திடுக''
என்னக்
கஞ்சமா முனிவன் அன்ன
முனிவனும் கருத்துள்
கொண்டான்.

அப்பால் ராமன் கௌத மனை வணங்கி வலங்கொண்டு துதித்து அகலிகையைஅந்த மகரிஷியின் வசத்திலேஒப்பி ஒப்பிக்கிருனும்.

குணங்களால் உயர்ந்த
வள்ளல், கோதமன்
கமலத்தாழ்கள்
வணங்கினன் வலங்
கொண்(டு)
ஏத்திமாசறு
கற்பின்மிக்க
அணங்கினை அவன்கை
ஈந்(து) ஆண்டு
அருந்தவனேடும்வாச
மணம்கிளர் சோலைநீங்கி
மணிமதில்
மிதிலை கண்டார்''.

ராமன் அகலிகையை மஹ ரிஷியின் வசமாக்கியதை ''அமன் கைஈந்து'' என்று கூறுவது கவனிக்கத்தக்கது. புதிதாக ஒருகன்னிகையைப் பாணிக்ரஹணம் செய்து கொடுத்தது போன்ற ஒரு குறிப்பு — ஒரு தொனிப் பொருள்-கிடக்கிறதல்லவா?

அகலிகை கதை பிரசித்த மானது; சங்ககாலத்திலும் பிரசித்தமாகத் தமிழ் நாட் டில் வழங்கிவந்தது- பழைய தமிழர்களுக்கிடையே வழ ங்கிவந்தபடி இக்கதையை மாற்றியமைக்கும் கம்பன், அகலிகையை 'நெஞ்சினுல் பிழைப்பிலா' ளாக்குகிருன்; தேவராஜாவைத் தீவினை நயந்து செய்த தேவர்கோன் ஆக்குகிருன். இத்தகைய மாறுதலால், ஆண் மகனது வஞ்சனையே பெண்மையின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ற கொள்கையை உய்த்துணர வைக்கிருன்.

சூரியாஸ்தமனம் ஆக விலலை. ஜனகமஹாராஜா வின் விதேக ராஜ்யத்திற்கு ராஜதானியாகிய மிதிலை மாநகரின் கோட்டை மதில் மீது கொடிகள் பறந்து கொண்டிருப்பது நன்ருகத் தெரிகிறது, அந்த அழகிய கொடிகள் காற்றிலே குதூ கலமாக அசைந்தாடுவதைக் கண்டதும் விச்வாமித்ர மஹ ரிஷிக்கே குதூகலந்தான். இளைஞர்களான ராமலக்ஷ் மணர்களுடைய குதூகலத் தையும் சொல்லவேண்டுமா? இவர்களுடைய குதூகலத் திற்குக் காரணம் காடும், மேடும், பாலையும், சோலை யும், நதியும், வயல்களும் தாண்டிவந்து இந்தப் புதிய நகரத்தைப் பார்க்கிருேமே என்பதுதான். முனிவனு டைய குதூகலத்திற்குக் கார ணமோ வேறு.

'வேள்விக்காக வர வேணும்' என்று அழைத்து மணவேள்வியும் நடத்திப் பார்க்க ஆசைப்படுகிறவ னல்ல விச்வாமித்திரன். இந்த முனிவனுடைய இந்த மனநிலையோடு கவிஞனும் அந்த மதில் கொடிகளைப் பார்க்கிருன் வர்ணிக்கிருன்.

''மையறு மலரின் நீங்கி
யான்செய்மா தவத்தின்
வந்து
செய்யவள் இருந்தாள்!''
என்று
செழுமணிக் கொடிகள்
என்னும்
கைகளை நீட்டி அந்தக்
கடிநகர்கமலச்செங்கண்
ஐயனை, ''ஒல்லைவா!'' என்று
அழைப்பது போன்ற
தம்மா!

குற்றமில்லாதஅழகு வாய்ந்த செந்தாமரைப் பூவிலே கொலுவிருக்கிருளாம் ஸ்ரீதேவியாகியமஹாலக்ஷ்மி. அவள் அந்த இயற்கைக் கோயிலைத் துறந்து மிதிலை மாநகரத்திலே குடியேறி இருக்கிருளாம் லக்ஷ்மியாக ''அதற்குக் காரணம் நான் செய்த மாதவம்தான்!'' என்று மிதிலாநகரம் கர்வத் தோடு நினைப்பது போலத் தோன்றுகிறதாம் கம்பீர மாகநின்றஅந்தக் கோட்டை மதில்களைப் பார்த்ததுமே. ராமனைக் கண்டதும் அந்த நகரம், என்னிடம் வந்திருக் கிருள் உன்னுடைய உயிர்த் துணையான காதலி; விரை வில் வந்துவிடு'' என்று கைநீட்டி அவசரப்படுத்தி அழைப்பது போலிருக்கிற தாம். அந்தக் கொடிகள் இவர்களை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும் தோற்றம். குறைவில்லாத இயற்கை அழகுவாய்ந்த தன் இருப்பி டத்தைவிட்டு மஹாலட்சுமி யும் விரும்பிவந்து சீதாலட் சுமியாகி வீற்றிருப்பதற்கு ஏற்றவளமும், அழகும் சிற்ப சித்திர வேலைப்பாடுக [illegible] மிதிலா பட்டணம் என்பது குறிப்பு.

(தொடரும்)

## ''ஈழநாடு''
## விகட கவிதைப் போட்டி — (18)

வழவழாவென்று பேச்சுப்பேசி, செயலில் மட்டும் சைவர்காட்டும் மேடைப் பிரசங்கியைப்பற்றி கவி பாடச்சொன்னேம். அப்பப்பா! நமது ஈழநாட்டில் இத்தனை பாரதிகள், பாரதிதாசன்கள், கம்பன்கள், கம்பதாசன்கள் இருக்கிருர்களோ என்று ஆச்சரியப் படும் அளவுக்கு மிகத்தரமான கவிதைகள் வந்து குவிந்துள்ளன. பரிசுக் கவிதைகளைத் தேர்ந்தெடுப் பது கஷ்டமாய்ப்போய்விட்டது.

### முதலாம் பரிசு

மேடையில் ஏறிவிட்டால்
மேதையோ இவனென் றெண்ண
ஜாடைசெய் திடுவான் ஐயன்
ஜனத்திரள் முன்னே நின்று;
ஆடையும் குலைதல் காணு[து]
அரற்றுவான் ஆனுல் ஒன்று!,
பாடையில் போகு மட்டும்
பாவியோ செயலில் காட்டான்.''

எழுதியவர்:- கி. குலசேகரன், 'வளர்மதி', கர வெட்டி கிழக்கு, கரவெட்டி.

### இரண்டாம் பரிசு

மயல்கொளப் பேசிமிக்க மக்களை மகிழவைப்பார்
புயல்அன்ன பேருரைகள்தானும் பொழிவர்போய்
மேடையேறி
முயல்தனின் கொம்பேயாகும் மொழிந்திடி
னிவர்செயல்கள்
கயல்விழி மாதேயோர்ந்து கழறுவா யிவர்தரத்தை.

எழுதியவர்:-தி. கார்த்திகேயன், 'சுந்தர பவனம்' அராலி தெற்கு. அராலி.

### மூன்றும் பரிசு:

அழகான மேடையிலே அடிவைத் தேறி
அங்கையினில் 'மைக்'பிடித்து அழகுசொட்ட
விழலான பேச்சினையே பேசிவீணே
வெற்ருெலியை எழுப்புகின்ற வீரா! வீணு!!
தழலாக வேகுதடா நெஞ்சு உன்றன்
சொல்லிற்கும் செயற்குமுள உறவைஎண்ணி
நிழலாகப் பார்த்து உட்கார்ந்து கையை
நீட்டி யாசிப்பதுவே உனக்கு நன்று.

எழுதியவர்:-அ. சிவகுமார், 23, ஐயனுர்கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

### அடுத்தபோட்டி:

வேருெருவர்மீது பொருமை தாங்காமல், மொட் டைக்கடிதங்களும், பெட்டிசங்களும், பரதேசித் தபால்களும் எழுதும் நபரைப்பற்றி ஒருகவிதை புனை யுங்கள் பார்ப்போம்.

### நிபந்தனைகள்

ஒவ்வொரு விடையும் அதற்குரிய கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படவேண் டும். விடைகள் 7-9-69 க்கு முன் விகட கவிதைப் போட்டி (18), 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு வந்து சேர வேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் ஒரே உறையில் போட்டு அனுப்பலாம். ஆனுல் ஒவ் வொன்றுடனும் கூப்பன் இருக்கவேண்டும். போட் டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. சிறந்த மூன்று விடைகளுக்கு முறையே ரூபா ஐந்தும், மூன்றும், இரண்டும் வழங்கப்படும்.

கூப்பன்

'ஈழநாடு' விகடகவிதைப் போட்டி-(18)

பெயர் ..........................................

விலாசம்..........................................

..........................................

திகதி..................

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை10-30
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நடித்த
முகூர்த்த நாள்

REGAL JAFFNA
Daily 4-45, 7-00&9-45p.m
Poya Pre-Poya 4 Shows
Sean Connery,
Claudine Auger
in
THUNDERBALL

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மே
எம்.ஜி.ஆர். - கே.ஆர்.விஜயா
நடித்த
தொழிலாளி


MANOHARA
JAFFNA
Daily 6-00,, & 10-00 p m
Poya, Pre-Poya 4 Shows
WAR AND PEACE

61-வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனேகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
விஜயா சுரேஷ் கம்பைன்ஸ்
குழந்தைக்காக
கதை-வசனம் துறையூர் மூர்த்தி பாடல்கள் கவிஞர் கண்ணதாசன்
குழந்தைக்காக நங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள், பலபரிசுகள் காத்திருக் கின்றன உங்கள் குழந்தைக்காக!

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த
எங்க ஊர் ராஜா


யாழ் வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம் ராஜன், புஷ்பலதா, நடித்த
பால்குடம்

யாழ்நகர் வெலிங்டன்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயா தினங்களில்
காலை 10 30 மணிக்கு மெட்னி
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
எல். விஜயலக்ஷ்மி ★ ஏ. கருணாநிதி
பாலமுரளி கிருஷ்ணு ★ கீதாஞ்சலி
வாணிஸ்ரீ ★ ஜெயந்தி ★ நிர்மலா
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்
பக்த பிரகலாதா
(ஈஸ்ட்மென் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நன்றி






13-8-69 முதல் 16-8-69 வரை யாழ். மத்திய கல்லூரியில் நடந்தேறிய பொருட்காட்சியின்போது எமது அரங்குக்கு வந்து எமது உற்பத்திப் பொருள்களைப் பார்வையிட்டு எம்மை உற்சாகப்படுத்திய ஆதரவாளர்கள் பலருக்கும்


# எமது நன்றி

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் எமது பொருள்களுக்கு தொடர்ந்து உங்கள் ஆதரவு கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.






விநியோகஸ்தர்:-

## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

யாழ்ப்பாணம்.

கிளைகள்: சுன்னுகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, கிளிநொச்சி, கொழும்பு.

உற்பத்தியாளர்:-

## வெள்ளியம்பதி

அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்க்வைற்
நீல சோப்
10 சதக் கட்டி
வாங்கி அதிகலாபம்
அடையுங்கள்

## மகாத்மா மணி மொழிகள்

விவேகமில்லாமல் ஆட்சியை எதிர்ப்பதனுல் அராஜகமும் கட்டுப்பாடின்மையும், தான்தோன்றிப் போக்கும் உருவாகிவிடும். சமுதாயத்தின் கைகளாலேயே அதற்கு அழிவு ஏற்பட்டுவிடும்.

0 0 0

சட்டத்திஞல் கட்டாயப்படுத்திக்கூடத் தீண்டாமையை அகற்ற முடியாது. ஆண்டவனுக்கும் மனிதனுக்கும் எதிரான ஒரு குற்றம் இது என்று இந்துக்களின் பெரும்பான்மையோர் உணர்ந்து அதற்காக வெட்கப்படும் போதுதான் அதை அகற்றமுடியும்.

0 0 0

இந்து சமயத்தை தூய்மைப்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் ஒவ்வொரு அரிஜனனின் உள்ளத்திலும் கொழுந்துவிட்டெரிய வேண்டும். இம்முயற்சியில் தம் உயிரையும் கொடுக்க அவர் தயாராய் இருக்க வேண்டும்.

ஆட்சிமன்றத்திலே

நமது நிருபர்
பெரி. சுந்தரலிங்கம்

# இந்திராவுடன் சிறிமாவை ஒப்பிடுவதற்கு பிலிப் ஆட்சேபம்

## மக்கள் சபைக்குள்ளும் தி. மு. க. பூச்சாண்டி

அறிஞர் அண்ணுதுரை ஒரு முறை தேர்தற் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு காங்கிரசுக்கு சவால்விட்டு, பண பலத்தோடு, பணபலத்தை மோத விட்டுத் தேவையான வாக்குகளைப் பெறுவோம் என்ற கருத்தில் 'காட்டவேண்டியதைக்காட்டி, பெறவேண்டிதைப் பெறுவோம்'' என்று சூளுரைத்தார். துரும்பையும் தூணுக்கும் கைங்கரியத்தில் கைதேர்ந்த காங்கிரஸ் பிரச்சாரகர்கள் சிலர் இதை பல்வேறு விதத்தில் வியாக்கியானம் செய்து, அண்ணு அசிங்கமாகப் பேசி, அரசியல் உலகுக்கே அவமானம் ஏற்படுத்திவிட்டார் என்று காட்ட முனைந்தனர்.

இதை எதற்காக இங்கே குறிப்பிடவேண்டியிருக்கிறதென்ருல், ஈழத்து அரசியல் உலகில், குறிப்பாக ஆட்சிமன்றத்தின் உள்ளே பிரதம மந்திரி டட்லிசேனுநாயக்கா வெளிமடைத் தொகுதியில் நடந்த கூட்டமொன்றில் பேசிய பேச்சுப் பற்றி நடைபெற்றுக்கொண்டிருக்கும் காரசாரமான வாக்குவாதத்தையொட்டித்தான்.

இலங்கையிலே தி. மு. க. வைத் தடைசெய்ய, சாதாரண சட்டத்தின்கீழ் இடமில்லையென்று பிரதமர் கூறுவதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயகா ஒருகூட்டத்தில் பேசும் போது, 'இலங்கையில் தி மு க வைத் தடைசெய்வது எப்படி என்பதை நான் செய்து காட்டுகிறேன்' என்ற கருத்தில் எதையோ சொல்லி, அதை அடிப்படையாக வைத்து பிரதமர் வெளிமடையில் பேசும்போது ''எதிர்க்கட்சித் தலைவி (செய்து) காட்டுகிறேன் என்ருர்; ஆனுல் இன்னும் காட்டவில்லை; நான் பார்க்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்' என்று பேசியதாகப் பத்திரிகைச் செய்திகள் கூற, இந்த நாட்டின் பெண்ணினத்தையே அவமானப்படுத்தும் வகையில் பிரதமர் பேசிவிட்டார். இதைஅவர் உடனடியாக வாபஸ்பெற வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஓலமிட, அரசியல் உலகிலும் ஆட்சிமன்றத்தின் உள்ளும் ஒரே களேபரம் உண்டாக்கிவிட்டது இந்தப் பிரச்னை

30-ம் திகதி பிரதம மந்திரியின் இலாக்காக்கள் சம்பந்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்பற்றிவரவு செலவுத்திட்டம் குழு நிலைப்பரிசிலனையில் விவாதிக்கப்பட்ட போதும். ஹபராதுவ எம், பி. திரு. பிரின்ஸ் குணசேகராவும் வலப்பனை எம். பி. திரு, திரு ஹேரத் ஆகியோர் இந்தப் பிரச்னையை பிடித்துக் கொண்டு தொங்கத் தவறவில்லை.

பிரதம மந்திரியின் இலாகாக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள்பற்றிய விவாதம் என்ருல், அதில் இலங்கைத் தி மு க; இந்திய தி மு க, இந்திராகாந்தி, வி வி கிரி, சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம், அரபு—இஸ்ரேல்போர், பொலிஸ் இராணுவம், கடற்படை, விமானப்படை, கள்ளக்குடியேற்றம், கள்ளக்கடத்தல் இப்படிப்பட்ட எத்தனையோ எண்ணிலடங்காத விஷயங்கள் இடம் பெற்றதில் வியப்பொன்றுமில்லைத்தான்!

தி மு. க. பூச்சாண்டி பற்றி எவ்வளவுதான் பேசினுலும் எதிர்க்கட்சியினரின் தேர்தல்தாகம் அடங்காது. 'அற்லீஸ்ட்' 1970 வரையிலுமாவது இதைப்பூதாகாரமாகக் கற்பனைசெய்து பிரச்சாரம் செய்வார்கள் என்பதை அறிந்துதானே என்னவோ பிரதமமந்திரி தனது பதிலுரையில் தி. மு. க வைப்பற்றி அவ்வளவாக ஒன்றும் குறிப்பிடாது இருந்துவிட்டார்,

ஹபரதுவ எம். பி. திரு. பிரின்ஸ் குணசேகரா கொண்டுவந்த தனிப்பட்ட பிரேரணையொன்றின் விளைவாகத்தான் இந்த வருடத்திலிருந்து வரவு செலவுத் திட்ட குழுநிலைப் பரிசோதனைக்கு அதிக நாட்களும் நேரமும் ஒதுக்கப்பட்டிருகின்றன. இதனை நினைவிற் கொண்டோ என்னவோ சபைத் தலைவர் எவ்வளவு தான் குறுக்கிட்டாலும்கூட எந்த ஒரு தலைப்பிலும் அரைமணித்தியாலம் ஒரு மணித்தியாலத்திற்குக் குறையாமல் அளந்துவிடுகிருர் ஹபரதுவ எம். பி.

இன்றும் '' இலங்கையில் தி. மு. க. விஞல் அபாயம் ஏற்படாது என்பதை விவாதத்திற்காக எடுத்துக் கொண்ட பிரின்ஸ், ''இந்தியாவில் தி. மு. க. வளர்ந்து வருவதாலும், வடக்கு கிழக்கு மாகாணங்களிலே தமிழகத்திற்கு வெகு அண்மையில் தமிழர்கள் வாழ்ந்து வருவதாலும், எதிர்காலத்தில் எதிர்பாராத பிரச்னைகள் தோன்றலாம்'' என்று தனது பீதியை வெளியிட்டார். அத்தோடு நிற்காது ''இந்திரா காந்திக் குப்பின் இந்தியா பிளவுபடலாம்'' என்று ஆரம்பித்து, அண்மையில் நடைபெற்ற இந்திய ஜனுதிபதித் தேர்தல் பற்றியும், அதனையொட்டி அங்கே நடந்த உட்கட்சிப் போராட்டங்கள், கட்சிப் பூசல்கள் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறிவிட்டு ''இலங்கையிலும் நிஜலிங்கப்பாக்களும் ரெட்டிகளும் இருக்கிருர்கள். இவர்களுக்கெல்லாம் (எங்களின் எதிர்க்கட்சித் தலைவி) ''இலங்கையின் இந்திரா'' தகுந்த பாடம் கற்பிப்பார்'' என்று முழக்கிஞர்.

''இலங்கையின் இந்திரா' என்று எதிர்க்கட்சித்தலைவி சிறிமாவைக் குறுப்பிட்டதும் அரசாங்கத் தரப்பில் இருந்த சில அங்கத்தவர்களுக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொள்ளப் பெரும்சிரமப்பட்டனர். இதனைக்கண்ட ஹபரதுவ எம். பி. சிறி, மாவின் பெருமைகளைச் சிறிதே எடுத்துக்கூற முனைந்தார்.' ''இந்திராகாந்தி இன்று இந்தியாவின் பிரதமராக இருந்தாலும் உலகிலேயே முதன்முதலாகப் பிரதமர் பதவி வகித்த பெண் எங்கள் தலைவி, எதிர்க்கட்சித்தலைவி — திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தான் என்று சொன்னது தான் தாமதம், புலியெனச் சீறிப்பாய்ந்தார் அமைச்சர் பிலிப் குணவர்த்தனு!

''சிறிமாவோ கொல்லைப்புற வழியாகப் பிரதமர் பதவிக்கு வந்தவர்'' என்று கூறி இந்திராவுடன் சிறிமாவை இணைத்துப் பேசியதற்கு —பேசுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

## தமிழரின்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கலாசாரம், சமயம் இவ்விஷயத்தில்தான் ஓரளவு இரு சார்பினருக்கும் ஒற்றுமையுண்டு.

### கட்சி அரசியல்

தமிழரையும்இலங்கையையும் பாதிக்கும் மற்ருெரு விஷயம் கட்சி அரசியல் முறை. இதைச்சிலர் ஒப்பாமலிருக்கலாம். பிரிட்டனிலிருந்து நாம் பெற்றுள்ள கட்சிமுறை அரசியல், இலங்கைக்கு இந்நிலையில் உகந்ததன்று. அவசரப்பட்டு அது இங்கு புகுத்தப்பட்டுவிட்டது. மேலும் 'காபினெட்' எனும் கூட்டுப் பொறுப்புள்ள மந்திரிசபை முறையும் நமக்கு நல்லதல்ல. கமிட்டி முறையே இந்நிலையில் விரும்பத்தக்கது. கட்சி முறையையும், காபினெட் முறையையும் விட்டு இடைக்காலத்திலாவது கமிட்டி முறையை ஏற்படுத்துவது இப்போதுள்ள ஏற்பாட்டைவிட அதிக நன்மை பயப்பதாக இருக்கும்.

### இரண்டாவது சபை

மேலும் நாடு முன்னேற வேண்டுமாயின், இரண்டாவது (மேல்) சபை தக்க அடிப்படையில் திருத்தி அமைக்கப்படவேண்டும். விவசாயம், பல்வேறு தொழில்கள், கலாச்சார, சமய ஸ்தாபனங்கள் முதலியவற்றிற்குப் பிரதிநிதித்துவம் வழங்கும் முறையில் அச்சபை இருப்பது அதிக நன்மை தரும். இதைத் தவிர அடிப்படை உரிமைகளைப்பற்றி சாசனம் அரசியல் அமைப்புத் திட்டத்திலேயே சேர்க்கப்படவேண்டும். மனித உரிமைகளையும் கலாசாரம், மொழி, சமயம் முதலிய உரிமைகளையும் பாதுகாத்து, வீண் அதிருப்திகள் ஏற்படாதவாறு இதன்மூலம் தடுக்க வேண்டும்.

இப்போதுள்ள நிலைமையில் அரசியல் அமைப்பிலே பாரதூரமான மாற்றங்களைச் செய்யமுடியாதிருக்கலாம். மற்ற சமூகத்தவரின் மனதை மாற்றி, அவர்களது நல்லெண்ணத்தைப் பெறவேண்டியது முதல்தேவை. ஜனநாயகத்திலே பிரசாரம் மூலம் மக்கள் மனதை வசப்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே மற்ற சமூகத்தவர் மேற்குறித்த முக்கியமான கொள்கைகளை ஒப்புக்கொள்ளும் வகையில் அவர்களது மனதை மாற்ற தீவிர முயற்சிகளைச் செய்வதால், தமிழர் உள்ளிட்டு நாடனைத்துக்கும் அது நன்மை பயக்கும்.

மற்றும் சில விஷயங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 1. தமிழ்க்குழந்தைகள் தமிழ் மட்டுமன்று சிங்களமும், ஆங்கிலமும் தெரிந்து கொள்வது விரும்பத்தக்கது. இந்துக் குழந்தைகள் சம்ஸ்கிருதமும் பயிலுவது நல்லதாகும். 2. தமிழ் மக்களின் கருத்துக்களை மற்றவர்களுக்கு எடுத்து விளக்கத்தக்க பத்திரிகைகள் தேவை. ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் தினசரிகள் இருந்து, தமிழரின் நிலைமையை விளக்கி, தமிழ் கலாச்சாரம். தமிழரின் வாழ்க்கை இலட்சியம் இவற்றையும் பரப்ப வேண்டும். 3. விவசாயம், கைத்தொழில் துறைகளில் தமிழர் அதிகம் ஈடுபட்டு, அபிவிருத்திகளைச் செய்யவேண்டும். 4. எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும் தமிழர் தங்கள் சமய, ஆத்மீக முன்னேற்றத்திற்கான வழிகளில் ஈடுபடவேண்டும். நாட்டிலுள்ள மற்றச் சமயத்தவருடன் சுமுகமாக வாழ்ந்து ஒத்துழைக்க அதிக இடமுண்டு.

தமிழிலே ''பதருத காரியம் சிதருது,'' ''நிறைகுடம் தளம்பாது'' என்ற விவேகம் நிறைந்த மூதுரைகள் உண்டு. இந்த சேவைகளின் கருத்துப்படி, நாம் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் நடந்து, நாட்டுக்கும், சமூகத்துக்கும் இறைவனுக்கும் மேலான தொண்டாற்றுவோமாக.

## மனச்சான்றுக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரண மனிதன். பின்தங்கிய மக்களோடும், கஷ்டப்படுகின்றவர்களோடுமே வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழித்தவன்'' என்று மிக அடக்கமாகக் கூறினர் திரு. கிரி. டாக்டர் ராஜேந்திர பிரசாத், டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் சாகிர் ஹுசேன் ஆகிய மூவரும் தம் பெயர்களின் முன்னல் 'டாக்டர் என்ற பட்டத்தைக்கொண்டிருந்தபோதிலும் காந்திய வழியைப் பின்பற்றுவதிலும் நாட்டை நல்வழியில் திருப்பி வழிகாட்டுவதிலும் அனுபவமும், அறிவும், உயர்ந்த மனப்பாங்கும் கொண்ட திரு. கிரி, அவர்களுக்கு எந்தவகையிலும் பின்னிற்பார் என்று கூறவியலாது

சில ஸ்தாபனங்கள் சில மனிதர்களால் வளருகின்றன. சில மனிதர்கள் சில ஸ்தாபனங்களால் வளர்கிருர்கள். திரு. கிரி போன்ற மனிதர்களுக்கு இந்த வாசகம் எப்படிப் பொருந்தும் என்றுதான் தெரியவில்லை.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வரி விளம்பரம்

தேவை

பிரசித்தி பெற்ற சோப் தொழிற்சாலைக்கு பிணைப் பணம் கட்டக்கூடியவிற்பனையாளர் (Van salesman) தேவை. விண்ணப்பிக்கவும். தரன் அட்ஸ், 72/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1366

தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பத்திரிகை விநியோகம் செய்வதற்கு சயிக்கிள் உள்ள பையன்கள் தேவை. நேரில் வரவும். விநியோக மனேஜர், 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1731

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org